EGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய பூமி

புதිය පූමි

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

PUTHIYA POOMI

சுற்று 09 | மே 2002 | பக்கம் 12 | விலை 10/- | சுழற்றி 47

# தொடர்ச்சியான யுத்த நிறுத்தம்! இடைக்கால நிர்வாக ஏற்பாடு!!

## புலிகள் மீதுள்ள தடைநீக்கம்!!

வாறான மீறல்கள் இடம்பெற்றாலும் ாடர்ந்தும் யுத்த நிறுத்தம் தேவை க்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ்படுத்த இடைக்கால நிர்வாக பாடுகள் செய்யப்பட வேண்டும். சிய இனப்பிரச்சினைக்கு அரசியல் வு காண்பதற்கான பேச்சுவார்த்தை ளை நடத்துவதற்கான பேச்சுவார்த்த நகளை நடத்துவதற்காக தமிழ்ழ டுதலை புலிகள் மீது இருக்கும்



டையை நீக்க வேண்டும். இவை வறும் சுலோகங்களும் இல்லை. தற் பாதைய சமாதான சூழலை குழப்பும் பந்தனை களுமல்ல. இவை இலங்கை ல் நிரந்தரமான சமாதானத்தை ற்படுத்துவற்கான அடிப்படையான தவைகளாகும்.

ண்மையான சமாதானத்தை நிலை ாட்ட விருப்பம் கொண்டுள்ள எவரும் பரினவாதத்தை திருப்திப்படுத்த டியாது. பௌத்த பேரினவாதிகளை ிருப்திபடுத்தும் வகையில் நடவடிக்கை ள் எடுக்கவும் கூடாது. பேசவும் கூடாது அதில் நேரத்தை செலவழிக்க வும் கூடாது. சமாதான முயற்சிகளை தற்போது எடுத்தவரும் பிரதமர் விக்கிரம மட்டுமன்றி. சமாதான முயற்சிகளுக்கு எதிரில்லை என்று கூறிவரும் ஜனாதிபதி சந்திரிகாவும் கவனத்தில் கொள்வது அவசியம். ஐ.தே.மு. அரசாங்கத்திற்கும் தமிழ்ழ விடுதலைப் புலிகள் இயக்க த்திற்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையிலுள்ள அரசியல் தீர்வு காண்பதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை தாமதிக்காமல் முன்னெடுக்க வேண்டும்.

அரசாங்கத்தரப்பும். புலிகள் தரப்பும் யுத்த நிறுத்தத்தையோ. புரிந்துணர்வு உடன் படிக்கையையோ மீறக்கூடாது மீறல்கள் ஏற்பட்டாலும் அவற்றை பிரதானமாக்காது அடுத்த கட்ட நடவடிக்கைக்காக ஆக்கபூர்வமாக அசைவது அவசியம். மீறல்கள் தொடர் பாக கண்காணிப்பு குழுவின் அறிக்கை களும் சிபாரிசுகளும். ஊடகக் செய்தி களும் எதிர்காலத்தில் மீறல்கள் ஏற்படா மல் இருப்பதாற்கான அழுத்தங்க ளேயன்றி அவை முடிவற்ற விவகாரங் களாகிவிடக் கூடாது அரசாங்கத் தரப்பில் மீறல் ஏற்பட்டால் அரசாங்கமும். நிதானமாக கருத்துக்களை தெரிவித்து ஆரோக்கியமற்ற இடத்திலிருந்து ஆரோக்கியமான இடத்திற்கு நகர்த்த லே நல்லது. மீறல்களோ மீறல்கள் பற்றி தெரிவிக்கப்படும் கருத்துக்களோ கஷ்டப்பட்டு ஏற்படுத்தப்பட்டுள்ள. சமாதான சூழ்நிலையை குழப்பிவிட காரணங்களாகி விடக்கூடாது இது புலிகள் மீது சுமத்தப்படும் மிறல்களுக்கும் பொருந்தும் அரசபடைகள் மீது சுமத்தப்படும் வாகரையில் இடம்பெற்ற படகு தாக்குதல் சம்பவத்திற்கும் பொருந்தும் இவ்வாறான மீறல் சம்பவங் களை அதிகம் சட்டை செய்யக்கூடாது என்பதற்காக அவை மீள மீள இடம்பெற வேண்டுமென்பதாகாது.

இராணுவ ஆளுமையின் கிழிருக்கும்



வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தி. புனரமைப்புகளையும் புனர்நிர்மானங்களையும் மேற்கொள்ள இடைக்கால நிர்வாக சபை அல்லது ஏற்பாடுகள் அவசியம். இடைக்கால நிர்வாக சபையை பேரினவாதிகளும். ஜே.வி.பியும் ஜனாதிபதி சந்திரிகாவும் எதிர்க்கிறார் என்பதற்காக 'புலிகள்தான் இடைக்கால நிர்வாக சபையை கேட்கிறர்கள். ஐ.தே.மு. அரசாங்கம் முடிவு செய்யவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ கூறுவது பொரு த்தமானதன்று இடைக்கால நிர்வாகம் எப்படி அமைய வேண்டும் என்பது பற்றி பேச்சுவார்த்தை நடத்தலாம். அபிப்பிராயங்களை கேட்கலாம்.

இடைக்கால நிர்வாகம் அமைய வேண்டுமா இல்லையா என்பது பற்றி குழப்பமடைய தேவை இல்லை. தேவை என்பதில் இரண்டு கருத்துக்கு இடம் கொடுக்கக்கூடாது. இராணுவத்தின் கட்டுப்பாடு புலிகளின் கட்டுப்பாடு என்பதிலிருந்து வடக்கு கிழக்கை மக்கள் பிரதிநிதிகளினது மக்களினது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர சிவில் நிர்வாகத்தை இடைக்கால நிர்வாக ஏற்பாடுகள் இன்றியமையாதன.

இடைக்கால நிர்வாக சபை போன்று புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு எதிர்ப்புகள் தெரிவிக்கப்படுகின்றன. புலிகள் மீதான சந்தேகங்களை எழுப்பிக் கொண்டு சமாதான முயற்சிகளுக்கு எதிராக செயற்படாமல் பரஸ்பர நம்பிக்கையை கட்டிவளர்க்க புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும். அதனால் பேச்சுவார்த்தைகள் சுமூகமாக நடைபெற வழி ஏற்படும். தடைநீடித்திருப்பது புலிகளுக்கு மட்டு மன்றி அரசாங்கத்திற்கும் அசௌகரிய மானதாகவே இருக்கும். தடை செய்யப்பட்ட இயக்கத்துடன் பேச்சு வார்த்தைகளை நடத்துவது நெறி முறையானதல்ல (illejitimate) என்று பேரினவாதிகள் கூறுவதற்கு சரியான பதிலிறுக்க வேண்டுமானால் தடை நீக்கப்பட வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. அதற்கு சேவை செய்யக் கூடிய தமிழ் புத்தி ஜீவிகளுக்கு பணத்தையும் பதவியையும் வழங்கியுள்ளதாக புதிய பூமிக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. தமிழ் தேசிய புத்திஜீவி ஒருவருக்கு ஒரு அரசசார்பற்ற நிறுவனமொன்றில் முக்கிய பதவி கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. அது அமெரிக்க சார்பான



அரசசார்பற்ற நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் தலைவராக தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களில் ஒருவர் இருந்தார் என்பதும் அவர் இப்போது உயிருடன் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று இந்திய மேலாதிக்க சக்திகளும் ஜே.வி.பி. சிஹல உருமய. பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகியவற்றிலுள்ள சிலர் மீது பலவிதமான செல்வாக்குகளை செலுத்தி வருவதாக அறிய முடிகிறது. சில தமிழ் அமைப்புகளையும் அச்சக்திகள் விட்டு வைத்தபாடில்லை.

எனவே அமெரிக்க எகாதிபத்தியமும் இந்திய மேலாதிக்க சக்திகளும் இன்றைய சமாதான சூழ்நிலையை அவைகளுக்கு தேவையானவாறு பயன் படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

இலங்கை நாட்டின் மீதும் சகல மக்கள் மீதும் நேசமுள்ள இலங்கையின் சிங்கள. தமிழ். முஸ்லிம். மலையகத் தமிழ் மக்களும். பறங்கியரும் வேடரும் அம்முயற்சிகளுக்கு இரையாக மாட்டார்கள் என்று இறுதி நம்பிக்கை வைக்கமுடியும்.

## சம்பள உயர்வு பற்றி தோட்டத் தொழிலாளர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சி

ம்பள உயர்வு பெற்றத்தர வேண்டு மன 'ஆறுமுகக் கடவுளிடமும்'. 'சந்திர சகரக் கடவுளிடம்' பாரம் செய்துவிட்டு நாட்டத் தொழிலாளர்கள். சும்மா ருந்துவிட இயலாது. சம்பள உயர்வு யத்தில் அந்த இரண்டுபேரும் புரிந்த ருகுதாள விளையாட்டுகள். தரிந்துவையே.

தாட்டக் கம்பனிகளுக்கும் தோட்ட தொழிற்சங்கங்களுக்குமிடையிலான தியா கூட்டு ஒப்பந்தம் யூன்மாதம் கைச்சாத்திடப்பட விருக்கிறது. தொழிற் சங்கங்களின் சார்பில் இ.தொ.கா.. இ.தே.தோ.. தொ.சங்கம். தோட்ட தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி என்பனவே கைச்சாத்திடும் அங்கிகாரம் பெற்றுள்ளன. அவற்றைவிட பல தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. தொழிற் சங்கங்களினதும் தொழிற் சங்கங்களில் அங்கம் வகிக்காதவர் களினதும் அபிப்பிராயங்களை கணக்கில் எடுக்காது ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அங்கீகாரம் பெற்ற மூன்று அமைப்பு களும் கடந்த காலங்களில் தான் தோன்றித்தனமாக நடந்து கொண்ட தனாலேயே தொழிலாளர் களின் சம்பள உயர்வை சரியாக உறுதி செய்து கொள்ள முடியவில்லை.

எனவே புதியதாக கையெழுத்திடப்பட வுள்ள கூட்டு ஒப்பந்தத்தில் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதி செய்வதில் சகல தொழிற் சங்களினதும் தொழிலாளர்களினதும் அபிப்பிராயங்கள் திரட்டப்பட வேண்டும். குறிப்பாக சாதாரண சம்பள உயர்வு களையும் உள்ளடக்கிய சம்பளத்திட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும். கூட்டு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் பற்றி தொழிற்சங்கங்கள் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

அதேபோன்று தோட்டக் கம்பனிகளின் சார்பில் முன்வைக்கப்படும் யோசனை களும் பகிரங்கம் படுத்தப்பட்டு அவை பற்றி பொது மக்களின் அபிப்பிராயங் களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

தோட்டக் கம்பனிகளின் சார்பில் சமர்ப் பிக்கப்படும் கூட்டு ஒப்பந்த வரைவிற்கு தொழிற் சங்கங்கள் சில சில்லறை திருத்தங்களை முன்மொழிந்து ஏற்றுக்கொள்ளப்படுவதே வழமையாக இருந்து வருகிறது. தொழிலாளர்களின் உரிமைகளை உறுதிசெய்யும் அடிப்படை விடயங்களை ஒப்பந்தத்தில் உள்ளடக்குவதில் தொழிற்சங்கங்கள் அக்கறை காட்டுவதில்லை. கூட்டு ஒப்பந்த வரைவு பற்றி ஆலோசனை கூறும் தொழிற்சங்க பிரதிநிதிகளின் அறிவீனம் அக்கறையீனம். கவலையீனம் என்பன மட்டுமன்றி நேர்மையீனத்தாலும் தான் அவ்வாறான நிலை ஏற்பட் டுள்ளது. தொழிற்சங்கத் தலைவர்களின் நேர்மையினமும் தான் தொழிலாளர்கள் தொடர்ந்து ஏமாற்றப்படுவதற்கு காரணமாகும்.

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 200 ரூபாவிற்கு மேலாக இருக்க வேண்டும் என்றே பொதுவாக கோரிக்கை விடுக்கப்பட்டுவிடுகிறது. கூட்டு ஒப்பந்தம் பற்றியும். சம்பள உயர்வு பற்றயும் தோட்டத்தொழிலாளர்களுக்கு பரவலாக அறிவூட்டும் வகையில் கலந்துரையாடல்கள் உட்பட பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். இவ்விடயத்தில் தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் இடையிலான இடைவெளி நீக்கப்பட வேண்டும். தலைவர்களையும் தோட்டக் கம்பனிகளையும் கேள்விக் குட்படுத்தும் அளவிற்கு தொழிலாளர் களுக்கு சம்கள உயர்வு. கூட்டு ஒப்பந்தம் பற்றி அறிவூட்டப்பட வேண்டும் தொழிலாளர் கள் தொழிற்சங்கங்களை வழிநடத்து பவர்களாக மாறவேண்டும்.

## நேபாள மக்கள் யுத்தத்தால் அமெரிக்கா அமைதி இழக்கும்

நேபாளத்தில் மக்கள் யுத்தத்தை முன்னெடுக்கும் நேபாள கம்யூனிஸ்ட் (மாவோ) கட்சிக்கு எதிராக உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் மிகவும் மோசமான பிரசாரங்கள் செய்யப்படு கின்றன. மாவோவாத கெரில்லாக் களை காட்டுமிராண்டிகளாகவும். கசாப்புக்கடைக்காரர்களாகவும் வர்ணித்து 'Time' போன்ற ஏகாதிபத்திய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு வருகின்றன. இந்தியாவிலும் அவர்களுக்கு எதிராக பிரசாரம் செய்யப் படுகின்றன. அவர்கள் நேபாளத்தின் மூன்றில் ஒரு பகுதியை அவர்களின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர்.

கெரில்லாக்களுக்கு எதிரான யுத்த அழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க நேபாள அரசாங்கம் பலவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்தியா. பிரிட்டன். அமெரிக்கா ஆகியவற்றிட மிருந்து இராணுவ உதவிகளை கோரியுள்ளது. கெரில்லாக்கள் யுத்த நிறுத்தம் பற்றி அறிவித்திருந்தபோதும் அதனை நேபாள அரசாங்கம் நிராகரித்து விட்டது. பிரிட்டன் உதவிகளை வழங்க சம்மதம் தெரிவித் துள்ளது. இந்தியாவும். அமெரிக்காவும் கெரில்லாக்களை அவற்றிற்கு சார்பாக பயன்படுத்த முடியாது என்பதால் நேபாள அரசின் கெரில்லாக்களை அழிக்கும் நடவடிக்கைகளுக்கு உதவும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் 'அல்ஹெயிடாவுடன்' மோதிக் கொண்டே அமெரிக்காவும் காஸ்மீரின் சுயநிர்ணய உரிமையை மறுப்பதால் இந்தியாவும். காஷ்மீர் பிரச்சினையை தனக்கு சார்பாக பயன்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ள பாகிஸ்தானும் அமைதி இழந்துள்ளன.

நேபாள மாவோ கெரில்லாக்காளுடனும் மோதிக்கொண்டு அமெரிக்காவும், இந்தியாவும் பிரிட்டனும் மேலும் அமைதியை இழக்குமேயன்றி சமதர்ம கொள்கையை அடிப்படையாகக் கொண்ட உண்மையான மக்கள் யுத்தத்திற்கு இறுதியில் வெற்றியன்றி தோல்வியில்லை வரலாறு மீண்டும் மீண்டும் நிரூபிக்கும்.

www.padippakam.com



# விலைகள் இறங்காத யாழ்குடா நாடு

"ஊருக்கு ஒரு மழை நமக்கு இரண்டு மழை" என்பது முதுமொழி. யாழ் குடா நாட்டு பொருட்களின் விலைகளுக்கு இது பொருந்தும். கடந்த தேர்தல் காலத்திற்குப் பின் வடக்கு கிழக்கில் சமாதான சூழலே நிலவி வருகின்றது. அத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின் ஏற்பட்ட யுத்த நிறுத்தம் மட்டுமன்றி ஏ9 பாதையும் திறந்து விடப்பட்டுள்ளது. இத்தனை நடைபெற்று வந்த போதிலும் குடா நாட்டின் அத்தியாவசியப் பொருட்களினதும் ஏனையவற்றினதும் விலைகள் இறங்குவதாக இல்லை. பொருட்களை மொத்த இறக்குமதி செய்யும் பெரும் வர்த்தகர்களே விலைகளைத் தீர்மானிக்கிறார்கள். எரிபொருட்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விநியோகிக்கின்றது. வர்த்தகர்கள் தாம் கப்பல் கட்டணம் நேரடி மறைமுக வரிகள் செலுத்துவதாகக் கூறி விலைகளைக் குறைக்க மறுக்கிறார்கள். இவர்களை விட ப.நோ.கூ. சங்கங்கள் தனியார் துறையை விட மக்களிடம் பணம் பறிப்பதில் இறங்கியுள்ளது. கூட்டுறவு என்ற பெயரில் அவர்களும் மொத்த இறக்குமதியையும் சில்லறை வியாபாரத்தையும் ஓகோ என்று நடாத்துகிறார்கள். ஒன்றில் குறைத்து மற்றொன்றில் கூட்டி விற்பனை செய்யும் தந்திரத்தையே கூட்டுறவின் பெயரில் செய்கிறார்கள். அத்துடன் தரமற்ற காலாவதியான பொருட்களை மக்களின் தலைகளில் சுமத்தி விடும் கைங்கரியத்தையும் இவர்கள் வெற்றிகரமாகச் செய்து வருகிறார்கள்.

யாழ் குடாநாட்டில் பெற்றோல் 77 ரூபா முதல் 95 ரூபா வரை மண்ணெண்ணை 23-26 வரை விற்பனை செய்யப்படுகிறது. அரிசி 38-40 ரூபா வரையும் சீனி 38-40 ரூபாவரை விலை போகின்றது. கோதுமை மா 23-26 வரை பாண் 14 ரூபா வரை ஏனைய அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கேட்பார் இன்றி கொள்ளை லாபத்தில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையின் சீரழிவால் நாட்டில் சகல பொருட்களினதும் விலைகள் உயர்ந்துள்ளன. அதே பொருட்கள் யாழ் குடா நாடு செல்லும் போது பல வழிகளாலும் விலை ஏற்றத்திற்கு உள்ளாக்கப்படுகின்றன. ஏ9 பாதையால் கொண்டுவரப்படும் பொருட்களுக்கு புலிகள் இயக்கத்தால் வரி விதிக்கப்படுகிறது. அவ்வாறே அங்கிருந்து தெற்கு நோக்கி செல்லும் பொருட்களுக்கு வரி அறவிடப்படுகிறது. இதனைச் சட்டாக வைத்து வர்த்தகர்கள் வியாபாரிகள் தமது கைவரிசையைக் காட்டி விலைகளை உயர்த்திக் கொள்கின்றனர்.

சமாதான சூழல் வந்தால் என்ன? தரைவழிப்பாதை திறந்தும் என்ன? நாளை இடைக்கால நிர்வாகம் வந்தால் தான் என்ன? எங்களுக்கு விலை ஏற்றம் ஏற்றம் தான். விடிவே கிடையாது என்றே மக்கள் ஏங்குகின்றனர். நாடே விலையேற்றத்தால் திணறுகிறது. அதே வேளை நாமோ இரட்டை சுமை விலையேற்றத்தால் அமுங்கி வருகின்றோம் என்றே வடபகுதி மக்கள் குமுறுகிறார்கள். எம்.பி. மார்களை மக்கள் தேடுகிறார்கள். அவர்களோ சாதாரண மக்களின் கண்களில் படாது மறைந்து மறைந்து திரிகிறார்கள். விலைள் இறங்கிய குடாநாட்டை எப்போது காணப் போகிறோம் என்பது மக்களின் உள்ளக் கிடக்கையாகும்.

# வவுனியா நகர கோழிக்கடை உடைப்பு பொது மக்கள் விரோத நடவடிக்கை

வவுனியாவில் பொது நிறுவனங்களின் செல்வாக்கு மிக்கவர்கள் சுருட்டிக் கொள்வது இயல்பான ஓர் விடயமாகும். நகரசபை, பாடசாலைகள், கல்வியல் கல்லூரி போன்றவைகளின் காணிகள் ஏற்கனவே இப்படியான அபகரிப்புகளுக்கு உள்ளாகிய பழைய கதைகளாகும். கடந்த 10.03.2002 அன்று இரவு நகரசபையால் ஆறு லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கோழிக் கடைகள் தனி ஒருவரின் விருப்பு வெறுப்புக்காகத் தகர்க்கப்பட்டுள்ளது. நகரசபை தனது சொந்தக் காணியில் வரியிறுப்பாளர்களான பொது மக்களின் நன்மை கருதி கட்டியெழுப்பிய கட்டிடத்தை இழந்து நிற்கிறது. தனி ஒரு நபர் தனது சமூக அடையாளத்தை வைத்து வன்னிப் புனர்வாழ்வு அமைச்சில், செல்வாக்குச் செலுத்தி தனது சுயநலத்தைப் பாதுகாத்துக் கொள்வது பொது மக்கள் விரோதம் அல்லவா?. அமைத்த கடைகள் நடாத்தி வரும் காணியும் முன்பு நகரசபைக் காணியாக இருந்த தென்றும் பொது மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

இக் கோழிக்கடைத் தகராறும் இடிப்பம்? சம்மந்தமாக நகரசபை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்து அதற்குரிய விளக்கத்தை துண்டுப்பிரசுர மூலம் தெளிவுபடுத்திருந்தனர். முன்பு நகரசபையை நிர்வகித்த புளோட் இயக்கமும் தமது நிலைப்பாட்டை துண்டுப் பிரசுரத்தின் ஊடாகக் கூறியிருந்தது.

சம்மந்தப்பட்ட அமைச்சர் அதிகாரிகள் மூலம் உண்மையான தகவல்களை அறிந்த பின்பும் பக்கசார்பாக நடந்து கொண்டுள்ளனர் என்பதே பொது அபிப்பிராயமாகும். இவ்வாறு செல்வாக்கு மிக்க ஒவ்வொருவ்ரும் காணிகளை அத்துமீறி அபகரிக்கவும் அதற்கு ஆளும் கட்சி சார்பான ஆதரவும் கிடைக்குமாயின் வவுனியாவின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகின்றது என்ற அச்சத்தையே தோற்றுவித்துள்ளது. இதனால் சமூகங்களிடையேயான வீணான தப்பெண்ணங்களும் மோதல்களுமே தோன்ற வழி ஏற்படும். பணம் செல்வாக்கு அதிகாரம் அந்தஸ்து மிக்கவர்களே இனசமூக முரண்பாட்டிற்கும் மோதலுக்கும் காரண கர்த்தாக்களாக இருக்கிறார்கள் என்பதற்கு வவுனியா நகரசபையின் கோழிக்கடை உடைப்பு சாதாரண உதாரணமாகும்.

செ. சிவநாதன் - வவுனியா

# வாரிக்குட்டியூர் மக்களின் வேதனை

வவுனியா மாவட்டத்திலிருந்து 12கி.மீ. உள்ளே பற்பல விபரீதங்கள் நடைபெறுகின்றன. இப்பிரதேசம் வாரிக்குட்டியூர். இவ்வூரிலுள்ள பூமடுக்குளம் பகுதியில் 100ஏக்கர் வயல் காணி உண்டு. இதனை இங்குள்ள மக்களே முதலில் விவசாயம் செய்தார்கள். அதன்பின் "ரெலோ" உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் வயலை பிடித்து பண வருவாயைத் தேடிக்கொள்கிறார்கள்.

இதனை எத்தகைய அரசியல் வேலை என்று எடுத்துக்கொள்வது என்று தெரியவில்லை. இவ்வாறிருக்க 1999ம் ஆண்டு மின்சார கம்பங்கள் 4, 5, 6, 29 ஆகிய பகுதிகளில் போடப்பட்டது. அதன் பின்னர் சில பிரச்சினைகள் காரணமாக மின்சாரம் வழங்கவியலாத சூழ்நிலை எற்பட்டது மீண்டும் சமாதான சூழ்நிலையை பயன்படுத்தி 2001 மார்கழி பிற்பகுதியில் எல்லா இடங்களிலும் மின்சாரம் வழங்கப்பட்டது. ஆனால் 4ம் யூனிற் பகுதியில் அதிகளவு சனப்பிளக்கம் உள்ள இடத்தில் மின்சார கம்பங்கள் போடவில்லை மின்சாரமும் வழங்கவில்லை.

இந்தச் செயல் அந்த மக்களுக்கு பெரும் கவலைக்குரிய வேதனையான விடயமாக அமைகின்றது. தமிழ் பாராளு மன்ற உறுப்பினரும் பிரதேச செயலாளரும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை இது மிகவும் கவலைக்குரியது! இந்த லட்சணத்தில் நடைபெறவுள்ள உள்ளுராட்சி தேர்தலில் வேட்பாளரை நிறுத்திியிருப்பது வேடிக்கைக்குரிய விடயமாகும்.

# மக்களின் போராட்டத்தினால் ஏலவிற்பனை ஒத்திவைக்கப்பட்டது

பொதுமக்களின் ஐக்கியப்பட்ட ஆர்ப்பாட்டத்தை அடுத்து இராகலையில் நடைபெறவிருந்த ஏல விற்பனை ஒத்திவைக்கப்பட்டது.

மாணிக்க அகழ்விற்காக இராகலை நடுக்கணக்கு தோட்டத்தில் முன்றே முக்கால் ஏக்கர் காணியும், இராகலை பணியக்கணக்கு தோட்டத்தில் 94 பேர்ச்சஸ் காணியும் மே மாதம் 4ம் திகதி காலை 9மணிக்கு ஏலவிற்பனைக்கு விடப்படவிருந்தது. இராகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் அந்த ஏலவிற்பனை நடைபெறவிருந்தது.

அதற்கு தொடர்ச்சியாக மேற்படி இரண்டு தோட்டங்களின் தொழிலாளர்களும் எதிர்ப்பை தெரிவித்து வந்தனர். வேலைநிறுத்தப் போராட்டத்திலும் ஈடுபட்டுவந்தனர். அவற்றை கணக்கில் எடுக்காமல் மத்துரட்ட தோட்டக்கம்பனி இலங்கை மாணிக்கக்கல் கூட்டுத்தாபனத்துக்கூடாக ஏலவிற்பனை செய்ய திர்மானித்திருந்தது.

மே மாதம் 4ம் திகதி இராகலை நகரிலிருந்து இராகலை தமிழ்மகா வித்தியாலயத்திற்கு செல்லும் வீதியை மறித்து ஏலவிற்பனையாளர்களை மேற்படி வித்தியாலயத்திற்கு செல்ல விடாது பொதுமக்கள் மறியல் போராட்டம் செய்தனர். அப்போராட்டம் காலை 8மணி முதல் நன்பகல் 12 மணி வரை நீடித்தது. அதனால் ஏலவிற்பனையாளர்கள் ஏலவிற்பனையை கால வரையறையின்றி ஒத்திவைப்பதாக கூறிவிட்டு அவ்விடயத்திலிருந்து சென்றுவிட்டனர்.

அப்போராட்டத்தில் தொழிற்சங்க. அரசியல் கட்சி பேதமின்றி தோட்டத் தொழிலாளர்கள். ஆசிரியர்கள். மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இப்போராட்டத்தில் புதிய ஜனநாயக கட்சி தோழர்கள் வழமைபோல் முக்கிய பங்கெடுத்து ள்ளனர்.

வெகுஜனப் போராட்டங்களினூ டாகவே மக்கள் அவர்களுடைய உரிமைகளை உறுதி செய்து கொள்ள முடியும் என்பதற்கு இப் போராட்டம் இன்னொரு எடுத்துக் காட்டாகும். மேற்படி மக்களின் ஐக்கியப்பட்ட போராட்டத்தை தங்களது சாதனையாக காட்டிக் கொள்ள சில தொழிற்சங்கத் தலைவர்கள் முயற்சிகளை எடுத்தனர்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அமைச்சர் சொக்ஷியிடம் பேச்சு வார்த்தை நடத்தி மேற்படி ஏல விற்பனையை இடை நிறுத்தியதாக ஒரு வானொலி அறிவித்தது. போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய ம.ம.மு. பொதுச்செயலாளர் நடவடிக்கைகளை எடுத்தாகவும் இன்னொரு செய்தி ஒலிபரப்பப்பட்டது பொது மக்களின் தொடர்ச்சியான எதிர்ப்பு போராட்டத்தை அடுத்தே மேற்படி ஏலவிற்பனை ஒத்திவைக்கப்பட்டது என்பதே உண்மை. பொதுமக்களின் ஐக்கியப்பட்ட போராட்டம் பற்றி தொழிற்சங்கத் தலைவர்கள் மேற்படி அறிக்கை விடுவது ஆரோக்கியமானதல்ல அவற்றை நிராகரித்து தொடர்ந்து ஐக்கியப்பட்டு செயற்படுவதன் மூலமே இராகலை நடுக்கணக்கு. பணியக்கணக்கு மக்கள் அவர்களின் போராட்டத்தில் வெற்றியடைய முடியும்.

ஒத்திவைக்கப்பட்ட ஏலவிற்பனை மீண்டும் நடத்தப்படலாம். என்பதை மனதில் கொண்டு போராட்டத்தை திட்டமிட்டு முன்னெடுப்பது அவசியம்.

# நாலு நடக்கும் உலகிலே நற்குணண்

## நன்றி கெட்ட பாரம்பரியம்

தமிழீழ விடுதலை இயக்கங்களின் தொடக்க நிலையில் அவர்களுக்கு இராணு பயிற்சி அளித்தல் உட்படப் பல வகையில் மனமுவந்து உதவிய அமைப்புக்க பலஸ்தீன விடுதலை இயக்கங்கள் முக்கியமானவை. இன்றும் கூட பிலிப்பினி கம்யூனிஸ்ட்டுகளாகட்டும், குர்திய விடுதலை இயக்கமாகட்டும், தென்னாபிரிக் கறுப்பு இன விடுதலை இயக்கங்களாகட்டும் எல்லாமே தமிழ் மக்களின் தே இன விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து வந்துள்ளன. எனினும் அவர் யாராவது நெருக்கடியில் உள்ள போது நமது விடுதலை வீரர்கள் யாரா அவர்களுக்கு ஆதரவாக ஒரு அறிக்கையாவது விட்டதுண்டா?

அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் செய்கிற அட்டூழியத்தையும் மத்திய கிழக் அமெரிக்காவின் கொடுமைகளையும் கண்டிக்கத் தயங்குகிற ஒரு சமூகத்து விடுதலை ஒரு கேடா என்று உலகின் ஒடுக்கப்பட்ட மக்கள் நம்மைக் கே மாட்டார்களா?

## இந்துத்துவ ஒட்டகமும் தமிழீழக் கூடாரமும்

குஜராத்தில் பாரதிய ஜனதா ஆட்சியின் ஆசியுடன் முஸ்லிம்கட்கு எதிரான வன்மு தொடர்கிறது. இதன் விளைவாக பாரதிய ஜனதாவின் மிதவாதத் தலைவர்க எனப்படுவோரின் சொரூபம் வெளியாகிவிட்டது. இதன் தொடர்ச்சியாக எதிர்வ ஆண்டுகளில் பாராளுமன்றத் தேர்தல் அரசியல் மதவாதம் தலைவிரித்து ஆ என்பது உறுதி. இது இந்தியாவின் பிரச்சனை மட்டுமல்ல.

இலங்கையிலும் தமிழ் தேசியவாதத்தினுள் இந்துத்துவத்தை நுழைக்கும் முய நடைபெற்று வருகிறது. விஸ்வ ஹிந்து பரிஷத் இங்கு ஏற்கனவே ஆட்களை திரட்டி அமைப்புக்களை நிறுவியுள்ளது. பிரபாகரனின் பத்திரிகையாளர் மாநாட்டுக்கு ஆளனுப்பி ஆசி கூறி இருக்கிறது. இது நல்ல அடையாளமல்ல.

பௌத்த சிங்களப் பேரினவாதிகளின் கவனம் இப்போது கிறிஸ்தவ (குறிப்பா புரட்டஸ்தாந்து) மதத்தவர் மீது குவிகிறது. தமிழ் மக்களைத் தவறாக வழி நடத்தினோ கிறிஸ்தவ தலைவர்களே என்ற வாதம் தமிழர் நடுவில் அவர்களா நுழைக்கப்படுகிறது.

இந்த இந்து-பௌத்த ஐக்கியம் முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையு பகைவர்களாக்கி முடிவில் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தையே உருவாக்கு இது பற்றி இந்துக்கள் எனப்படுவோர் கவனமாக இருக்க வேண்டும்.

## மறதி மீது தடை விதிப்போமா?

புலிகள் மீதான தடையை நீக்குவது பற்றி ஆளுக்காள் இழுபடுகிறார்கள். புலிகளை தடை செய்யும் யோசனை முதலில் யாரால் முன் வைக்கப்பட்டது என்பது பலருக்கு மறந்து போய்விட்டது. தலதா மாளிகை தாக்கப்பட்ட பின்பு அது பற்றி என்ன செய்வதென்ற தீர்மானம் அரசாங்கத்திடம் இருக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான யூஎன்.பியே புலிகளைத் தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, ஆர்ப்பாட்டம் நடத்தியது. ரணில் இது தொடர்பாக சொன்னவை இன்று யாருக்கும் நினைவில் வராது. ஏனென்றால் இது எல்லாவற்றையும் பூசி மழுப்பும் காலம். கடந்த கால நிகழ்வுகளை நினைவு படுத்த விரும்பாத காலமாகும்.

## பேராசிரியச் சின்னத்தனங்கள்

பிரபாகரனே இப்போது வடக்கிலிருந்து முஸ்லிம்களை விரட்டியது தவறு என்று ஒப்புக் கொண்டுவிட்டார். இதற்கான சாடைகள் சில ஆண்டுகள் முன்னமே தோன்றிவிட்டன. என்றாலும் சில பேராசிரியர்களும் பேராசிரியக் குஞ்சுகளும். முஸ்லிம்களை விரட்டியதை நியாயப்படுத்தி தொடர்ந்து எழுதியும் பேசியும் வந்திருக்கிறார்கள். இப்போது என்ன சொல்லுவார்கள்?

ஆய்வறிவாளர் என்பதன் பிரதான தகுதியே எதையும் ஆதார பூர்வமாக நிறுவி நிரூபிக்கும் ஆற்றல்தானே. பூமி தட்டை என்று காலையிலும் உருண்டை என்று பகலிலும் சட்டி வடிவமானது என்று மாலையிலும் மூன்றுமே சரி என்று இரவிலும் முழுமையான ஆதாரங்களுடன் நிரூபிக்க வல்லவர்கள் அல்லவா. இதனால் தான் இவர்கள் என்.ஜி.ஓக்கள், சி.ஐ.ஏ. றோ போன்ற 'மனிதாபிமான' அமைப்புக்களுக்குச் செல்லப்பிள்ளைகளாக இருக்க இவர்களுக்கு முடியுமாகிறது.

## தேசியவாத முயல்களுக்கு எப்போதுமே மூன்று கால்கள்

முஸ்லிம் தேசம் என்கிற கருத்தைக் கடுமையாக வற்புறுத்தி வந்தது ஒரு குறிப்பிட்ட தமிழ்த் தேசியவாதக் குழு. லண்டனில் இருந்து கொண்டு தமிழீழத்தைப் பிரகடனம் செய்கிற இந்தக் கூட்டம் தேசம் என்றால் என்ன தேசிய இனம் என்றால் என்ன என்ற தெளிவில்லாமல் முஸ்லிம் தேசம் பற்றிய ஒரு கருத்தை உருவாக்கி ஊக்குவித்தது. இந்தத் தேசம், தமிழ்ப் பேசும் முஸ்லிம்களை மட்டுமே உள்ளடக்குவது என்றால் கூட முஸ்லிம்களில் பத்திலொரு பங்கினரை உள்ளடக்கக் கூடிய ஒரு பிரதேசம் தேறாது. முஸ்லிம்களுக்கான தென்கிழக்குத் தனிமாவட்டம் பற்றி ஏற்கிறவர்கள் கூட இது முஸ்லிம்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று ஏற்கமாட்டார்கள். இவ்விடயத்தில் புதிய ஜனநாயக கட்சி முன்வைத்துள்ள தெளிவான நிலைப்பாட்டை ஏற்பதற்கு தமிழ், முஸ்லிம் தேசியவாதிகளது தன்மானம் இடந்தராது. எனவே மூன்றுகால் முயல்களாகவே பிடித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்தக் குழப்பம் முஸ்லிம்களை ஒற்றுமைப்பட முடியாமல் மறிக்கிறது என்பது பற்றி யாருக்கு அக்கறை?

## நம்பினால் நம்புங்கள் : "முஸ்லிம்களின் நண்பன் வாஜ்பாய்"

தான் முஸ்லிம்களையோ இஸ்லாத்தையோ பற்றிப் பகைமை உணர்வே இல்லாதவர் என்று வாஜ்பாய் கோவா மாநிலத்தில் நடந்த பாரதிய ஜனதா மாநாட்டில் சொல்லியிருக்கிறார். அதே மாநாட்டில் முஸ்லிம்கள் இந்துக்களைப் போலன்றி மற்றவர்கள் மீது தமது நம்பிக்கையை திணிப்பவர்கள் என்று கண்டித்தும் பேசி உள்ளார்.

பூனைக்கு எலியிடம் பகைமை இல்லை என்றும் எலிகள் கீச்சுக் கீச்சென்று கத்துவதை மட்டுமே பூனைகளால் ஏற்க முடியாமல் உள்ளது என்றும் நம்ப முடியுமானால் வாஜ்பாய் சொன்னதையும் நம்பலாம்.

படிப்பகம்

www.padippakam.com



# சிங்கள ஆங்கில ஏடுகளின் பேரினவாத விஷமத்தனம்

ொழும்பில் இருந்து வெளிவரும் ்கள ஆங்கில நாள் வாராந்த தழ்கள் மிகமோசமான பேரினவாதப் ச்சாரத்தில் இறங்கியுள்ளன. இதில் ஐலண்ட் குறூப் பத்திரிகைகள் ளாந்தம் தமது சுருதியைக் கூட்டிக் காண்டே வருகின்றன. அதே ான்று ஐக்கிய தேசயக் கட்சி ஆதரவு ரம்ஸ் குறூப் பத்திரிகைகளும் ாதை பிடி என்றே எழுதுகின்றன. வை ரணிலைத் தாக்காது புலிகளை சைபாடிப் பயங்கரவாதிகளாக்குவதில் ன் நிற்கின்றன. லேக்கவுஸ் திரிகைகள் அரசாங்கத்திற்கு ஆதரவு ான்றே எழுதிய போதிலும் கருத்து லைக் களங்களில் இனவாதத்தை ட்டத் தவறுவதில்லை.

டு துண்டாடப்படப் போகின்றது. ிகளிடம் வடக்கு கிழக்கு ஒப்படைப்பு. ற்றயாட்சிக்கு வேட்டு வைக்கப்படு றது. புலித் தடை நீக்கம் வேண்டாம். டைக்கால சபை தனிநாட்டிற்கு ன்னோடி. பிரபாகரன் தனது ன்பதால் யுத்தமே ஒரே வழி என்பன ான்ற கருத்துக்களையே இச் சிங்கள ங்கிலப் பத்திரிகைகள் தமது ண்ணோட்டமாகத் கொண்டு எழுதி ருகின்றன.

லங்கை நாட்டை இன்றைய ரினவாத ஒடுக்குமுறை யுத்தத்திற்கு ழுத்துச் சென்றதில் இந்த சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளின் பங்கும் பணியும் பாரியது. தீர்வுக்கான முயற்சி களின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தீர்வை மறுத்து பொய். அபாண்டம் திரிப்பு என்பனவற்றின் மூலம் இனவாதத்தைத் தூண்டி அதன் மூலம் லாபமடைந்து கொள்வார்கள். இத் தினசரி - வாராந்தப் பத்திரிகைகளின் உரிமையாளர்கள் சாதாரண பேர் வழிகள் அல்லர். நிலவுடமை வழிவந்த முதலாளித்துவ ஆளும் வர்க்க சக்திக ளேயாவர். இவர்கள் ஒரே நேரத்தில் இரண்டு விடயங்களை சாதித்துக் கொள்கிறார்கள். ஒன்று, பத்திரிகை களின் மூலம் பெரும்லாபத்தை அடைந்து நிற்கின்றனர். இரண்டாவது இனப்பிரச்சினையைத் தீரவிடாது நச்சுத் தனமாக கருத்துக்களை மக்களது மனங்களில் இருத்திக் கொள்கிறார்கள்.

வடக்கு கிழக்கில் இடம் பெறும் ஒரு சிறு சம்பவத்திற்கு உடனே தலை கால் வால் நகம் வைத்துப் புலிகள் பூச்சாண்டி கிளப்பி விடுவார்கள். அதேவேளை ஆயுதப்படைகளின் கொடூரச் செயல்களை மிக மிக அமர்த்தி எழுதி ஒரு மூலையில் போடுவார்கள் அல்லது போடாமலே விட்டு விடுவார்கள். இவற்றுக்கு பெயர் தான் பக்கம் சாராமை நடுநிலை ஜனநாயக ஏடுகள் என்பதாகும். இது தமிழ்ப் பத்திரிகை களுக்கும் பொருந்தக் கூடுமாயினும் ஒப்பீட்டளவில் ஆங்கில சிங்களப் பத்தரிகைகளே மிக மோசமானவை யாக இருந்து வருகின்றன.

சிங்கள மக்கள் மத்தியில் கருத்தையும் எண்ணப் போக்குகளையும் உருவாக்கு வதில் முன் நிற்கும் இச்சிங்கள ஆங்கில பத்திரிகைகள் தமது பேரின வாத விஷம த்தனப் பிரச்சாரங்களைக் கைவிடாத வரை இனப்பிரச்சினைத் தீர்வு இமாலயச் சாதனையாகவே இருந்து வரும் என்பதே உண்மையாகும்.

# மலையகத்தின் ஏகப் பிரதிநிதி யார்?

மலையகத்தின் இரண்டு தொழிற்சங்க அரசியல் தலைவர்களான ஆறுமுகம் தொண்டமானும் பெரியசாமி சந்திர சேகரனும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை வன்னி சென்று சந்தித்து திரும்பினார் கள். அதன் மூலம் தமது தகடு தத்தங் களை மறைப்பதற்கு ஒரு திரையை விரித்தார்கள். போட்டி போட்டுக் கொண்டு தாமே பிரபாகரனின் நெருக்கமான புள்ளிகள் என்பதை வெளிக் காட்டினர். இது போதாதென்று கடந்த மேதினத்தில் ஆறுமுகம் உரையாற்றும் போது தானே முழு மலையகத்திற்கும் ஏகப்பிரதி என்பதை பிரபாகரன் ஏற்றுக் கொண்டு ள்ளதாக கதை அவிட்டு விட்டுள்ளார்.

தனக்குத் தானே மலையக ஏகப்பிரதி நிதிப்பட்டத்தை சூட்டிக் கொள்ள சந்திரசேகரன் சும்மா விடுவாரா? வடக்கு கிழக்கு ஒரே குடையின் கீழ் வந்தது போன்று மலையகமும் ஒரே குடையாகத் தனது தலைமையின் கீழ் அதாவது தன்னை ஏகப்பிரதிநிதியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் எனச் சந்திரசேகரன் மேதினத்தில் கூறி உள்ளார். அத்துடன் மேதின ஊர்வலத்தில் "வடக்கில் பிரபா, மலையகத்தில் சந்திரா" என கோஷமிட வைத்தும் உள்ளார் சந்திரசேகரன். இவற்றை நோக்கும் போது மலையக மக்களுக்கு உருப்படியாக எதையும் செய்யாது அதற்கான எந்தவொரு இயக்கத்தையும் நேர்மையாக நடத்தாது ஒரு சிறு துளி இரத்தமும் சிந்தாது ஏகப்பிரதிநிதி யார் என்ற போட்டியில் ஆறுமுகமும் சந்திரசேகரனும் இறங்கி நிற்கிறார்கள். உண்மையில் மலையக மக்களை ஏமாற்றி அவர்களது தலை களில் மிளகாய் அரைப்பதற்றே இவ் இருவருக்கும் ஏகப் பிரதிநிதிகள் என்ற பட்டம் தேவைப்படுகிறது. அதிலும் யார் என்பதே போட்டி. மலையக மக்கள் எத்தனை காலம் தான் இந்த ஏமாற்றைப் பொறுத்துக் கொள்வர்.

# சிறந்த வரவு செலவுத் திட்டமாம் பாராட்டுகிறது ஐ.எம்.எவ்.

ஐக்கிய தேசிய முன்னணி சமர்ப்பித் துள்ள 2001-2002 வரவு செலவுத் திட்டம் சிறந்ததும் உற்சாகம் தரக் கூடிய ஆரம்பம் என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எவ்.) இலங்கை வதிவிடப் பிரதிநிதி கலாநிதி நமீம் உல் ஷக்யூ கூறி உள்ளார். இதன் மூலம் திருப்தியடைந்துள்ள மேற்படி சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்க ஒப்புக்கொண்டு நிலுவையாக நின்ற 250 மில்லியன் அ.டொலரை வழங்க முன்வந்துள்ளது. கடந்த அரசாங்க காலத்தில் 60 மல்லியன் அ.டொலர் மட்டுமே வழங்கியது. இப்போது மிகுதி முழுவதையும் பகுதி பகுதியாக வழங்க மனமுவந்துள்ளது. சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பர். ஏற்கனவே பொருளதார சீர்திருத்த அமைச்சரும் அமெரிக்க விசுவாசியுமான மிலிந்த மொறகொட சர்வதேச நாணய நிதியத்தின் தலைமையகத்தில் விரிவாகப் பேசி ஆலோசனைகள் கட்டளைகள் பெற்று வந்துள்ளார். தனியார் மயம் இதில் முக்கியம் பெறுகின்றது. செய்ய மாட்டோம் செய்யமாட்டோம் எனக் கூறிக் கொண்டே பகுதி பகுதியாகத் தனியார் மயப்படுத்துவதே 77ல் இருந்து இன்றுவரை நடைபெறும் செயல் முறையாகும். இந்த யூஎன்.பி ஆட்சி அமெரிக்காவின் நம்பிக்கை பெற்ற விசுவாசிகளை நிறையக் கொண்டிருப்ப தால் வெள்ளை மாளிகை பெருளாதார அரசியல் ராணுவ நிலைகளின் மீது மிகுந்த நம்பிக்கையுடன் இருந்து வருகின்றது. ஆனால் சர்வதேச நாணய நிதிய வழிகாட்டலால் வரும் சகல பொருளாதாரச் சுமைகளையும் சுமந்து மேன்மேலும் வாழ்வை இழக்கப் போகி றவர்கள் சாதாரண மக்களேயாவர்.

# சங்கரியாருக்கு ஏன் சூடு பிறக்கிறது?

ஜெயலலிதாவையோ வேறு எந்த இந்தியத் தலைவரையோ புண்படுத்தும் காரியத்தில் ஈடுபட வேண்டாம் என தமிழர் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி தமது உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் நலன் விரும்பிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். தமது தாய் நாடு இந்திய என்பதைச் சுட்டிக்காட்டி இந்தியத் தலைவர்களின் மனதைப் புண்படுத்தி அசௌகரியத்திற்கு உள்ளாக்குவது கூடாது எனவும் அறிவுறுத்தியிருக்கிறார். இதைவிட அடிமை விசுவாசக் கருத்து வேறு எதுவுமாக இருக்க முடியாது. என்ன சங்கரியார் மௌனமாகியுள்ளார் என்றே சிலர் யோசித்துக் கொண்டி ருக்க இப்படி ஒரு கருத்தை ஆணை யாகப் பிறப்பித்துள்ளார் அவர். இதனைப் பார்க்கும் போது இன்னும் என்ன என்ன விடயங்களைக் கூறப் போகிறாரோ என்று ஆதரவாளர்கள் சிலர் ஆழ்ந்த ஆதங்கத்தில் உள்ளனர். இந்தியாவின் மேலாதிக்கத்தின் தலையீட்டுக்கு உரிய ஆட்கள் இங்கு இருக்கிறார்கள் என்பதைச் சங்கரியார் தருணம் பார்த்து வாயால் நிரூபித் துள்ளார். கூட்டமைப்பு கூட்டணித் தலைவர்களுக்கு இந்திய விசுவாசம் மட்டுமல்ல அங்கு முதலீடுகள் வீடுகள் குடும்பங்கள் சுகபோகங்கள் நிறைய உண்டு. அதிலிருந்தே அவர்களது கொள்கை நிலைப்பாடு பிறக்கிறது. அதற்கு சங்கரியார் ஒரு பதச் சோறாவர்.

# அமைச்சர் மகேஸ்வரனுக்கு யார் தலைவர்?

அண்மையில் அமைச்சர் மகேஸ்வரன் கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போது தான் விரைவில் கிளி நொச்சி சென்று தலைவர் பிரபாகரனை சந்தித்து பேச இருப்பதாகவும் அதற்கான அனுமதியை ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிடம் கோரி உள்ளதாகவும் கூறி உள்ளார். மேலும் அதே இடத்தில் பேசும் போது தான் தமிழ் மக்களின் பிரதிநிதி என்றும் தான் பிரபாகரனின் தலைமையை ஏற்றுள்ளதாகவும் கூறியுள்ளார். அப்படி யானால் அமைச்சர் மகேஸ்வரனுக்கு யார் தலைவர்? அல்லது ஒரே நேரத்தில் இரண்டு தலைவர்களா? சிறிது யோசித்துப் பார்த்தால் விஷயம் பிடிபடவே செய்யும். மகேஸ்வரனுக்கு கொழும்பில் ரணில் விக்கிரமசங்கா தலைவர். யாழ்ப்பாணத்தில் பிரபாகரன் தலைவர். இப்படி என்றால் தான் அவரது 'வியாபாரங்கள்' ஓகோ என்று ஓடமுடியும். வியாபாரத்திலும் மட்டுமன்றி அரசியலிலும் தமிழின் பெயரால் வாழத் தெரிந்தவர்களில் மகேஸ்வரன் அமைச்சருக்கு முதல் இடம் உண்டு. இல்லாதுவிடில் யாழ் நூல் நிலையத்தை சுட்டெரித்து தமிழ் மக்களை கொன்றொழித்த ஐ.தே.கட்சியின் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராக வந்திருக்கவே முடியாது.

# அம்மையாரின் அச்சுறுத்தல்

தமது கட்சியில் இருந்து அரசாங்கப் பக்கத்திற்கு தாவிக் கொள்ளும் பா.உறுப்பிர்களின் தோல்கள் உரிக்கப் பட்டு ஊரைவிட்டுத் துரத்தப்படுவார்கள் என்று கடும் ஆவேசமாக சந்திரிகா அம்மையார் மேதினக் கூட்டத்தில் பேசி யிருக்கிறார். பொது சன முன்னணிக் குள் கட்சி மாறல் இடம் பெறப்போகிறது என்பதை இத்தோல் உரிக்கும் பேச்சு வெளிப்படுத்துகிறது. அம்மையாரின் பேச்சு ஜனநாயக ரீதியானதா அன்றி ஆண்டபரம்பரை நிலவுடைமை ஆதிக்க சண்டித்தனப் பேச்சா? வளவு ஆதிக்க இரத்தம் உரிய வேளையில் அவ்வாறு தான் பேசவைக்கும் என்பது வர்க்க முத்திரை சம்மந்தமானதாகும். முன்பு ஒரு முறை பௌத்த வணக்க தலங்கள் தாக்கப்பட்டால் தானே வீதியில் இறங்கி தமிழர்களைத் தாக்குவேன் என்று சூளுரைத்தவரும் இவரேதான் என்பதை மறந்துவிட முடியுமா? இத்தகையவரைச் சுற்றி இன்னும் இடதுசாரி வேடமணிந்த சிலர் இருப்பது ஏன் என்பது தான் புரியவில்லை. எசமானிகள் இருப்பது அடிமைகள் இருப்பதால் தானே!

# செட்டியார் தெரு நகைக்கடை ஊழியர்கள்

## வாராந்த விடுமுறையை வென்றெடுக்க மேதின அறைகூவல்

கொழும்பு செட்டியார் தெருவில் வேலை செய்யும் நகைக்கடை ஊழியர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் கூட விடுமுறை வழங்கப்படுவதில்லை. சட்டரீதியாகவும் மனிதாபிமான முறையிலும் இது ஒரு அநீதியாகும். இதற்கு எதிராக கடந்த ஒரு வருடத்திற்கு மேல் செட்டியார் தெரு நகைக்கடை ஊழியர்கள் சார்பாக டொலிபிக் நலன்புரி சங்கத்தினர் கோரிக்கை வைத்து இயக்கம் நடாத்தி வந்துள்ளனர். மேற்படி நகைக்கடை ஊழியர்களுக்கு வாராந்த விடுமுறை மறுக்கப்படுவதால் அவர்கள் படும் துன்பங்களை வெளிப்படுத்தி விடுமுறை யின் அவசியத்தை வலியுறுத்தி டொல்பின் நலன் புரிச் சங்கம் மேதின அறைகூவலை வெளியிட்டுள்ளது. கடை உரிமையாளர்களே வாரம் ஒரு நாள் கடைகளை மூடுங்கள். ஊழியர் களுக்கு விடுமுறை வழங்குங்கள் என வேண்டுகோள் விடுத்துள்ள டொல்பின் நலன்புரிச் சங்கம் சகல ஊழியர்களும் விடுமுறை வழங்கத் தயாராக உள்ள கடை உரிமையாளர்களும் ஐக்கியப்பட்டு செயல்படுவதன் மூலம் இதனை வென்றெடுக்க முன் வரல் வேண்டும் எனக் கேட்டுள்ளது.

# தானும் ஒரு ஆளாம்! தவிடும் ஒரு கொழுக்கட்டையாம்!

இந்து சமுத்திரப் பிராந்தியம் என்பது சமாதானப் பிராந்தியமாக இருக்க வேண்டுமென்று இலங்கையில் 1974ல் நடந்த அணிசேர மாநாடுட்டின் போது ஜனாதிபதி சந்திகாவின் தாயார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா முன் மொழிந்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இது அந்தக் காலம்.

இப்போது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் ஆளணி படையணி. கப்பலணி என வீதிவலம் வருவதற்கு அமெரிக்காவை யார் உண்மையாக விசுவாசிப்பது என்று இலங்கைத் தலைவர்கள் வெளிப்படுத்து வதில் வேகங் கொண்டுள்ளனா.

பிரமதர் ரணில் விக்கிரமசிங்ஹவிற்கும் ஜனாதிபதி சந்திகாவிற்கும் இதில் பலந்து போட்டி நிலவுகிறது. அமெரிக்காவுக்குச் சென்று வருவதில் அப்படியொரு நம்பிக்கை.

அண்மையில் ஐ.நா.வின் நிருபர்கள் சங்க கழகத்தில் பாகிஸ்தானின் 'த நியூஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் "காஷ்மீர் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் தீர்வைக் காண முடியாவிட்டால் மூன்றாந்தரப்பு மத்தி யஸ்தம் தேவை' எனக் கூறியுள்ளார்.

தனது நாட்டில் தன்னால் நோர்வேயை சரியாகப் பயன்படுத்தத் தெரியாமல் - யுத்த நிறுத்தமொன்றை ஏற்படுத்த துணியாமல் தானும் தனது கட்சிப் பரிசனமும் பேரினவெறியைக் கக்கிச் சமாதானத்தைச் சீரழிக்க முயலும் சந்திரிகா அம்மையார் ஐம்பதாண்டு கால காஷ்மீர் பிரச்சினைக்கு மூன்றாந் தரப்பு முக்கியத்துவம் பற்றி முழங்குவது இவ்வாண்டின் சிறந்தவொரு முஸ்பாத்திதான்?

இலங்கையின் தலைவி - இலங்கை அரசின் தலைவி - இலங்கை மந்திரி சபையின் தலைவி - முப்படைகளின் தலைவி தான்தான் என்று தன் வாயால் சி.என்.என். தொலைக்காட்சிச் சேவைப் பேட்டியில் கூறிக் குனியவேண்டியுள்ள ஜனாதிபதி சந்திரிகா இனித் தென்னாசி யாவின் சமாதானப்புறா வேடங் கொண்டு காஷ்மீருக்கு வழிகாட்டுகிறா ராம். 'மூஞ்சுறு தான் போகக் காணேல்லை. விளக்கு மாறையுமல்லோ காவப்போகுதாம்' என்ற முது மொழி ஞாபகம் வருகிறது.

'அடிப்பன்டா நான் சிங்கம்டா' என்று வீறாப்புடன் பாடிப் பின்னர் 'அ.டி.ப்ப... பன்...டா.... சி....ங்....க.....ம்....டா' என்று அழுதபடி என்.எஸ்.கிருஷ்ணன் பாடியது ஞாபகம் வருகிறது. சந்திரிகா அம்மையார் சமாதானத்தைக் கொண்டு வராவிட்டாலும் தனது சண்டித்தனத் தால் மீண்டும் அமெரிக்க அடியாளாக மாறி குழப்பத்தை மூட்டவுமா ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் பயன்பெறாமல் போகும்?

# நான்கு முகம் ஒன்றாய் ஆனைமுகன் போற்றி!

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் மனோ கணேசனின் தம்பியார் போட்டி யிடும் ஏணிச்சின்னத்துக்கு வாக்களிக் கும்படி தமிழ் கட்சிகள் ஆதரவு வழங்கி யுள்ளன.

முன்னாள் தமிழீழப் போராளிகளான ரேலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளோட், தமிழீழத்துக்கு போராடும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகிய நான்கு அமைப்புகளின் பிரதி நிதிகளும் ஒரு முகமாய் மனோ கணேசன் என்ற ஆனைச்சின்னத்தில் வென்ற ஆனை முகத்தானின் அருமைத்தம்பியையும் ஆணையில் ஏற்ற ஏணிச்சின்னத்தில் வெற்றி பெற வழி செய்யும் வகையில் கொழும்பு ரேணுகா ஹோட்டலில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து சம்பாஷித்துள்ளனர்.

சுயநிர்ணய உரிமை. தாயகம் என்ற கோட்பாடுகளை மாத்தறை பௌத்த விகாரைத் திறப்பில் மீண்டும் நிராகரித் துள்ள பிரதமர் ரணிலின் ஆனைக்கு அடிவருடும் மனோ கணேசன் மூலம் மேல் மாகாணத்தில் தமிழ் கட்சிகள் தமிழ் தேசிய ஊற்று மூலத்தை கண்டு அகமகிழந்துள்ளனர். முட்டையில் எவ்வாறு மயிர் பிடுங்கலாம் என்பதை கற்றுத்தரும் தமிழ் கட்சிகள் இன்னும் இன்னும் எதிர்காலத்தில் தமிழர் வாழா வெட்டிகளானாலும் தமது பிழைப்பை நன்றாகவே நடத்திக் கொள்வர் என நாம் நம்பலாம்.

தமிழ்ச் சிறைக் கைதிகள் விடுதலைக் காக கொழும்பில் இரந்த தானம் செய்த மனோ கணேசனிடம் வட்டுக் கோட்டைக்கு பாதையை கேளுங்கள் துட்டுக்கு இரண்டு கொட்டப்பாக்கு என சொல்லாமலா விடுவார்?

தனக்குச் சகுனப் பிழையானாலும் எதிரிக்கு மூக்குப் போவது சந்தோசந் தானே! இலங்கையின் இறைமையும் சுதந்திரமும் வாழ்க! வளர்க?

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்ப் பத்திரிகையாளரொருவரின் ஆதிக்கமும் செல்வாக்கும்

கிழக்கு மாகாணத்தை சேர்ந்த தமிழ் பத்திரிகையாளர் ஒருவர் தமிழ் தேசிய நாளிதழ்களிலுள்ள பத்திரிகையாளர்கள் மீது 'ஒருவிதமான' ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் செலுத்தி வருகிறாராம். ஒவ்வொரு தமிழ் பத்திரிகையிலும் ஏறக்குறைய அவருடைய ஏஜன்டுகள் போன்று சில பத்திரிகையாளர்கள் இயங்கி வருகின்றனராம்.

அந்த தமிழ் பத்திரியைாளருக்கு வேண்டிய செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதிலும் அவர் விரும்பாத செய்திகளை இருட்டடிப்பு செய்வதிலும் தமிழ் பத்திகைகளிலுள்ள சில பத்திரிகையாளர்கள் விசுவாசமாக செயற்பட்டு வருகின்றனராம். சில அரசியல் கட்சிகள் பற்றிய செய்திகளை இருட்டடிப்பு செய்யும்படி அவர் விஷேடமான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளாராம்.

அவருக்கு அந்த பத்திரிகையாளர்கள் மீதிருக்கும் ஆதிக்கத்திற்கும் செல்வாக்கிற்கும் காரணம் என்ன? அந்த பத்திரிகையாளர் ஒரே வேளையில் பிரபாகரனுடனும் ரணிலுடனும் சந்திரிகாவுடனும் நெருக்கமாக இருப்பது மட்டுமன்றி அமெரிக்க, பிரிட்டிஷ், இந்தியத் தலைவர்களுடனும் குறிப்பாக ஜெயலலிதாவுடனும் நெருக்கமானவராம். சர்வதேச செய்தி நிறுவனங்களுடனும் மிகவும் நெருக்கமானவராம். தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கத்தின் மீதும் கட்டுப்பாட்டை கொண்டவராம்.

தமிழீழ போராட்டம் பற்றிய செய்திகளையும் அறிக்கைகளையும் இரகசியங்களையும் அமெரிக்காவின் கொடுத்து உதவியவராம். அப்படி யென்றால் அவரிடம் செல்வாக்கிற்கும், சில்லறைக்கும் பஞ்சமிருக்காதுதானே அதுதான் அவரின் செல்வாக்கும் ஆதிக்கமும். தமிழ் இயக்க சகோதர படுகொலைகளுக்கும் உள்ளிட்ட கொலைகளுக்கும் அவர் மிகவும் நெருக்கமானவராக இருந்துள்ளாராம்.

அவர் யார் என்பது பொதுவான கேள்வி? அவரின் கட்டுப்பாட்டில் இயங்கும் பத்திரிகையாளர் யார் என்பதை அறிவது பத்திரிகை நிறுவனங்களின் வேலையாகும்.

# அமெரிக்கா... மாறனார்?

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம், பற்றியும், சுயநிர்ணய உரிமை பற்றியெல்லாம் பலவாறான பிதறறல் ளை செய்து கொண்டிருந்த தமிழ் புத்திஜீவிகள் ஒருவர் அவர் விரும்பியவாறு ஒரு முக்கிய அங்கீகாரத்தை பெற்றுவிட்டார். சமாதானத்தின் பேரிலேயே ஆகி இப்போது அமெரிக்காவின் தயவாலேயே ஆகிவிட்டார் என்பது தெளிவாகிவிட்டது.

மேற்கத்தேய. அமெரிக்க தொடர்புடைய அரசசார்பற்ற நிறுவனமொன்றில் முக்கிய பதவியொன்று அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ் அரசியல் தலைவர்களில் ஒருவரென்று கூறப்பட்ட ஒருவர் முன்பு இந்நிறுவனத்தில் முக்கிய பதவியை வகித்தார். அவர் தமிழ் மக்களின் விடுதலை போராட்டத்திற்கு எதிராக செயறபட்டார் என்றும் சர்வதேச ரீதியாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிரான பிரசாரங்களையும் முன்னெடுத்தார் என்றும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

தற்போது பதவியில் அமர்த்தப்பட்டுள்ள அந்த புத்திஜீவி தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏகப் பிரதிநிதித்துவம், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அவசியம் போன்றன பற்றியெல்லாம் நிறையவே பேசியும் எழுதியும் வந்தார். அண்மைக் காலமாக சுயநிர்ணய உரிமைக்குரிய அர்த்தத்திற்கு மாறாக புதிய வரைவிலக்கணம் கொடுப்பதில் ஆர்வம் காட்டி வந்தார்.

அவருக்கு கிடைத்துள்ள அங்கீகாரத்தை தக்க வைத்துக்கொள்ள இனி என்ன என்னவெல்லாம் செய்வாரே? எல்லாம் அமெரிக்காவினதும் சி.ஐ.ஏ. வினதும் பேராலேயே ஆக வேண்டும் என்றாகி விட்டால் சொல்லவும் வேண்டுமா?

# சிவனு லெட்சுமணனின் 15வது ஞாபகார்த்த கலை இலக்கிய போட்டிகள்.

மலையகத் தமிழ் மக்களின் மண் உரிமைக்காக உயிர்நீத்த தியாகி சிவனு லெட்சுமணனின் 25வது ஞாபகார்த்தமாக தேசிய கலை இலக்கியப் பேரவையின் மலையகப் பிரதேசக் குழு கலை இலக்கியப் போட்டிகள் நடத்த தீர்மானித்துள்ளது

நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும் இப்போட்டிகளில் மலையகத் தமிழ் மக்களை நேசிக்கும் அனைவரும் பங்குபற்றலாம்.

கட்டுரை போட்டி தலைப்பு : சிவனு லெட்சுமணனின் தியாகம் மலையகத் தமிழ் மக்களின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம்.

கவிதைப் போட்டி தலைப்பு : இது எங்கள் மண்
லெட்சுமணனாய் பிறப்போம்

சிறுகதைப் போட்டி : மலையகத் தமிழ் மக்களின் இனத்துவ, வர்க்க உரிமைகளை வென்றெடுப்பதற்கான வழிமுறைகளை காட்டக்கூடியவைகளாக சிறுகதைகள் அமைந்திருத்தல் வேண்டும்.

வீதி நாடகப் போட்டி : மிக அண்மைக்காலத்தில் மலையகத் தமிழ் மக்களின் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை கருவாகக் கொண்ட வீதி நாடகமாக இருக்க வேண்டும் நாடகத்தில் 10 முதல் 15 கலைஞர்கள் பங்கு பற்றலாம். 20 நிமிட நேரத்தில் நடித்துக் காட்டப்பட வேண்டும். நாடகப்பிரதியும், குழுக்களின் விபரங்களும் அனுப்பி வைக்கப்பட வேண்டும். தகுதியானவையாக தேர்ந்தெடுக்கப்படுபவைகள் நடித்து காட்டுவதற்கான அழைப்புகளை பெறும்.

மேற்கூறப்பட்ட அனைத்து போட்டிகளுக்கான ஆக்கங்களின் இரண்டு பிரதிகள் கீழ்வரும் முகவரிக்கு மே மாதம் 30ம் திகதிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

**இணைப்புச் செயலாளர்**
மலையகப் பிரதேசம்
**தேசிய கலை, இலக்கியப் பேரவை**
50/9, இராகலை பஜார், ஹல்கிரனோயா.

# அமைச்சர் பதவிகளும் ஏமாற்று ஆதிக்க அரசியலும் மலையக மக்களுக்கு விடிவைத் தரமாட்டாது

"மலையகத் தமிழ் மக்களுடைய ஐக்கியம் அல்லது தோட்டத்தொழிலளர்களின் ஐக்கியம் என்பது அதிகாரத்துவமும் ஆதிக்கமும் கொண்ட தலைவர்கள் அல்லது சங்கங்கள் ஒன்றுபடுவதென்று. அதிகாரத்துவமோ ஆதிக்கமோ அற்ற நிலையில் மக்களின் நலனை முக்கியமாக கொண்டு நேர்மையாக செயற்படும் அமைப்புகளும் தொழிலாளர்கள். புத்திஜீவிகள். ஆசிரியர்கள். வர்த்தகர்கள் போன்றோர் புரிந்துணர்வுடன் தொழிலாளர்வர்க்க உணர்வுடனும் ஒடுக்கப்பட்ட தேசிய இனம் என்ற உணர்வுடனும் அரசியல் ரீதியாக ஒரே திசையில் முன்னேறுவதையே ஐக்கியப்பட்ட அரசியல் எழுச்சியாக கொள்ள முடியும்." கடந்த காலத்தில் சில தொழிற்சங்கத்தலைவர்கள் அவர்களின் சுயநலத்திற்காக ஏற்படுத்திக்கொண்டது போன்ற பம்மாத்து ஐக்கியங்களை நம்பாது சகல தரப்பினரும் உண்மையான புரிந்துணர்வுடன் செயற்படுவதிலேயே நம்பிக்கை வைக்க முடியும் இவ்வாறு புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் இ. தம்பையா இராகலை நகரில் நடைபெற்ற கட்சியின் மேதின கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

சமாதானத்திற்கு எதிரான சக்திகள் ஒன்றுபட்டும் பேரினவாதத்திற்கும் முதலாளித் துவத்திற்கும் ஏகாதிபத்தியத் திற்கும மேலாதிக்கத்திற்கும் எதிராக ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டிய இடதுசாரி கட்சிகள் தனித்தனியாகவும் செயற்படுவது பலவீனமானதே. ஜே.வி.பியையும் பாரளுமன்ற சந்தர்ப்பவாதத்திற்குள் மூழ்கிவிட்ட கட்சிகளையும் இடதுசாரி சக்திகள் என்று நாம் கருதவில்லை. அவற்றை தவிர ஏனைய இடதுசாரி அமைப்புகள் தொழிலாளர் வர்க்க அடிப்படையில் புரிந்துணர்வுடனும் ஐக்கியத்துடனும் மக்களின் நலனை மேலாகக் கொண்ட அரசியலை ஒரே திசையில் முன்னெடுப்பது அவசியமாகும். இடதுசாரி அமைப்புகளுக்குள்ளும், அமைப்புக்களுக்கிடையேயும் இருக்கின்ற முரண்பாடுகளை இயலுமானவரையில் குறைத்துக்கொண்டு அரசியல் பொது எதிரிகளுக்கு எதிராக பொது உடன்பாட்டுடன் செயற்பட வேண்டியது அவசியம். பேரினவாதத்திற்கும் ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கும் எதிரான மக்கள் இயக்கத்தை இடதுசாரிகளாலேயே கட்டிவளர்க்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவத்ததாவது "கடந்த இரண்டு தசாப்தங்களாக எமது கட்சி தொடர்ச்சியாக பேரினவாதத்திற்கும் யுத்தத்திற்கும் எதிராக சிங்கள மக்கள் மத்தியிலும் இயக்கங்களை முன்னெடுத்து வருகிறது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டுமாயின் யுத்தம் நிறுத்தப்பட்டு, இயல்புவாழ்க்கை ஏற்படுத்தப்பட்டு தமிழ் மக்களின் முதன்மை பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாகக் கோரி வந்துள்ளது. அதன்படி தற்போது யுத்தம் நிறுத்தப்பட்டுள்ளது. இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படவும், பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அவற்றை குலைப்பதற்கு ஜே.வி.பி., பொதுஜன ஐக்கிய முன்னணி, சிஹல உருமய போன்றனவற்றின் நடவடிக் கைகளை தோற்கடிக்கவும், ஐ.தே.முன்னணிக்கும் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையேயான புரிந்துணர்வாக வளர்ச்சியடையவும், உண்மையான அரசியல் தீர்வு காணப்படவும் அர்ப்பணிப்புடன் எமது கட்சி தொடர்ந்து போராடும் என்பதை இம் மேதினத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### இராகலை புதிய ஜனநாயக கட்சி மேதினத்தில் தோழர் இ. தம்பையா

இன்றைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை சமாளிக்க முடியாமல் தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஒரு வருடகாலத்தில் ஏனைய எல்லாத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்ட 400 ரூபாவும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. தற்போது நடைமுறையில் இருக்கும் கூட்டு ஒப்பந்தம் அடுத்த மாதத்துடன் காலாவதியாகிறது. அக்கூட்டு ஒப்பந்தத்தில் நாளாந்தம் ஆகக் கூடியது 10 ரூபா சம்பள உயர்வை மட்டும் வழங்க தோட்டக் கம்பனிகள் தயாராக இருக்கின்றன. தற்போதைய நிலைமையில் 10 ரூபா சம்பள உயர்வு போதுமானதல்ல. தோட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் சம்பள உயர்வை பெற்றுத் தருவதாக மேதின முழக்கம் செய்கின்றனர். ஒரு சில ரூபாய்களை தோட்டக் கம்பனிகள் வழங்க முன்வரும்போது அதனை தமது சாதனையாகக் காட்ட வழமைபோல் தொழிற்சங்கத் தலைவர்கள் முன்வருவார்கள். தோட்டக் கம்பனிகளுடன் முறையான பேச்சுவார்த்தையை நடத்தி தற்போது மாதாந்தம் வழங்கப்படும் 3146 (121 X 26) ரூபாவை தோட்டத் தொழிலாளர்களின் ஆகக் குறைந்த மாதாந்த சம்பளமாக உறுதிசெய்து கொண்டு ஏற்கனவே ஏனையோருக்கு வழங்கப்பட்ட (400+1200) 1600 ரூபா சம்பள உயர்வையும் உறுதி செய்து கொள்ள வேண்டும். அத்துடன் வாழ்க்கைச் செலவு உயர்வுப்படியும் உறுதி செய்யப்பட வேண்டும். அப்படியானால் ஒரு தோட்டத் தொழிலாளியின் நாளாந்த சம்பளம் 250-300 ரூபாவாக அமையும். அதை வென்றெடுப்பதற்காக ஐக்கியப்பட்ட போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதனை வென்றெடுக்க தற்போதைய தலைவர்கள் அமைச்சர்கள் தயாராக இருக்கிறார்களா என்பதை கேட்க விரும்புகின்றோம்.

தலவாக்கொல்லையில் பெரும்பகுதியை தண்ணீரில் மூழ்கடிக்கவிருக்கும் 5000 த்திற்கும் மேற்பட்டோரை இடம் பெயரச் செய்யவுள்ள மேல் கொத்மலை திட்டத்தை தடுத்து நிறுத்த வேண்டும். காலஞ்சென்ற அமைச்சர் காமினி திசாநாயக்கவால் மக்களின் போராட்டம் காரணமாக முன்னெடுக்க முடியாது போன மேல் கொத்மலை நீர்த்தேக்க திட்டத்தை தற்போது கரு. ஜயசூரிய நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறார் அதற்கு மலையகத் தலைவர்கள எனப்படுவோர். துணைபோகிறார்கள் எமது நாட்டின் நீர் மின் பிரச்சினையை தீர்க்க மேல் கொத்மலை போன்ற பாரிய திட்டங்கள் தேவை இல்லை. பெரிய நீர்த்தேக்கத் திட்டங்களால் சூழல்மாசடைவதுடன் நில. நீரியல் பாதிப்புகளும் ஏற்படும் எனவே விஞ்ஞான ரீதியாகவும் தற்போது நீராக நீக்கப்படும் மேல் கொத்மலை போன்ற பாரியத் திட்டங்களை நாமும் எதிர்ப்போம். நிராபரிப்போம். எனவும் தெரிவித்தார்.

அக் கூட்டத்தில் உரையாற்றிய தோழர் எஸ். பன்னீர்செல்வம் நடுக்கணக்கு தோட்டத்திலும், இராகலை தோட்டத்திலும் மாணிக்கக்கல் அகழ்வதற்காக காணிகள் வெளியாருக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட விருக்கிறது. அதனால் தேயிலை தொழிற்துறை பாதிக்கப்பட்டு தொழிலாளர் வேலை இழக்க வேண்டிய நிலை ஏற்படும். மண்சரிவு போன்ற அபாயங்களும் ஏற்படும். அதனை ஒன்றுப்பட்டு மக்கள் போராட்டத்தின் மூலம் தடுத்து நிறுத்த வேண்டும். மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்திய மேல் கொத்மலை திட்டத்தையும் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

மேதினக் கூட்ட நிகழ்ச்சிகளை தோழர் எம். நாகராஜன் தொகுத்தளித்தார். தோழர்கள் பி. சந்திரகுமார், எஸ். சண்முகராஜா, கே. சுப்பிரமணியம், எஸ். இராஜேந்திரன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இராகலை நடுக்கணக்கு பஜாரிலிருந்து மு.ப. 11.00 மணிக்கு ஆரம்பித்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் 12.30 மணிக்கு இராகலை பிரதான நகரில் அமைக்கப்பட்டிருந்த கூட்ட மேடைக்கு வந்து சேர்ந்தது.



இராகலையில் நடைபெற்ற புதிய ஜனநாயக கட்சியின் மேதின ஊர்வலத்தையும் அதனையடுத்து இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டவர்களையும் தேசிய அமைப்பாளர் இ. தம்பையா கூட்டத்தில் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

படிப்பகம்

புதிய பூமி
புதிய பூமி
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
PUTHIYA POOMI
சுற்று 09 மே 2002 பக்கம் 12 விலை 10/- சுழற்சி 47

எஸ்.47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.: 435117, 335844 பாக்ஸ்: 01-473757

# எதிர்ப்புக்கட்சி, பெரும்பான்மை இன அரசியலுக்கு முடிவு கட்ட வேண்டும்

யுத்தம் பற்றியும் அதனால் ஏற்பட்ட அழிவுகள். இடப்பெயர்வுகள் அசௌகரியங்கள் பற்றி யோசிக்கும் மக்கள் அவை மீண்டும் ஏற்படக்கூடாது என்ற சிந்தனைக்கே முதலிடம் கொடுக்கிறார்கள். யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணவேண்டி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத் தலைமையும் பிரமதர் ரணில் விக்கிரமசிங்கவும் சமாதானம் பற்றியே அழுத்தமாக பேசுவதாகவே தெரிகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியும் சமாதானம் பற்றியே இதுவரையும் பேசியது. நோர்வே பங்கெடுப்புடன் சமாதான நடவடிக்கைகளை தானே தொடக்கி வைத்ததாக ஜனாதிபதி சந்திரிகாவும் இதுவரையும் பேசிவந்தார். ஆனால் ஜனாதிபதியின் மேதினப் பேச்சும். பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய பெரிய கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன மே 3ஆம் திகதி விடுத்த அறிக்கையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவின் சமாதான நடவடிக்கைகளுக்கு சுதந்திரக் கட்சி ஆதரவாக இருக்கப் போவதில்லை என்பதை மிகவும் தெளிவாக பிரகடனப்படுத்தியுள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் ஒட்டிக் கொண்டிருக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை மக்கள் கட்சி, தேச விடுதலை மக்கள் கட்சி என்பவற்றின் நிலைப்பாடு பற்றி அறிந்துகொள்ள முடியவில்லை. 1987ஆம் ஆண்டு மாகாணசபை முறைமை அறிமுகம் செய்யப்பட்ட போது சுதந்திரக்கட்சி எதிர்த்த போதும் மேற்படி கட்சிகள் அதனை ஆதரித்தன. அத்துடன் ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் ஐ.தே.கட்சி அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் 5/6 பெரும்பான்மைப்பலம் இருத்ததால் அதனை சட்டமாக்குவதிலும் அதற்கேற்ப அரசியலமைப்பை திருத்துவதிலும் பிரச்சினை இருக்கவில்லை.

தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவின் ஐ.தே.மு. அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் தேவையான 2/3 பெரும்பான்மை இல்லை. இந்நிலையில் சுதந்திரக் கட்சியின் மேற்படி அறிக்கை குழப்பத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கிறது. புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்குவது வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவது போன்றவற்றுக்கு சுதந்திரக்கட்சி அதனது எதிர்ப்பை தெரிவித்துள்ளது. இது 1999 ஆம் ஆண்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்போவதாக பொது ஜன ஐக்கிய முன்னணி கொண்டுவந்த அரசியலமைப்பிற்கான திருத்தத்தை ஐ.தே.கட்சி எதிர்த்ததற்கு பழிவாங்கும் நடவடிக்கை போன்றே அமைந்துள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் பிரசாரம் செய்யப்போவதாக மீண்டும் சுதந்திரக்கட்சியின் தலைவர்களுள் ஒருவராகியுள்ள ஜனாதிபதியின் சகோதரன் அநுர பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். அது சுதந்திரக்கட்சியின் நிலைப்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஒரு ஜனநாயகவாதி என்றும் மனித உரிமைகளை மதிப்பவர் என்றும் இனவாதியல்ல என்றும் கூறப்பட்டு வந்த எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ச மேற்படி புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக பல்வேறு எதிர்ப்பியக்கங்களை முன்னெடுத்து வருகிறார். தெற்கில் செல்வாக்கு பெற்றவரும் ஜே.வி.பியை விட தான் குறைந்தவரல்ல என்பதை காட்டுவதற்காகவும் அவர் மேற்படி எதிர்ப்பியக்கங்களை முன்னெடுத்து வருகிறார்.

ஐ.நா. சபைகளின் சிறுவர்கள் விவகாரம் பற்றிய மாநாட்டில் உரையாற்றிய பின்னர் சி.என்.என். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியிலும் சமாதானத்துக்கு எதிராக செயற்படப் போவதில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா கூறியிருந்தபோதும் அவர் விதிக்கும் நிபந்தனைகள் சமாதான முயற்சிகளுக்கு தடையாகவே இருக்கப்போகின்றன உடனடியாகவே இறுதி அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க வேண்டும் என்றும் கூறும் அவர் இடைக்கால சபை. புலிகள் மீதான தடை நீக்கம் என்பற்றிற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்.

ஆக. ரணில் விக்கிரமசிங்ஹவின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி சந்திரிகாவும். சுதந்திரக்கட்சியும் எதிர் என்பது தெளிவாகிறது. அத்தோடு ஜே.வி.பியும் எதிர்க்கிறது. எனவே சமாதானத்தை நிலைநாட்ட தற்போதைய பாராளுமன்றத்தில் பலமில்லை. எந்தவொரு விடயமும் பாராளுமன்றத்தி லேயே தீர்க்கப்பட வேண்டும் என்பது எமது தலைவிதி. ஆனால் நமது பாராளுமன்றம் தான் நமது நாட்டை இந்த நிலைமைக்கு கொண்டு வந்துள்ளது. எதிர்க்கட்சியாக இருக்கும் கட்சி மீண்டும் அதிகாரத்திற்கு வருவதற்காக ஆளும்கட்சியின் சகல நடவடிக்கைகளையும் எதிர்க்கும் நிலைப்பாட்டை கொண்டிருக்கும் வழமை மாறுவதாக தெரியவில்லை. நாட்டையும் நாட்டு மக்களையும் பற்றி கவலைப்படாமல் எவ்வளவு அழிவு ஏற்பட்டாலும் பாராளுமன்றப் பலத்தைப் பற்றியே கவலைப்படும். பெரும் பான்மை மக்களை ஏமாற்றும் கட்சி அரசியல் இருக்கும்வரை சமாதானம் என்பது பல விபத்துக்களை சந்தித்தே ஆகவேண்டும் ஐ.தே.கட்சி. பொதுஜன ஐக்கிய முன்னணி மாறி மாறி செய்துவரும் 'எதிர்ப்புக் கட்சி' அரசியலுக்காக நாட்டு மக்களும் பலியிடப்பட்டு வருகின்றனர். இன மேலாதிக்க. இனவாத ஆட்சி முன்னெடுக்கப்பட்டு வருகிறது. யுத்தம் முன்னெடுக்கப்பட்டு இன்றைய அழிவுகள் மீதமாக்கப்பட்டுள்ளன.

சுதந்திரக்கட்சிக்கு வாக்களித்தவர்கள் யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்காக வாக்களிக்கவில்லை. ஜனாதிபதியும். சுதந்திரக்கட்சி தலைமையும் சமாதானம் என்பதற்கு வேண்டியவாறெல்லாம். அர்த்தம் கொடுப்பதற்காக மக்கள் வாக்களிக்கவில்லை. பாராளுமன்றத்துக்கு வெளியில் நடைபெற்ற போராட்டங்களும் மக்களின் ஜனநாயக வேட்கையும் எழுத்தில் இருக்கும் நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்த முடியாதவாறு ஜனாதிபதியை தடுத்து நிறுத்தியுள்ளன.

பாராளுமன்ற எதிர்பார்பற்ற. பாராளுமன்றத்துக்கு வெளியிலான வெகுஜனப் போராட்டங்கள் சமாதானத்துக்கும் இனப்பிரச்சினைக்கும் அரசியல் தீர்வு காண்பதற்கான தேவையையும் நியாயப்படுத்தும் இலங்கை மக்கள் அனுபவத்திலிருந்து பாடங்களை கற்று முன்னேறுவார்கள். எதிர்ப்புக் கட்சி அரசியலுக்கும். பெரும்பான்மை இன அரசியலுக்கும் முடிவு கட்டுவார்கள். தேசிய இனங்களின் சுயாட்சி. சமத்துவம். சுயநிர்ணய உரிமையை உறுப்படுத்துவதன் மூலம் சமாதானத்தை நிலைநாட்டிக் கொள்வார்கள்.

~ ஆசிரியர் குழு ~

# சமாதான முன்னெடுப்பு நிகழ்வுகளும் சமூக முரண்பாடுகளின் நிலைமைகளும்

நாட்டின் தேசிய இனப்பிரச்சினை காரணமான முரண்பாடு கூர்மை பெற்று யுத்தமாக மாறி உச்ச நிலையை அடைந்து கொண்டது. வரலாற்று நியதியின் விதிப்படி தவிர்க்கவியலாத வாறு யுத்தத்தைத் தொடர்ந்து சமாதான முன்னெடுப்புக்கள் ஆரம் பித்துவிட்டன. நாட்டின் அகச் சூழலும் சர்வதேச புறச்சூழலும் வற்புறுத்திய நிலையில் ஒரு சமாதான சூழவுலுக்கு இருதரப்பினருமே வரவேண்டிய தாயிற்று. இம் முன்னெடுப்புகளின் மத்தியிலும் அவர்களது பிரதேசங்களிலும் உள்ளூரக் கனன்று கொண்டிருக்கும் சமூக முரண்பாட்டு அம்சங்கள் எவ்வாறு கையாளப்படப் போகின்றன என்பது மிக முக்கியமான விடயமாகக் காணப்படுகின்றது.

கடந்த கால் நூற்றாண்டு காலத்தின் பேரினவாத ஒடுக்கு முறை உச்ச நிலைக்குத் தள்ளப்பட்டு வந்த சூழலில் தமிழர் தேசியம் முனைப்படைந்து முன்னுக்கு வந்ததில் தவறு ஏதும் இருக்க முடியாது. ஒரு தேசிய இனத்தின் இன மொழி பிரதேச பண்பாட்டு அடையாளங்கள் திட்டமிடப் பட்ட பேரினவாத ஒடுக்குமுறைகளால் அழிக்கப்படும் போது தேசிய இன உணர்வு மேலோங்கி போராட்டமாக வெடித்தெழுவது தவிர்க்க வியலாத வரலாற்று நியதியாகும்.

இவ்வாறான சூழலில் தேசியம் மேலோங்கி ஏனைய சமூக முரண் பாடுகள் உள்ளடங்கிக் கொள்ளும். ஆனால் அவை தேசியத்தால் இல்லாமல் போய் விடுவதில்லை. கடுமை யான பேரினவாத ஒடுக்குமுறை இடம் பெற்று அதற்கெதிராக தமிழர் தேசியம் போராட்டத்திற்கு முகம் கொடுத்துள்ள சூழலில் ஏனைய சமூக முரண்பாடு களைச் சமமாக வெளிக் கொணர்ந்து வற்புறுத்துவது அர்த்தமற்றதாகும். ஏனெனில் ஒரே நேரத்தில் எல்லா முரண்பாடுகளுமே பிரதான இடத்தில் வைக்கப்படுவதில்லை. அப்படி இருத்து வதோ அல்லது எல்லா முரண்பாட்டுப் பிரச்சினைகளுக்கும் ஒரே சமயத்தில் தீர்வு வேண்டி நிற்பதோ முரண்பாடு களை கையாளத் தெரியாத அல்லது முடியாதவர்களின் முட்டாள் தனமாகும்.

> தமிழ்ர் தேசியம் என்பது பேரினவாத ஒடுக்கு முறைக்கு எதிரான நிலைப் பாட்டில் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு மட்டுமே செல்லக் கூடியதாகும். அதனால் வர்க்க, சாதிய, பெண்ணிய ஒடுக்குமுறைகளுக்கு தீர்வு காண முடியாது. தேசியம் இறுதியில் முதலாளித்துவ நிலவுடைமை ஆதிக்க அரசியல் சக்திகளால் கைப்பற்றப்பட்டு விடும்.

உதாரணமாக அறுபதுகளில் தமிழர் சமூகத்தில் சாதிய முரண்பாடு முற்றி போராட்ட வடிவம் பெற்ற போது அதுவே பிரதான அம்சமாகியது. அதற்கான கோரிக்கைகளும் போராட்டங்களும் எழுந்து பேரெழுச்சியாக முன்சென்றன. ஒரு கட்டத்தில் அக்கோரிக்கைகளில் பிரதானமானவை தீர்வுக்கு உள்ளாகி அம்முரண்பாட்டின் வேகமும் வீச்சும் தாழ்நிலையை அடைந்து கொண்டது. தாழ்த்தப்பட்ட மக்கள் எனக் கூறப்படும் சமூகம் புதிய வரலாற்றுத் திருப்பு முனைக்குள் புகுந்து கொண்டது. அதேவேளை ஏனைய மக்கள் எதிர்கொண்ட பேரினவாத ஒடுக்குமுறையை தேசிய இனரீதியில் எதிர்கொள்ளவும் வேண்டியதாயிற்று. ஆனால் சாதிய முரண்பாடு தேசியத்தின் எழுச்சியால் எவ்வகையிலும் அற்றுப் போய் விடவில்லை என்ற உண்மை அடிப்படையில் காணப்பட வேண்டியதாகும். இவ்வாறானதே வர்க்க, பெண்ணிய ஒடுக்குமுறையம் சங்களுமாகும்.

ஆனால் இன்று தேசிய இனப் பிரச்சினைக்கு குறைந்தபட்சம் அன்றி அதிகபட்சத்தை நோக்கிய தீர்வுக்குக் கான சமாதான முன்னெடுப்புக்கள் முன்செல்கின்றன. யுத்த நிறுத்தம் சமாதான சூழல் இயல்பு வாழ்வு திரும்புதல் காணப்படுகின்றன. இவ் வேளை தமிழர் தேசியம் ஏனைய சமூக முரண்பாடுகள் பற்றி எத்தகைய எண்ணங்களையும் கொள்கைகளையும் கொண்டிருக்கின்றன. ஏனைய சமூக முரண்பாடுகள் இல்லை என்றும் இருப்பது ஒன்றே ஒன்று தான். அது தமிழர் தேசியம் மட்டுமே என்பதாக எண்ணப்படுகிறதா? அன்றி ஏனைய முரண்பாடுகளை உரியபடி கையாண்டு

## வெகுஜனன்

ஒட்டுமொத்த தமிழர் சமூகத்தின் பன்முக நலன்கள் பாதுகாக்கப்படுமா? அல்லது ஏனைய சமூக முரண்பாடு களை எவரும் முன்னெடுத்து பிரச்சினையாக்கிக் கொள்ளக் கூடாது எல்லாம் அப்படி அப்படியே இருக்குமாறு பாதுகாக்கப்படுமா?

ஏனெனில் தேசியம் நமக்கு ஏற்கனவே பல படிப்பினைகளைத் தந்துள்ளது. பல்லினங்களும் சாதியமும். வர்க்கங் களும் மிகுந்த முரண்பாடுகளுடன் காணப்பட்ட இந்திய சமூகத்தில் வெள்ளையனே வெளியேறு என முழங்கி நின்றது இந்தியத் தேசியம். அனால் நீண்ட போராட்டங்களுக்குப் பின் சுதந்திரத்தை பெற்றதாகக் கூறிக் கொண்ட இந்தியத் தேசியவாதிகளால் ஏனைய சமூக முரண்பாடுகளை இன்று வரை தீர்த்துக் கொள்ள இயலவில்லை. பதிலுக்கு இன்றும் இந்தியத் தேசியம் உடைபடக் கூடாது பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற வாய்ப்பாடே சொல்லி வரப்படுகிறது.

அவ்வாறே பாகிஸ்தானின் இஸ்லாமியத் தேசியமும். பின்னாளில் எழுந்த பங்களாதேஷின் வங்காளத் தேசியமும் வழிநடந்து கொண்ட பாதை நமக்கு நல்ல உதாரணங்கள். அவ்வாறே தொடங்கிய இலங்கைத் தேசியமும் எங்கே நம்மைக்கொண்டு வந்து விட்டிருக்கிறது. அவை அப்படி இருக்கலாம். ஆனால் நாம் பற்றி யிருக்கும் தமிழர் தேசியம் அவ்வாறான தாக இருக்க முடியாது என்றும் சிலர் வாதிட முற்படலாம்.

எப்பொழுதும் தேசியப் போராட்டங்கள் வெற்றி பெறும் சூழலில் அத் தேசிய இனத்தின் மத்தியில் உள்ள ஆதிக்க சக்திகளே உள்ளார்ந்த ரீதியில் முன்னுக்கு வந்து கொள்வார்கள். அவர்கள் வெளிப்படையாக இல்லாது தமது பணவலிமை, சமூக அந்தஸ்து சாதிய மேல் நிலை, நிலவுடைமை, அரசியல் ஆதிக்கம் போன்றவற்றின் கருத்து நிலைகளை ஏதோ வகையில் உள்ளூரப் புகுத்தி தம்மையும் தமது சாதிய வர்க்க நிலைப்பாடுகளையும் நிலை நிறுத்திக் கொள்வார்கள். உதாரணத்திற்கு ஐம்பத்தி மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு பேரினவாத பெரு முதலாளித்துவ ஒடுக்கு முறையை அப்பட்டமாக யாழ்ப்பாண மண்ணிலே நிகழ்த்திய ஐக்கிய தேசியக் கட்சி எவ்வாறு ஒரு பாராளுமன்ற ஆசனத்திதைப் பெற முடிந்தது. மேலும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வீச்சினால் முகவரி இழந்து போய் இருந்த தமிழர் மத்தியில் ஆதிக்க அரசியல் நடாத்திவந்த கட்சிகளான தமிழ்க் காங்கிரசும் தமிழர் கூட்டணியும் எவ்வாறு தம்மை மீள நிலைநிறுத்தி பாராளுமன்ற அரசியலில் பிரவேசித்தன. இவர்கள் தமிழர் தேசியம் என்ற பெயரில் யாருடைய நலன்களைப் பாதுகாத்து வந்துள்ளனர். இவர்கள் அனைவரும் முதலாளி தொழிலாளி வேறுபாடு தேவையற்றது. நிலச் சொந்தக்காரரும் நிலம் இல்லாதவர்களும் என்ற நிலை மாற வேண்டும். சாதியும் தீண்டாமையும் ஒழிய வேண்டும். பெண்கள் பழமைவாத அடிமைநிலையில் இருந்து விடுபட வேண்டும் எனக் கொள்கை வைப்பார்களா? அதற்குரிய அரசியல் சமூக பண்பாட்டு நிலைப்பாடுகள் அவர்களிடம் இருக்கின்றதா?

தமிழர் சமூகம் பேரினவாத ஒடுக்கு முறையின் கீழ் மோசமாகப் பாதிக்கப் பட்டு அதற்கெதிராகப் போராடி நின்ற போதிலும் வர்க்க. சாதிய. பெண் ஒடுக்குமுறை போன்ற முரண்பாடு களைத் தன்னகத்தே சுமந்து நிற்கிறது. இந்நிலையில் வடக்கு கிழக்கில் முதலாளிக் கட்சிகளோ அல்லது தொழிலாளிக் கட்சிகளோ இருக்க முடியாது அல்லது தேவை இல்லை என்ற முடிவுக்கு வருவது விஞ்ஞான பூர்வமான அரசியல் நோக்காக இருக்க முடியாது. எந்தவொரு கட்சியும் அல்லது அரசியல் இயக்கமும் எதாவது ஒரு வர்க்கத்தின் நலன்களையே பிரதிபலித்து நிற்கமுடியும். அதற்கு அப்பால் இன மத மொழி பிரதேசம் சார்ந்த தேசியம் பற்றி யார் எவ்வளவிற்குப் பேசினாலும் அவற்றில் ஏகப் பெரும்பான்மையான மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கும் சமூக அடிப்படைகள் இருக்க முடியாது.

எனவே பேரினவாத ஒடுக்குமுறைக்கும் அதற்கு முண்டு கொடுத்து நிற்கும் அமெரிக்க இந்திய மேலாதிக்க சக்திகளின் முன்னாலும் தமிழர் தேசியம் வற்புறுத்தப்படுவது அவசியமாகும். தமிழர் தேசியம், மரபுவழித் தாயகம் சுயநிர்ணய உரிமை என்பவற்றை வலியுறுத்தி அதன் அடிப்படை யில் தீர்வு நோக்கி முன் செல்வது தியாகம் செய்த போராளிகள் மக்கள் அனைவரினது உயிர்களுக்கும். இழக்கப்பட்ட உடமை களுக்கும், அனுபவித்த துன்பதுயரங் களுக்கும் ஈடாக முடியும்.

அதேவேளை வென்றெடுக்கப்டும் தீர்வின் கீழ் ஏனைய சமூக முரண்பாடு களைக் கையாள்வதில் நேர்மையும் துணிவும் நிதானமும் தூர நோக்கும் இருத்தல் வேண்டும். வர்க்கம், சாதியம், பெண்ணியம் ஆகிய முரண்பாடு சார்ந்த ஒடுக்குமுறைகளில் பெரும்பான்மை யான மக்களது அபிலாஷைகளின் பக்கம் நிற்பது அவசியம். இவ்விடயத்தில் முன்னைய தமிழ்த் தேசியத் தலைமை கள் சாதிய நிலவுடைமை பழமைவாத ஆதிக்க சக்திகளின் நலன் களுக்கான அரசியலையே வலிமையுடன் பின்பற்றி வந்தன என்பதை இவ்வேளை கடந்த நூற்றாண்டின் வரலாறாக நினைவூட்டு தல் அவசியமாகின்றது. எனவே தமிழீழ விடுதலைப் புலிகள் உயர்த்தி நிற்கும் தமிழர் தேசியம் எவ்வாறு இனிமேல் வழிநடக்கப் போகின்றது என்பதைச் சற்றுப் பொறுத்திருந்தே நோக்க வேண்டியுள்ளது.

• • • • • •

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# சமாதான சூழலைப் பாதுகாத்து முன்னெடுப்போம் நியாயமான அரசியல் தீர்வை வற்புறுத்துவோம்

## யாழ்ப்பாண மேதினக் கூட்டத்தில் தோழர் சி.கா. செந்திவேல் ஆற்றிய உரை

தோழர்களே, நண்பர்களே!

உலகத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டத் திருநாளான மேதினத்தில் உங்கள் அனைவருக்கும் எனது புரட்சிகர வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தேசிய ரீதியிலும் சர்வதேச அளவிலும் இடம் பெற்றுள்ள இரண்டு முக்கிய நிகழ்வு களுக்குப் பின் இவ்வாண்டின். மேதினத்தை கொண்டாடுகின்றோம். ஒன்று, நமது நாட்டில் கடந்த பத்தொன்பது ஆண்டுகளாக வடக்கு கிழக்கை மையமாக வைத்து நடாத்தப் பட்டு வந்த இனமுரன்பாட்டு யுத்தம் ஓய்வு எடுத்துக் கொண்டடுள்ள சூழலாகும். இரண்டாவது, கடந்த வருடம் செப்டம்பர் 11ம் திகதி அமெரிக்க நகரங்களில் இடம் பெற்ற தாக்குதல் களின் காரணமாகத் தோன்றியுள்ள புதிய சர்வதேச நிலைமைகளாகும். இவ்விருண்டு நிகழ்வுகள் பற்றிய நமது நிலைப்பாட்டை மார்க்சிச லெனினிச அடிப்படையிலும் பாட்டாளி வர்க்க கண்ணோட்டத்திலும் நின்று நோக்குவது அவசியமாகும். அதேவேளை நமது முடிவுகளையும் கொள்கை நிலைப்பாட்டையும் மிகுந்த உறுதிப்பாட்டுடன் முன்னெடுத்துக் செல்வதற்கு இம் மேதினத்தில் மேலும் புரட்சிகர திட சங்கற்பத்தை எடுத்துக் கொள்வோம்.

தோழர்களே!

அண்மையில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் பத்தொன்பது வருடகால யுத்தத்திற்கு ஓய்வு ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் துப்பாக்கிகளும் பிரங்கிகளும் ஓய்ந்து போய் உள்ளன. வடக்கு கிழக்கு மக்களும் நாட்டு மக்களும் சமாதானக் காற்று வீசுவதை மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்று அனுபவித்து வருகின்றனர். யுத்த நிறுத்தமும் அதன் மூலமான தடை நீக்கங்களும் நீண்ட காலத்திற்குப் பின் மக்களுக்குப் பெரும் ஆறுதல் பெரு மூச்சை விடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கியுள்ளன. இத்தகைய சூழல் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். அது மட்டுமன்றி மேற்படி சமாதான சூழல் சகல வழிகளாலும் உள்நோக்கங்கள் எதுவுமின்றி இருதரப்பினராலும் ஏனைய மக்கள் ஆதரவு அரசியல் சக்திகளாலும் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதை எமது கட்சி வலியுறுத்துகின்றது.

இன்று தேசிய அளவில் ஏற்பட்டுள்ள சமாதான சூழல் நாட்டிற்குரிய தொன்றாகவும் இறுதிச் சந்தர்ப்ப மாகவும் காணப்படுகின்றது. 1994ம் ஆண்டு இத்தகைய ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் அதனைச் சரியானபடி பாதுகாத்து நிதானமாக முன்னெடுப்பதில் அன்று திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா பாரிய தவறை இழைத்துக் கொண்டார். அதன் மூலம் சமாதான சூழலை அழித்துக் கொண்டதுடன் தன்னை சமாதானத் தேவதை என்று கூறுக் கொண்ட நிலையில் இருந்து மாற்றி யுத்த சன்னதமாடுபவராகிக் கொண்டார். எனவே தான் அன்று கைவிழக்கப்பட்ட சமாதான சந்தர்ப்பம் மீண்டும் ஒரு முறை நம் முன் தோன்றி நிற்கின்றது. இதனைச் சரியானபடி முன்னெடுக்கத் தவறினால் நாட்டின் பாரிய அழிவுகளும் அனர்த்தங்களுமே இடம் பெறும் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.



அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத் திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை நூற்றுக்கு நூறு நிறைவானது என்று எவரும் கொள்ள வேண்டியதில்லை. அதில் சாதகமானவைகளும் குறைபாடுகளும் உள்ளன. ஆனால் நாம் மக்கள் சார்பாக அதனை உற்று நோக்கி பெரு மளவிற்குக் காணப்படும் சாதகமான வற்றைப் பற்றிக் கொள்ளல் வேண்டும். பத்தொன்பது ஆண்டுகளாக யுத்தத் தால் அழிந்து நொந்து கெட்டு இடம் பெயர்ந்து அல்லற்பட்ட நமது மக்களுக்கு யுத்த நிறுத்தமும் தடைய கற்றல்களும் முற்றிலும் சாதகமானவை களேயாகும். நோர்வேயின் மூன்றாம் தரப்பு அனுசரனையுடன் முன்னெடுக்கப்படும் மேற்படி அம்சங்களை நாம் வரவேற்க வேண்டும். ஆனால் கண்மூடித்தன மாகவும் கவலையீன மாகவும் இருந்து விடக் கூடாது. ஒவ்வொரு அடியெடுப் பையும் அவதானித்து வழி நடத்தல் அவசியமாகும்.

பேச்சுவார்த்தை நோக்கிய நகர்வு சரியானதாகும். அது தனியே தற்காலிகத்தீர்வுகள் காண்பதற்கான ஒன்றாக மட்டும் இருந்துவிட முடியாது. நிரந்தர சமாதானத்தையும் மக்களது இயல்பு வாழ்வை மீண்டும் கட்டியெழுப்பப்படக் கூடிய இலக்கை நோக்கிய பேச்சு வார்த்தை செல்லல் வேண்டும். சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வடக்கு கிழக்கு இணைந்த தமிழர்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசத்தில் முழுமையான சுயாட்சிக்கு வழிவகை காணக் கூடிய பேச்சுவார்த்தையே அர்த்தமுடையதாக இருக்கும்.

இதனையே நமது கட்சி கடந்த பதினெட்டு ஆண்டுகளாக ஒவ்வொரு மேதினப் பிரகடனத்திலும் பிரதான கோரிக்கையாக வலியுறுத்தி வந்துள்ளது. நாம் வெறுமனே பிரகடனம் செய்து கொண்டதுடன் மட்டுமன்றி அவற்றுக்கான வெகுஜனப் போராட்டங் களை வடக்கு கிழக்கிலும் தெற்கில் சிங்கள மக்கள் மத்தியிலும் மலையகத் திலும் முன்னெடுத்து வந்துள்ளோம்.

நாம் வலியுறுத்தி முன்னெடுத்து வந்த கோரிக்கைகளான யுத்த நிறுத்தம், தடைகள் அகற்றுதல், புலிகளுடனான பேச்சு வார்த்தை, மூன்றாம் தரப்பு அனு சரனை, நியாயமான தீர்வு நோக்கிய நகர்வு என்பன இன்று நடைமுறைக்கு வர ஆரம்பித்துள்ளமை மக்களுக்கு கிடைத்துள்ள வெற்றியேயாகும்.

இவ்வேளை எமது கட்சி இத்தகைய ஒரு சமாதான ஆரம்பம் தோன்று வதற்கு தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்த வெகுஜன இயக்கங்களையும் போராட்டங்களையும் நினைவு கூர்கின்றது. பேரினவாத ஒடுக்கு முறையை உச்ச நிலை நோக்கி ஐக்கிய தேசியக் கட்சி 1977ல் ஆரம்பித்து வைத்த இனவன்செயல்களையும் 79. 81. 83ல் நடாத்திய காட்டுமிராண்டித் தனங்களையும் நாம் வன்மையாக எதிர்த்து வந்துள்ளோம்.

பேரினவாத ஒடுக்கு முறைக்கு பாதுகாப்பு வழங்கி தமிழ் மக்களின் போராட்டங்களை நசுக்குவதற்கு கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தை கடுமையாக நாம் எதிர்த்து வந்தோம். அது மட்டுமல்லாமல் இதே சட்டம் சிங்கள மக்களுக்கு எதிராகத் திருப்பப்படும் அபாயத்தை ஆரம்பத்தி லேயே சுட்டிக் காட்டினோம். அவ்வாறே 1988-90 காலகட்டத்தில் மிகக் கொடுரமாக அது சிங்கள மக்கள் மத்தயில் நடந்தேறியது. இன்றும் தமிழ் முஸ்லிம் மலையக மக்களில் மூவாயிரம் பேர்வரை நாட்டின் சகல சிறைச்சாலை களிலும் இப்பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட் டுள்ளனர். அவர்களை விடுதலை செய்யுமாறு நாம் மீண்டும் இம் மேதினத்தில் வலியுறுத்துகின்றோம். அவ்வாறே நாம் அரசியல் சாசனத்திற்கு கொண்டு வரப்பட்ட ஆறாவது திருத்தமான பிரிவினைக்கு எதிராக சத்தியப் பிரமாணம் எடுக்கும் சட்டத்தை எதிர்த்து வெகுஜன இயக்கத்தை நடாத்தி வந்தோம். எண்பதுகளின் நடுக் கூறிலே 'மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம்' என்னும் அமைப்பைத் தோற்றுவித்து மேற்படி சட்டங்களை எதிர்த்தும் எரிபொருட்கள் உட்பட அத்தியாவசியப் பொருட்க ளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளை அகற்ற கோரியும் பல்வேறு இயக்கங் களையும் போராட்டங்களையும் நடாத்தி வந்தோம். இவற்றையெல்லாம் இன்றைய சூழலில் நினைத்துப் பார்க்கும் போது எமது கட்சி நின்று வந்த நிலைப்பாட்டின் மக்கள் சார்பை மேலும் உறுதி செய்து கொள்கின்றது.

நாம் அன்று முதல் சுயநிர்ணய உரிமையை நமது நாட்டில் பிரயோகிப்பது பற்றி மிகுந்த நடைமுறை யதார்த்த வழிகளில் கொள்கை வைத்து வலியுறுத்தி வந்துள்ளோம். ஒன்றுபட்ட நாட்டிற்குள் சுயநிர்ணய உரிமையை தமிழ்த் தேசிய இனமும் ஏனைய தேசிய இனங்களும் பிரிவினை அற்ற வழிகளில் பிரயோகித்து சுயாட்சிப் பிரதேசங் களையும் உள் சுயாட்சி அமைப்பு களையும் உருவாக்கி அரசியல் சாசன வழிகளில் உத்தரவாதபடுத்தலாம் என்பதை முன்மொழிந்து தொடர்ச்சி யாக வற்புறுத்தி வந்துள்ளோம். இன்று அவ்வாறான சிந்தனைக்கு விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் ஆரம்ப புள்ளியை வெளிக் காட்டியுள்ளமை வரவேற்கக்கூடியதாகும். அது முழுமை யானதாகவும் நாம் எதிர்பார்க்கு மளவிலும் இருக்கமாட்டாது என்பதை நாம் அறிவோம். ஏனெனில் பேரினவாத நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி முற்றிலும் கைவிட்ட ஒரு நிலைக்கு வந்து விடமாட்டாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி பேரினவாத நிலைப்பாட்டை கைவிடாத அதே நேரத்தில் பெரு முதலாளித்துவ கொள்ளைகளை மேலும் வலுப்படுத்தி நிற்கும் ஒரு கட்சியாகவே காணப்படு கின்றது. அது சமாதானத்திற்கு முன் நிற்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட சூழலை நாம் எமது நிலைப்பாட்டிலிருந்தே காண வேண்டும். அதேவேளை அக்கட்சி சமாதானத்தை முன்னெடுக்கும் நிலையைக் குழப்பியடிக்க எவரும் முற்படவும் கூடாது. இரண்டிற்கு மிடையில் மிகவும் தெளிவான வரையறையுடன் நடந்து கொள்ளல் வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி தனது கடந்த காலத் தொடர்ச்சியாகவே திறந்த பொருளாதாரக் கொள்கை தனியார் மயத்தை முன்னிலும் பார்க்க வேகப் படுத்தி தனது ஏகாதிபத்திய விசுவாச த்தை முன்னெடுத்து வருகின்றது. அதன் விளைவு மக்கள் மீது பாரிய விலை ஏற்றங்களும் கட்டண உயர்வு களும் இடம் பெற்று வருகின்றன. தொழிலாளர்களும் விவசாயிகளும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் ஏமாற்றப்பட்டுள்ளனர். எனவே ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் சகல மக்கள் விரோத நடைமுறைகளுக்கு எதிராகவும் ஈவிரக்கமற்ற போராட்டங் களை முன்னெடுக்க வேண்டும்.

தோழர்களே!

இன்றைய சமாதான சூழல் பாதுகாத்து முன்னெடுக்கப்படல் வேண்டும். அரசியல் தீர்வும் இயல்பு வாழ்வும் மீட்கப் படல் வேண்டும் என்பதில் உறுதியாக நாம் இருக்கின்ற அதேவேளை அதனைச் சீர்குலைக்க நிற்கும் தெற்கின் பேரினவாத வெறி பிடித்து அலையும் ஜே.வி.பி.. சிஹல உறுமய பொதுசன முன்னணியின் ஒரு பிரிவினர் போன்ற தீய சக்திகளுக்கு எதிராக மக்கள் மத்தியில் தீவிர பிரச்சார இயக்கத்தை முன்னெடுக்க வேண்டும். சிங்களத் தொழிலாளி வர்க்கம் உழைக்கும் மக்கள் மத்தியில் இன்றைய சமாதானச் சூழலில் நீடிப்பதற்கு நியாயமான தீர்வு காணப்படவேண்டிய யதன் அவசியத்தை நாம் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

அதேவேளை விடுதலைப் புலிகள் நடாத்தி வந்த விட்டுக் கொடுக்காத போராட்டத்தின் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிட்டு விடமுடியாது. அவர்கள் ஏறத்தாள பதினாறாயிரம் போராளிகளுக்கு மேல் இழந்துள்ளனர். அப்போராளிகளின் அர்ப்பணிப்பு இன்றைய சமாதான சூழலின் அடிப்படையாகும். அவ்வாறு ஏனைய இயக்கங்களில் இருந்தும் விடுதலைத் தாகத்துடன் போராடி பல ஆயிரம் போராளிகள் மடிந்திருக்கிறார்கள். ஏறத்தாள 25 ஆயிரம் போராளிகள் சகல இயக்கங்களிலிருந்தும் தமது உயிர்களைத் தியாகம் செய்திருக்கி றார்கள். இவை மட்டுமன்றி பொது மக்கள் எழுபதினாயிரத்திற்கு மேல் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த கால் நூற்றாண்டை எடுத்துக்கொண்டால் ஏறத்தாள ஒரு லட்சம் உயிர்கள் பேரினவாத ஒடுக்குமுறையை எதிர்த்து போராட்டத்தில் களப்பலியாகியுள்ளனர் என்ற உண்மையை நாம் ஒவ்வொரு வரும் நெஞ்சில் வைத்திருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத் தில் முதன்மைப் பிரதிநிதிகளாக உள்ளனர். அதேவேளை அவர்கள் கடந்த இருபது வருடங்களில் பல பட்டறிவுகளைப் பெற்றுள்ளனர். எனவே கடந்தகால அனுபவங்களில் இருந்து தவறுகள் சரிகளைப் பிரித்தறிந்து இன்றை தேசிய சர்வதேசிய சூழலை கணக்கில் கொண்டு தமது அரசியல் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி முன்னெடுக்க வேண்டும் என எமது கட்சி கேட்டுக்கொள்கின்றது.

குறிப்பாக இன்றைய சமாதான சூழலைப் பயன்படுத்தி அமெரிக்கா நம் மத்தியில் தமது உலக மேலாதிக்க நிலைக்காக நிற்பதற்கு முயன்று வருகின்றது. பலாலி படைத்தளமும் திருகோணமலை கடற்தளமும் அதன் இலக்குகளில் பிரதானமானவையாகும். இதையிட்டு தமிழ் மக்கள் மட்டுமன்றி முழு நாட்டு மக்களுமே விழிப்பாக இருப்பது அவசியமாகும். அவ்வாறே இந்திய மேலாதிக்க சக்திகள் தமது பிராந்திய நலன்களை முன்வைத்து தற்போதைய சமாதான சூழலை குழப்ப முற்பட்டுள்ளன. அதன் ஒரு வெளிப் பாடே ஜெயலலிதாவின் சட்டசபைத் தீர்மானமாகும். இதில் கவனமாக இருக்க வேண்டும். இந்திய ஆளும் வர்க்கத்திற்கு அடிபணிந்து விடக் கூடாது.

மேலும் நமது தமிழ் சமூகத்தில் காணப் படும் பழமைவாத சமூக பிற்போக்கு சக்திகளும் வியாபார வர்த்தக சக்திகளும் சுரண்டல் பேர்வழிகளும் தற்போதைய சமாதான சூழலை தம்

மறுபக்கம் பார்க்க...



புதிய ஜனநாயக கட்சியின் யாழ் மேதின கூட்டத்தில் தோழர்கள் தனிகாசலம், கதிர்மாகநாதன், ஆனந்தகுமாரசாமி, தியாகராஜா மற்றும் குமார் ஆகியோர் உரையாற்றுவதையும் கூட்டத்தில் கலந்துகொண்ட சிலரையும் படத்தில் காணலாம்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் ஊடகங்கள் பற்றி (3)

## அரசாங்கமும் வானலைகளும்

இலங்கை வானொலி எப்போதுமே அரசாங்கத்தின் உடைமையாகவே இருந்து வந்திருக்கிறது. கடந்த யூஎன்.பி. ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் தனியார் ஒலிபரப்புக்கான அனுமதிகள் வழங்கப்படும் வரை வானொலி முற்று முழுதாகவே அரச கட்டுப்பாட்டினுள்ளேயே இருந்து வந்தது.

வானொலி நிர்வாகத்தில் அரசாங்கத்தின் நேரடியான அரசியல் தலையீடும் நிகழ்ச்சிகளிலும் செய்திகளிலும் அரசாங்கக் குறுக்கீடும் காலத்துடன் அதிகரித்து வந்துள்ளது. 1956ல் பண்டாரநாயக்க அரசாங்கம் உருவான போது நாட்டின் அன்றைய பிரதான செய்தி நிறுவனங்களான லேக்ஹவுஸ், ரைம்ஸ் ஒவ் சிலோன் இரண்டுமே யூ.என்.பியின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தன. ஏனெனில் அவற்றில் முதலிட்டவர்கள் செல்வந்தர்களான யூஎன்.பி. பிரமுகர்கள் மட்டுமே. எனவே அரசாங்கத்துக்கு எதிரான முறையில் பிரசாரம் இந்தச் செய்தி நிறுவனங்கள் மூலம் பரப்பப்பட்டது. இந்த நிறுவனங்களின் செயற்பாட்டிற் குறுக்கிடுவது ஒரு அரசியல் நெருக்கடிக்கு வழி வகுக்கும் என்பதும் ஒரு முக்கியமான உண்மை. அதே வேளை ஒரு மாற்றுச் செய்திப் பத்திரிகையைக் கட்டியெழுப்புவதும் எளிதல்ல. ஏனென்றால், சில பத்திரிகைகளின் பேர், செய்தி வழங்கும் முறை போன்ற அம்சங்கள் பழக்கப்பட்டோர் எளிதில் வேறு பத்திரிகைகளை நாடுவதில்லை. இது பரவலாக நாம் காணக் கூடிய ஒரு விடயம்.

எனவே. பண்டாரநாயக்க லேக்ஹவுஸ், ரைம்ஸ் நிறுவனங்களின் யூஎன்.பி. சார்பு அரசாங்க விரோதப் பிரசாரத்துக்கு மறுமொழி கொடுக்கும் முறையில் இலங்கை வானொலியைப் பயன்படுத்தத் தொடங்கினார். பச்சையான அரசாங்கப் பிரசாரமாக இல்லாவிட்டாலும் அரசாங்கத்துக்குச் சாதகமான முறையில் செய்திகள் வடிவமைக்கப்பட்டன. இது நடுநிலை என்ற தோற்றத்தைக் களங்கப்படுத்தினாலும் பொய்ப் பிரசாரம் என்ற மட்டத்துக்கு இறங்கவில்லை. என்றாலும், இதை அரசாங்கத்தின் அதிகாரத் துஷ்பிரயோகம் என்றே யூ.என்.பி. காண முற்பட்டது. பல 'நடுநிலை' விமர்சகர்கள்

**இலங்கை வானொலியின் மக்கள் சார்பான நலல் நிகழ்ச்சிகள் உள் தலையீடு, தனிப்பட்ட காழ்ப்புணர்வு, பதவிமோகம் போன்றவற்றால் நாசம் செய்யப்பட்டு வந்துள்ளன.**

இதை ஒரு குற்றமாகவும் கண்டனர். நாட்டின் உண்மையான நிலவரம் என்ன என்று பார்த்தால், செய்தித் துறை மீது அரசாங்கத்தின் ஆதிக்கத்தைவிட யூஎன்.பி. ஆதரவாளர்களது ஆதிக்கம் அதிகமாகவே இருந்தது. பத்திரிகை வாசிப்பவர்கள் யூஎன்.பி. சார்பான தகவல்களை மட்டுமே கண்டனர். வானொலியை நம்பியிருந்தவர்கள் அரசாங்கச் சார்பாகச் செய்திகளைக் கேட்டார்கள். இன்று போல வீட்டுக்கு வீடு ஒன்றுக்கு மேற்பட்ட வானொலி உபகரணங்கள் அன்று இல்லை. பலர் கடைகளிலும் பொது இடங்களிலும் பாவனைக்கிருந்த வானொலிப் பெட்டிகளையே நம்பியிருந்தார்கள். எனவே வானொலிச் செய்தியால் முழுமையான ஆதிக்கம் செய்ய முடியவில்லை. அதைவிடச், செய்தி ஏடுகளின் அளவுக்கு விவரமாகத் தகவல்களைத் தருவதும் வானொலிக்கு இயலுமாக இருக்கவில்லை. மூன்று மொழிகளுக்கும் ஒவ்வொரு தேசிய வானொலி அலை வரிசையும் பகுதி நேரமாக வர்த்தக ஒலிபரப்பும் நடந்தன.

பண்டாரநாயக்க வானொலியை அரசாங்கப் பிரசாரக் கருவியாக உபயோகிக்க வேண்டி வந்தது சூழலின் நிர்ப்பந்தத்தின் பேரிலேயே என்பது உண்மை என்றாலும், வானொலியை மட்டுமே நம்பி மாற்றுச் செய்திப் பத்திரிகைக்கான அத்திவாரம் இடாததன் விளைவு அடுத்த ஸ்ரீ.ல.சு. கட்சிக் காலத்தில் உணரப்பட்டது.

அரசாங்கம் வானொலியைத் தனது பிரசாரக் கருவியாக்கியதையிட்டு விமர்சித்தவர்கள் எவரும் செய்தித் துறையில் ஆதிக்கம் செலுத்திய பத்திரிகை முதலாளிமாரும் பத்திரிகையாளர்களும் யூஎன்.பி. ஆதரவாளர்கள் என்பதைப் பற்றி அக்கறை காட்டியதில்லை. செய்தி எப்போதுமே வடிகட்டப்பட்டுத் தான் வழங்கப்பட்டது என்பதும் அவர்களுடைய கவனத்துக்கு வரவில்லை.

வானொலி அரசாங்கத்தின் வெளிவெளியான பிரசாரக் கருவி என்று மக்கள் அடையாளங்காண அதிக காலம் எடுக்கவில்லை. பண்டாரநாயக்க கொலையின் போது செய்தி ஏடுகள் பரபரப்பான செய்திகளை வெளியிட முற்பட்டன. அவசரகாலச் சட்டமும் செய்தித் தணிக்கையும் நிலைமைகளைக் கட்டுப்படுத்த உதவின. வானொலி நாட்டில் வன்முறை ஏற்படாதவிதமாக செய்தி ஒலிபரப்பைக் கவனமாகக் கையாண்டது.

பண்டாரநாயக்கவின் சாவை அடுத்து தஹநாயக்க இடைக்காலப் பிரதமராகவும் 1960மார்ச் முதல் ஜூன் வரை யூ.என்.பி. அரசாங்கத்தில் டட்லி. சேனநாயக்க பிரதமராகவும் இருந்தனர்.

இக்காலங்களிலும் வானொலிச் செய்தி மேலும் அதிகளவில் அரசாங்கச் சார்பான தகவலாக மாறியது. இப்போக்கு தொடர்ந்தும் வளர்ச்சிபெற்றது.

இதன் தவிர்க்க முடியாத ஒரு பகுதியாக முதலில் மேல்மட்ட நியமனங்கள் (ஒலிபரப்பு பொறுப்பதிகாரி மட்டத்தில்) நேரடியான அரசியல் நியமனங்களாக அமைந்தன. காலப் போக்கில் ஒவ்வொரு நியமனமும் பதவிப் பொறுப்புமே அரசியல் நியமனங்களாகி விட்டன. செய்தி மட்டுமன்றி மற்ற நிகழ்ச்சிகளிலும் கூட இந்தப் போக்கு பிரதிபலித்தது. உதாரணமாக 1965ல் யூஎன்.பி. வெற்றி பெற்ற பின்பு செய்தி அறிக்கைக்கு முன் ஆங்கில ஒலி பரப்பில் பேபி எலிஃபன்ற் வோக் (குட்டியானை நடை) என்ற மெட்டு சில நாட்களாக ஒலிபரப்பப்பட்டது. இவ்வாறே 1977 யூஎன்.பி. வெற்றிக்கு பிறகு "தம்ம புதுன்கே" என்ற பாடலின் மெட்டு ஒலிபரப்பானது.

**அரசாங்க வானொலி என்பது பதவிக்கு வருகின்ற அரசாங்கங்களின் வெளி வெளியான பிரசார சாதனம் என்பது பகிரங்க இரகசியம். அதற்கேற்றவாறே அதன் நிர்வாக மேல் மட்ட நியமனங்கள் இடம் பெற்றும் வருகின்றன.**

இவை யாவும் எதை நிரூபிக்கின்றன என்றால் முதலாளிய ஜனநாயகத்தில் ஒரு நிறுவனம் அரசியல் மயப்பட்ட பின்பு, நிறுவனங்களின் பொறுப்புக்களில் உள்ள அதிகாரிகளால் வெகு வேகமாகவே தங்களது கட்சி விசுவாசங்களை மாற்றிக்கொள்ள இயலும் என்பதைத்தான். இதை மனதிற் கொண்டால், அரசியல்வாதிகள் கட்சி மாறுவதைக் கண்டிக்கும் போது நாம் கொஞ்சம் சகிப்புடன் நடந்து கொள்ள இடமிருக்கும். வெளிவெளியாகவே கட்சி அடையாளம் கொண்டவர்களை விட்டால், மற்றவர்கள் அனுசரித்து நடக்கவே பழக்கப்பட்டவர்கள் எனலாம். வெளி வெளியாகக் கட்சிகளை ஆதரித்து உறுப்பினர்களாக இருந்தவர்கள் கூடப் படுவேகமாகக் கட்சி மாறிப் பதவிகளைக் காப்பாற்றியிருக்கிறார்கள். பாராளுமன்ற அரசியலின் சந்தர்ப்பவாதம் நிர்வாக சேவைகளையும் ஆழ ஊடுருவ அதிகாலம் எடுக்கவில்லை என்பதைவிட இந்த உயர் அதிகாரிகளின் வர்க்க இயல்பே பிழைப்புவாதம் என்பது கூடப் பொருந்தும். இது ஒன்றரை நூற்றாண்டுக்கால ஆங்கிலக் கொலனிய ஆட்சி கற்பித்துத் தந்த பாடம்.

ஒரு நிறுவனம் பிழைப்புவாதிகளால் நிரப்பப்பட்ட பிறகு அதன் சீரழிவுக்கு வெளி உதவி அதிகம் தேவைப்படாது. அதன் உள் நுழைகிறவர்கள் மேலதிகாரிகளது ஆணைகட்கு வளைந்து கொடுக்கிறவர்களாக இருந்தால் மட்டுமே பதவி உயர்வு பெறலாம் அல்லது உயர்வுக்கு மிகவும் சிரமப்பட வேண்டும். வெட்டொன்று துண்டு இரண்டாகப் பேசுகிற எவருக்கும் இத்தகைய நிறுவனங்களில் இடம் இல்லை. இதற்கான சாட்சியங்கள் ஆண்டு தவறாமல் கிடைக்கும். குறிப்பாகத் தமிழ் நிகழ்ச்சியைப் பொறுத்த வரையில் ஆளுங்கட்சிப் பிரமுகர்களது தயவை நாடுவோரும் அரசாங்கத்துக்கு வால் பிடிக்க மறுக்கிறவர்களைப் பற்றிக் கோள் சொல்வோரும் தங்களுக்குப் பிடியாதவர்களை அரசாங்க எதிரிகளாகச் சித்தரிப்போரும் சிங்களத்துடன் ஒப்பிடுகையில் அதிகம் எனலாம்.

இந்த உள் அரசியல் எப்படி இருந்தாலும் இலங்கை வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பில் கணிசமான அளவு கவனங் காட்டி வந்துள்ளது என்பது உண்மை. குறிப்பாக செய்தித் தயாரிப்பு, செய்தி வாசிப்பு, அறிவித்தல்கள் என்பனவற்றுக்கு ஒரு நல்ல பயிற்சிப் பாரம்பரியம் இருந்து வந்துள்ளது. அதைவிட, தமிழ் மக்களின் சமூகச் சிந்தனையை உயர்த்தும் நோக்கிலான நிகழ்ச்சிகள் காலத்துக்கு காலம் ஒழுங்காக வழங்கப்பட்டு வந்துள்ளன. இடையிடையே உள் அரசியல் தலையீடு காரணமானப் பலநல்ல நிகழ்ச்சிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. என்றாலும் அண்மைக் காலங்களில் செய்தி வாசிப்பின் தரம் சிறிது சரிவுக்கு ஆளாகியுள்ளது என்று தான் கூற வேண்டும். இது மொழியறிவின் போதாமை, உலக விவரங்கள் பற்றிய அக்கறை போதாமை போன்ற காரணங்களின் விளைவாகவும் இருக்கலாம்.

கலை நிகழ்ச்சிகளில், குறிப்பாகக் கணிசமான போட்டா போட்டி இருக்கக் கூடிய இசை நிகழ்ச்சிகள் போன்றவற்றில், அதிகாரத்தில் உள்ளவர்களின் ஆசி பெற்ற சிலரது ஏகபோகம் இருப்பதை நாம் அவதானிக்கலாம். வளர்ந்துவரும் இளம் கலைஞர்களை ஊக்குவிப்பதற்கு இது நல்லதல்ல என்று யாரும் சொல்லித்தான் அறிய வேண்டியதில்லை.

இவ்வாறான போக்கு, அறிவியல், மருத்துவம், சமயம். கல்வி போன்ற விடயங்கள் பற்றிய நிகழ்ச்சிகளிலும் காணக்கூடிய ஒன்றே. இதற்குப் புகழாசைக்கும் மேலாகப் பொருளாதாரக் காரணங்களும் தூண்டுதலாகின்றன.

தொலைக்காட்சியின் வருகை வானொலியின் செல்வாக்கைக் கணிசமாகப் பாதித்துள்ளது. இப்போது மின்வெட்டு நடைமுறையிலிருக்கும் சூழலில் வானொலியை மக்கள் கூடுதலாகக் கேட்கும் நிலைமை உருவாகியிருந்தாலும், தனியார் வானொலி நிலையங்களின் வரவும் அவற்றால் மலினப்படுத்தப்பட்டுள்ள ரசனையும் இலங்கை வானொலியில் தரமான நிகழ்ச்சிகளினின்று மக்களை விலக்கிவைக்கின்றன.

தமிழ்ச் சமூகம் தற்றறிவுள்ள பலரை இழந்து நிற்கிறது, புலப் பெயர்வும் போர் காரணமான இழப்புக்களும் அரசியற் பழிவாங்கல் களும் அரசியற் படுகொலைகளும் நம்மிடையே வளர்ந்து வந்த திறமை களை நமக்கு எட்டாமல் மறித்து விட்டன. இதன் விளைவுகளைச் சமூகத்தின் ஒவ்வொரு துறையிலும் காணுகிறோம். எனவே, ஒரு புறம். திட்டமிட்ட அரசாங்கப் புறக்கணிப்பும், மறுபுறம், தமிழ்ச் சமூகத்தின் நலிவும் இலங்கை வானொலியின் வளர்ச்சிக்குக் கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாகப் பெரும் தடையாகவே இருந்து வந்துள்ளன.

ஒரு தகவல் ஊடகம் என்றளவில் இலங்கை வானொலி அரசாங்கப் பிரசாரக் கருவி மட்டுமே என்பதையும் சில சமயங்களில் மிகவும் கோமாளித்தனமான பொய்ப் பிரசாரங்களை மேற்கொள்கிறது என்பதையும் யாரும் கவனிக்காமலிருக்க முடியாது. இந்த நிலையிலிருந்து இலங்கை வானொலி மீளுவதானால் அதன் முழு நிருவாகமும் வானொலி பற்றிய அரசாங்கக் கொள்கையும் தலைகீழாக மாற வேண்டும். அதிகாரப் பரவலாக்கம் ஜனநாயகமான முறையில் மேற்கொள்ளப்படாதவரை அரச செய்தி ஊடகங்களின் சீரழிவைத் தடுப்பது இயலாது.

அதேவேளை, பல வேறு குறுக்கீடுகளின் மத்தியிலும் தரமான நிகழ்ச்சிகள் மக்களை எட்டி அடையக்கூடிய பயனுள்ள விடயங்களுடன் வழங்குவதற்காக செயற்படும் இலங்கை வானொலி ஒலிபரப்பாளர்கள் சிலரது தளராத முயற்சியைப் பாராட்டாமல் விடுவது நியாயமல்ல. ••••••

---

## சமாதான சூழலைப்

6ம் பக்க தொடர்ச்சி

வசப்படுத்தி லாபமடைய நிற்கிறார்கள் என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும். யுத்தத்தின் மூலம் பெரும் கொள்ளைலாபம் பெற்ற சக்திகள் சமாதான காலத்தை சும்மா விட மாட்டார்கள். அதேபோன்று சாதிய அகம்பாவம் பிடித்த ஆதிக்க சக்திகள் இருந்து வருவதையும் நாம் கவனத்தில் கொண்டு அவற்றுக்கு எதிராகப் போராடுதல் வேண்டும். கடந்த பத்தொன்பது வருடகால யுத்தத்தின் மத்தியிலும் நமது சொந்த மண்ணில் இருந்து போராடி உறுதியை இழக்காது நின்றவர்கள் தொழிலாளர் விவசாயிகள் மீனவர்கள் மற்றும் உழைக்கும் மக்களாவர். அவர்கள் தான் அடிப்படை சக்தி என்பதை மறந்தால் எந்தப் போராட்டமும் வெற்றி பெறமாட்டாது. எனவே சமாதானம் நிலை பெறவும் அரசியல் தீர்வு வெற்றி பெறவும் மிக நீண்டதூரம் நிதானமாகவும் விட்டுக் கொடுக்காத உறுதிப்பாட்டுடனும் நாம் அனைவரும் ஐக்கியப்பட்டு முன்செல்லல் வேண்டும் என்பதை இம்மேதினத்தில் திடசங்கற்பம் செய்து கொள்ளல் வேண்டும்.

தோழர்களே!

இவ்வேளையில் சர்வதேச நிலைமை பற்றி சில வார்த்தைகள் கூற வேண்டியுள்ளது. கடந்த வருடம் செப்டம்பர் 11ம் திகதிய அமெரிக்க நகரங்கள் மீதான தாக்குதல்களுக்குப் பின் ஆதிக்கத்தை விரிவுபடுத்தி நிலைநிறுத்த முற்பட்டுள்ளது. பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் தனது தாக்குதல்களை தொடுத்து வருகின்றது. அதன் ஒவ்வொரு நகர்வும் உலக ஆதிக்கத்திற்கான பொருளாதார ராணுவ அரசியல் முனைப்புகளாவே உள்ளது. மார்க்சிசம் சோஷலிசத்தை முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாகக் கனவு காணும் அமெரிக்கா இப்போது இஸ்லாமியத் தீவிரவாதத்தை முடிக்கப் போவதாக சூழுரைத்து நிற்கிறத. இவை உலக மக்களுக்கு எதிரான தாக்குதல்களே யாகும்.

எனவே செப்டம்பர் 11ல் அமெரிக்காவிற்கு விழுந்த அடி அதன் ஏகாதிபத்திய உலக ஆதிக்கத்திற்கு எதிராக வீழ்ந்த பாட்டடியாகவே எடுத்துக்கொள்ளல் வேண்டும். அது மட்டுமன்றி இன்று அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளில் உலக மயமாதலுக்கும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக மையம் என்பனவற்றுக்கு எதிரான கோபாவேசம் மிக்க வெகு ஜனப் போராட்ட எழுச்சி எழுந்து வருகின்றமை வரவேற்க வேண்டியவையாகும். அன்று எட்டு மணிநேர வேலை என்ற தொழிலாளி வர்க்க கோரிக்கைக்கு எழுந்த மாபெரும் எழுச்சியும் போராட்டமும் பிறந்த அமெரிக்க மண்ணில் இருந்தே இன்று ஏகாதிபத்திய உலக மயமாக்குதலை எதிர்த்த எழுச்சி பெரும் புயலெனக் கிளம்பி வருகின்றது.

எனவே அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு எழுச்சியில் எம்மை நாம் இணைத்துக்கொள்வோம். கடந்த காலத்தின் எமது பொதுவுடைமைப் போராட்டப் பாரம்பரியத்தின் புரட்சிகர உணர்வுகளை தொடர்ந்து வளர்த் தெடுத்து புதிய தலைமுறையினரை அதனுடன் சங்கமிக்க வைப்போம். இறுதி வெற்றி தொழிலாளி வர்க்கம் உழைக்கும் வெகுஜனங்களுக்குரியதே அன்றி பிற்போக்குவாதிகளுக்குரியதல்ல. மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை என்னும் ஒளிமயமான செம் பதாகையை உறுதியுடன் உயர்த்திப் பிடித்து தியாகங்களுக்கு அஞ்சாது புரட்சிகரப் பாதையில் முன்னேறிச் செல்ல இம் மேதினத்தில் திடசங்கற்பம் செய்து கொள்வோம். உங்கள் அனைவருக்கும் எமது புதிய ஜனநாயக கட்சியின் மத்தியகுழு சார்பாகவும் எனது சார்பாகவும் மீண்டும் ஒரு முறை புரட்சிகர வணக்கங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

*வாழ்க மாக்சிசம் லெனினிசம்*
*மாஓசேதுங் சிந்தனை*
**வளர்க புதிய ஜனநாயக கட்சி.**

படிப்பகம்

www.padippakam.com



# இந்துத்துவ வெறியாட்டமும் அதற்கு எதிரான போராட்டமும்



இந்துத்துவ வெறிக்காக முஷ்டிகாட்டும் அமைச்சர் எல்.கே.அத்வானி

எல்லா மதங்களும் அன்பையே போதிக்கின்றன என்கிறார்கள். ஆனால் எல்லா மதங்களின் பேராலும் போர்கள் தொடுக்கப்பட்டுள்ளன. எல்லா மதங்களின் பேராலும் கலவரங்களும் மனிதப் படுகொலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு மதத்தைப் பற்றி இன்னொரு மதத்தவர்கள் கூறுகிற குற்றச்சாட்டுக்கள், கிட்டத்தட்ட எல்லாமே, மதங்கள் மத நடவடிக்கைகளுக்கும் இன்னொரு வகையிலாவது அவை பொருந்தும் என்பதைக் குறை கூறுகிறவர்கள் நினைத்தும் பார்ப்பதில்லை. "மதம் மக்களின் அபினி" என்று மார்க்ஸ் சொன்னபோது, மதம் கொடியது என்ற கருத்தில் சொல்லவில்லை. மக்கள் தம் வேதனையை மறக்கத் தஞ்சமடையும் ஒரு பொருளாக, யதார்த்தமான துன்பங்களிலிருந்து தற்காலிகமாகத் தப்பி ஒளிய உதவும் ஒரு நிழலாக அவர் அதைக் கண்டார். அவரது காலத்தில் அபின் தடைக்குரிய பொருளல்ல. அது மருந்தாகவே பயன்படுத்தப்பட்டது. இன்று, மார்க்ஸ் சொன்ன பொருளில் அல்லாமல், மதம் மனிதர்களுக்கு மயக்கமூட்டி அடிமைப்படுத்தும் ஒரு தீய பொருளாகவும் 'வெறியூட்டி மனிதரை மனிதர் வெறுக்கச் செய்யும் ஒரு போதைப் பொருளாகவும் மாற்றப்பட்டு வருகிறது.

மதங்களிடையில் மட்டுமில்லாமல் மதங்களுக்கு உள்ளும் மார்க்க வேறுபாடுகள் பற்றிய பூசல்களும் போர்களும் மூண்டுள்ளன. இது வரலாறு நெடுகிலும் இருந்து வந்துள்ளது தான். என்றாலும், இன்று நாம் காணும் மதவெறி மனிதரைச் சரியான மார்க்கத்துக்கு வென்றெடுக்கும் ஆவலால் உந்தப்பட்டது அல்ல. சமத அடையாளத்தைக் காரணங் காட்டி மற்ற மதத்தவரை இல்லாமல் ஒழிப்பது தான் இன்றைய மதவெறியாளர்களது முக்கிய இலக்கு. கோயிலுக்குப் போகாத கத்தோலிக்கனும் கோயிலுக்குப் போகாத புரட்டஸ்தாந்து கிறிஸ்தவனும் அயர்லாந்தில் ஆளை ஆள் அழிக்கிறார்கள். யூயோஸ்லாவியா பிளவுபட்ட வேளையில் அங்கு பெரும்பாலனவர்கள் சமய நம்பிக்கையற்றவர்களைத் தான் இருந்தார்கள். அங்கும் மத அடிப்படையில் தான் இரு கிறிஸ்துவ சமூகங்களும் ஒரு முஸ்லிம் சமூகமும் மதத்தின் அடிப்படையில் ஒரு இன ஒழிப்புப் போரில் இறங்கின.

இஸ்லாமிய அடிப்படைவாதம் இருக்கிறது. அமெரிக்காவால் தூண்டிவிடப்பட்ட இஸ்லாமிய மதத்தீவிரவாதிகள் பலர் அமெரிக்க உதவியுடன் வன்செயல்களில் பயிற்சி பெற்றார்கள். சோவியத் யூனியனையும் சீனாவையும் சீர்குலைக்க சவுதி அராபிய உதவியுடன் அவர்கள் செயற்பட்டார்கள். இன்று வளர்த்த கடா மார்பில் பாய்ந்து விட்டது.

கிறிஸ்துவ அடிப்படைவாதம் இன்னும் ஆழமாகவேரோடிய ஒன்று. அது அமெரிக்காவின் தீவிர வலதுசாரி அரசியலுடன் நெருக்கமாகப் பிணைந்துள்ளது. இதைப் பற்றி அதிகம் பேசப்படாவிட்டால், அமெரிக்காவில் ஒஹையோ மாநிலத்தில் சில ஆண்டுகள் முன் குண்டுவைப்பும் நூற்றுக் கணக்கானோரின் உயிரிழப்பு உட்படப் பல கொடுமைகள் கிறித்துவ அடிப்படைவாதிகளால் அமெரிக்காவினுள்ளும் வெளியிலும் செய்யப்பட்டு வந்தன.

இந்து மதம் ஒரு சாத்வீகமான மதம் எனப்படுகிறது. இந்து மத்ததுக்குள் தான் இரண்டாயிரம் வருடங்கட்கும் மேலான தீண்டாமைக் கொடுமை கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. இந்து மதம் என்பது ஒரு மதமா என்பது பற்றி நிறையச் சந்தேகங்கள் இருந்தாலும், இந்து என்ற பொது அடையாளத்தைக் கட்டி யெழுப்புவதில் சிலர் மும்முரமாக இருக்கிறார்கள். விவேகானந்தர் போன்ற நல்லோர் கட்டியெழுப்ப முயன்ற ஒரு முற்போக்கான அடையாளமில்லை அது. எல்லாரையும் அனைத்துச் சென்று ஆண்-பெண் சமத்துவத்தைப் பேணிச் சாதி வேறுபாட்டை நிராகரித்துச் சகல மதங்களையும் மதித்து நடக்க வேண்டும் என்ற சிந்தனையை நிராகரிக்கும் ஒரு அடையாளத்தையே இந்தக் கூட்டம் வற்புறுத்துகிறது. இதனுடைய நோக்கம் என்ன?

முழு இந்தியா மீதும் ஒரு பொது அடையாளத்தைத் திணிப்பது தான் அதன் அடிப்படை. இந்த அடையாளம் எப்படிப்பட்டது? இந்தியா என்பது பல தேசங்களையும் தேசிய இனங்களையும் பழங்குடிச் சமூகங்களையும் மதங்களையும் கொண்ட ஒரு நாடு என்பதை எப்படி அது கையாள முயலு கிறது? இந்தியாவில் சாதி அடிப்படையிலான ஏற்றத்தாழ்வு உள்ளது. இதை அது எப்படி நோக்குகிறது?

இந்தியாவில் அதிகாரத்தில் உள்ள சமூகப் பிரிவினர் சாதி அடிப்படையிலும் பொருளாதார அடிப்படையிலும் மற்றவர்களை விட மேலோங்கிய நிலையில் உள்ளனர். இந்த ஆதிக்கத்தைக் கைவிட அவர்கள் ஆயத்தமாக இல்லை. தொடர்ந்தும் தம் கையில் அதிகாரத்தை வைத்திருக்கவே இந்துமதம் என்ற அடையாளம் அவர்களுக்கு தேவைப்படுகிறது.

இந்துமதம் பிராமணரை உயர்ந்தோர் என்றும் மற்றோரைத் தாழ்ந்தோர் என்றும் கூறுகிறது. மற்றவருள்ளும் சூத்திரர் மிகக் குறைவான நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். அதைவிட இந்தியாவின் காற்பங்கானவர்கள் சூத்திரரிலும் கீழான பஞ்சமர் என்றும் தீண்டப்படாதோர் என்றும் மிகவும் கேவலமாக நடத்தப்படுகின்றனர். இதை இந்துத்துவக் கொள்கை ஏற்கிறது. இது நீடிப்பதை அது விரும்புகிறது.

இந்து மதம் எனப்படும் பல்வேறு மதங்களுக்கு ஒரு பொதுவான கடவுட் கொள்கையோ பொதுவான வழிகாட்டல்களோ பொதுவான மார்க்கமோ பொதுவான வழிபாட்டு முறையோ, ஏன் சமூக அறிநெறிகளோ இல்லை. இதில் ஒரு தவறும் இல்லை ஏனெனில் இந்து மதம் என்பது ஒரு வரலாற்று வழிப்பட்ட பிரதேசம் சார்ந்த அடையாளமே ஒழிய ஒரு சிந்தனை வழிபட்ட அடையாளம் அல்ல. ஆனால் இன்று பகவத் கீதையை இந்துக்கட்குப் பொதுவான நூலாகத் திணிக்கிற முயற்சி நடக்கிறது. ஒரு புறம் தாழ்த்தபட்ட சமூகத்தவரது வழிபாட்டு முறைகளை மூட நம்பிக்கையென்று நிராகரித்து அவர்களைப் பிராமண வழிபாட்டு முறைகளை ஏற்குமாறு வற்புறுத்தப்படுகிறது. மறுபுறம் உயர்சாதியினர் நடுவே உள்ள மூட நம்பிக்கைகளுக்கு மேலும் உற்சாகம் வழங்கப்படுகிறது.

இந்துத்துவம் என்பது பாரதிய ஜனதா கட்சி தேர்தல் அரசியலுக்கு வசதியாக உருவாக்கிய ஒரு கோட்பாடல்ல. அதன் வேர்கள் ஆழமானவை. பிற மதங்கள் மீதான வெறுப்பு ஒரு நூற்றாண்டுக்கு மேலாகத் திட்டமிட்டு வளர்க்கப்பட்டு வந்துள்ளது. இந்து மகா சபை, ஜன சங்கம் என்பன இந்தியாவில் இந்து-முஸ்லிம் ஒற்றுமையை வெறுத்த அமைப்புக்கள் இந்தியாவில் இந்து (அதாவது பிராமணசாதிய) ஆதிக்கம் வேண்டும் என்பதே அவர்களது கொள்கை. அன்று முதல் இன்று வரை இந்துத்துவம் பேசும் ஒவ்வொரு அமைப்பிலும் மேல்தட்டுப் பிராமணரே ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.

**இந்து மதம் என்பது ஒரு வரலாற்று வழிப்பட்ட பிரதேசம் சார்ந்த அடையாளமே ஒழிய ஒரு சிந்தனை வழிபட்ட அடையாளம் அல்ல. ஆனால் இன்று பகவத் கீதையை இந்துக்கட்குப் பொதுவான நூலாகத் திணிக்கிற முயற்சி நடக்கிறது.**

பிராமணிய வழியில் நாட்டில் ஓரிரண்டு சதவீத சனத் தொகையினர் 98 வீதத்தினரை அடக்கி ஆள வசதியாகவே இந்துத்துவக் கொள்கை உருவாக்கி வளர்க்கப்பட்டுள்ளது.

இந்து ஆதிக்கத்தை இயலுமாக்குவதற்கு மதம் ஒரு வலிய கருவியாகிற்று. இந்து – முஸ்லிம் என்ற பிளவு, ஒடுக்கப்பட்ட மக்கள், நிலமற்றோர் என்ற அடிப்படையிலோ, தொழிலாளர் என்ற அடிப்படையிலோ உரிமைகள் மறுக்கப்பட்டோர் என்ற அடிப்படையிலோ, ஒன்று படாமல் தடுத்து நிறுத்த இந்துத்துவத்துக்கு மிகவும் அவசியமாயிற்று.

இந்தியாவின் விடுதலைக்கு இந்து-முஸ்லிம் ஒற்றுமை தேவைப்பட்டது. எனவே தான் காந்தியின் தலைமையிலான காங்கிரஸ் இந்து-முஸ்லிம் ஒற்றுமையை வேண்டியது. சாதி ஒடுக்குமுறையைக் கூட அது தவறென்று ஏற்றது. என்றாலும் தீண்டாமை ஒழிப்பும் பிரசாரம் என்பதற்கு மேலாக அதிகம் செய்ய அதன் மேல்தட்டு சமூகச்சார்பு விடவில்லை. காங்கிரசின் சாதிய எதிர்ப்பு பசப்பானது என்பதாலேயே பாபாசஹேப் அம்பேத்கரும் பெரியார் ஈ.வெ.ராவும் காந்தியை நிராகரித்து வெளியேறினர்.

இந்துத்துவம் காங்கிரஸ் கட்சிக்குள்ளும் வேரோடியிருந்ததாலேயே நேருவின் மரணத்தின் பின்பு காங்கிரஸ் மதவாத அரசியலுக்கு வளைந்துகொடுக்க நேர்ந்தது. பாராளுமன்ற அரசியலில் பெரும்பான்மையை மகிழ்விக்கும் தேவை இந்த விதமான சமரசங்களை அவசியமாக்கியது.

எப்போது மதவெறியுடனும் இனவெறியுடனும் மொழி வெறியுடனும் பிரதேச வெறியுடனும் சமரசம் மேற்கொள்ளப்படுகிறதோ அப்போதே அவை ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிடுகின்றன. இந்திய அரசியலில் இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு அளவுகளில் வெவ்வேறு இடங்களில் வெறியாட்டம் ஆடியுள்ளன. இங்கு சாதிய வன்முறை, இன, மொழி அடிப்படையிலான வன்முறை, மதக் கலவரங்கள் என்பனவற்றை பட்டியலிட நீளம் போதாது. எனினும் இந்துத்துவத்தை மையமாகக் கொண்டு முஸ்லிம்களையும் ஒரளவுக்கு கிறிஸ்தவர்களையும் எதிரிகளாகக் காட்டுகிற ஒரு அரசியலே இன்று இந்தியாவின் மிகப்பெரிய சமூகநோயாக உள்ளது.

பாபர் மசூதி இடிப்பு நடந்து இது பத்தாவது ஆண்டு. அதற்குள் இன்னொரு பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இப்போது இரண்டாவது மாதமாக குஜராத்தில் முஸ்லிம் விரோத வன்முறை தொடர்கிறது. அதை அடக்க குஜராத்தில் அதிகாரத்திலுள்ள நரேந்திர மோடியின் பாரதிய ஜனதா ஆட்சி முயலவில்லை என்பதை விட அது வன்முறையைத் தூண்டி எரிய விட்டுள்ளது என்பது கூடப் பொருந்தும் மத்தியில் அதிகாரத்திலுள்ள பாரதிய ஜனதா தலைமையிலான ஆட்சி இதைப் பற்றி எதுவுமே செய்ய மனம் இல்லாமல் உள்ளது. இது பாரதிய ஜனதா ஆட்சிக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி ஆனால் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி இதனிலும் பெரியது.

இந்துமதத்தின் பேரால் நடக்கும் வெறியாட்டம் தொடர்ந்தால் இந்தியா முழுவதும் மதக் கலவரங்கள் மூளும் இது யாருக்கும் நல்லதல்ல. இது இப்போதே நிறுத்தப்பட வேண்டியது பாரதிய ஜனதாவையோ, சிவசேனையையோ தேர்தலில் தோற்கடிப்பதுடன் இது நில்லாது. பஜ்ரங்தளம் ஆர்.எஸ்.எஸ். விஸ்வ ஹிந்து பரிஷத் போன்றவற்றின் மீது தடைவிதித்து எதையும் சாதிக்க இயலாதளவுக்கு அவை வளர்ந்து விட்டன. மக்கள் நடுவே இந்துத்துவ. சாதிய மேலாதிக்கச் சிந்தனைகட்கு எதிரான சிந்தனைகளைப் போராட்டத்தின் மூலம் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இன்றைய பிரச்சினை தனியே அயோத்தியில் கோயில் கட்டுவதும் குஜராத் வன்முறையைத் தணிப்பதும் பற்றியது மட்டுமல்ல. அவை ஒரு பாரதூரமான நோயின் விளைவான இரு கொப்புளங்கள். அவற்றைக் கீறி மருந்து கட்டலாம். அது தேவையும் கூட, ஆனால நோயைத தாபபதனால முழுச் சமுதாயமும் மருத்துவத்துக்கு உள்ளாக வேண்டும்.

தேர்தல் அரசியலில் உள்ள எந்தப் பாராளுமன்றவாதக் கட்சியும் இத்தகைய பிரச்சினைகளை நியாயத்தின் அடிப்படையில் அணுகியதாக வரலாறு கிடையாது. இலங்கை அரசியலிலேயே இதற்கான பாடங்கள் நிறைய உள்ளன. சாதியம், மதவெறி, இனப்பகை போன்றவற்றைக் கிளறுவோரின் வர்க்க நலனும் வர்க்கச் சார்பும் என்ன என்று தெளிவாக அடையாளங் கண்டு அவற்றுக்கு எதிராக வெகுசன மட்டத்தில் வெகுசனப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இந்தியாவின் மாக்ஸிய லெனினியவாதிகளை விட்டால் இதை வழிநடத்துவதற்கான சிந்தனை முறை வேறு எவரிடமும் இல்லை. அவர்கள் தமக்குள் ஒற்றுமைப்படுவதும் பிற முற்போக்குச் சக்திகளுடன் இணைவதும் இன்று மிக அவசியமானது.

இந்த அரசியல் நடவடிக்கை தனித்து மேற்கொள்ளப்படுகிற ஒரு காரியமாக அல்லாமல், நியாயத்திற்கான ஒவ்வொரு போராட்டத்திலும், அது தொழிற் சங்கப் போராட்டமானாலும், கூலி விவசாயிகளின் போராட்டமானாலும், சுற்றுச் சூழல் பற்றிய போராட்டமானாலும், தேசிய இன ஒடுக்கலுக்கு எதிரான எழுச்சியானாலும், அவை ஒவ்வொன்றினதும் பிரிக்க முடியாத ஒரு பகுதியாக அமைய வேண்டும்.

இதற்கான ஆற்றல் மட்டுமன்றி வெகுசன ஆதரவுத் தளமும் இன்று இந்தியாவில் உள்ளது. அதை இப்போதே சரிவரப் பயன்படுத்தத் தவறினால் இந்தியா ஃபாசிச இந்துத்துவத்துக்கு பலியாவது பற்றி எழுப்பப்படும் கண்டனக் கூச்சல்களால் ஒரு பயனும் இராது. எனவே இந்துத்துவ ஃபாசிஸத்துக்கு எதிரான ஒரு ஐக்கிய முன்னணி பாட்டாளிவர்க்கத் தலைமையில் இன்றே கட்டியெழுப்பப்பட வேண்டும். இந்தியப் பாட்டாளிவர்க்கத்துக்கு வரலாறு விடுக்கும் பெரிய சவாலும் இதுவே. பாட்டாளி வர்க்கத்தின் இறுதி வெற்றியை உறுதிப்படுத்தும் ஆயுதங்களை வடிக்கும் போராட்டப் பாசறையும் இங்கேதான் உருவாக முடியும்.



பாசிச வெறியூட்டி கைகோர்த்து நிற்கும் இந்துத்துவ தலைவர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



# ஜெயலலிதாவின் சட்டசபைத் தீர்மானம் இந்திய மேலாதிக்கத்தின் குரல்!



தமிழக முதல்வரும் அ.இ.அ.தி.மு. கழகத்தின் தலைவியுமான ஜெயராம் ஜெயலலிதாவின் தீர்மானம் இலங்கை தமிழ் மக்களை சீற்றமடையச் செய்துள்ளது. இலங்கையில் மீண்டும் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப் படுகின்ற வேளையில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனை ராஜீவ் காந்தியின் கொலை பற்றி விசாரிப்பதற்காக இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் இல்லாவிட்டால் இந்தியப்படைகள் இலங்கைக்குச் சென்று பிரபாகரனை கைதுசெய்ய வேண்டும் என்று தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்தீர்மானத்தை எதிர்க்காமல் கருணாநிதியின் தி.மு.க. நடுநிலை வகித்துள்ளது. வை.கோ.வின் ம.தி.மு.க. நெடுமாறனின் கட்சி என்பன இரண்டிலும் கம்யூனிஸ்ட் கட்சிகள், எதிர்ப்பை தெரிவித்துள்ளன.

ராஜீவ்காந்தி கொலையை காரணம் காட்டி அவ்வப்போது இந்தியத் தலைவர்கள் பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்துள்ளனர். அதாவது இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் பற்றிய கருத்துக்களை வெளியிடும்போது. நடவடிக்கைகள் எடுக்கும் போதெல்லாம் இந்தியத் தலைவர்கள் இவ்வாறுகோரி வருகின்றமை வழமையான தாகும்.

இம்முறை ஜெயலலிதா அக்கோரிக்கையை விடுத்தது மட்டுமன்றி தமிழக சட்ட மன்றில் தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளமை என்பதுதான் புதிதேயன்றி கோரிக்கையிலும். கோரிக்கை விடப்பட்டுள்ள சந்தர்ப்பத் திலும் வேறுபாடில்லை.

ராஜீவ்காந்தி இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டவர் களில் ஒருவர் என்ற ரீதியிலும் அவ்வொப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவது என்ற ரீதியில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்கெடுத்த விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட அழிப்பு நடவடிக்கைகள், இந்தியப்படை வடக்கு கிழக்கில் செய்த கொலைகள், பாலியல் வல்லுறவுகள், சொத்தழிப்புகள் என்பவற்றுக்கும் தமிழ் மக்களுக்கு எதிர்பார்த்த சுயாட்சி கிடைக்காமைக்கும் பொறுப்பானவர் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவரின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்கள் இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயமான தன்மைக்கு எதிராகவே இருந்தன. அத்துடன் இலங்கையின் பேரினவாத அரசாங்கங்களுக்கு உதவும் வகையில் இந்தியா நடந்துகொண்டது.



ராஜீவ்காந்தியின் கொலை உட்பட தனிநபர் படுகொலைகளால் எல்லா சந்தர்ப்பங்களிலும் அரசியல் இலக்குகள் எய்தப்பட முடியாது என்பதால் அவற்றை ஏற்க முடியாது. அவரை கொன்றது யார் என்பதை பார்க்கும் வேளையில் அக்கொலையுடன் தொடர்புடைய பலவிடயங்களையும் கருத்தில் எடுக்க வேண்டும் அக்கொலை வழக்கு விசாரணைக் குரிய விடயம் என்பதற்கு அப்பால் இந்திய தேசிய, இலங்கை தேசிய, சர்வதேச அரசியல் நிலைமைகளுடன் தொடர்புடையன. அதைப்பற்றி பெரிய நாடான இந்தியாவோ, "றோவோ" இன்னும் நேர்மையான அறிக்கையை வெளியிட வில்லை. ராஜீவ் கொலை பற்றி ஆராய்ந்த ஜெயின் கமிஷன் அறிக்கை யில் கூறப்பட்ட விடயங்களும் சரியாக மதிப்பிடப்பட வில்லை.

## பழிவாங்கும் படலத்தில் 3 அம்மணிகள்

ராஜீவ் கொலையுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் சி.ஐ.ஏ.யின் விருப்பங்கள் நடவடிக்கைகளை பற்றி ஆராய்ந்து உண்மையான நிலைகளை அறிவதில் இந்திய ஆளும் வர்க்கத்திற்கோ றோவிற்கோ விருப்பமில்லை, ராஜீவ்விற்கும் சி.ஐ.ஏ.யினால் அமெரிக்க ஆபத்து ஏற்படலாம் என்ற சந்தேகம் 'விமான விபத்தில்' கொல்லப் பட்ட பாகிஸ்தான் ஜனாதிபதி சியாவுல் ஹக் இறுதியாக வழங்கிய பத்திரிகை செவ்வியில் எழுப்பப்பட்டுள்ளது. சி.ஐ.ஏ. அமெரிக்க சதி பற்றி ஆராய்வதில் சோ.இராமசாமி, சந்திரசுவாமி, சுப்பிரமணிய சுவாமி. ஜெயலலிதா போன்றோருக்கு விருப்பமில்லை. விடுதலைப் புலிகளுக்கு அப்பால் ராஜீகாந்தி கொலை பற்றிய புலனாய்வுகள் விரிவடைந்து செல்வது அவர்களுக்கு விருப்பமில்லை.

அத்துடன் இம்முறை சமாதான நடவடிக்கைகளுக்கு இந்திய மத்திய அரசு வெளிப்படையாக பச்சைக்கொடி காட்டி விட்டது. குழப்புவதற்காக தமிழக அரசாங்கத்தை பயன்படுத்துவது என்பது ஒரு தந்திரோபாயமாக இருக்கலாம். இந்திய மத்திய அரசினதும், ஆளும் வர்க்கத்தின் ஆசீர்வாதமின்றி ஜெயலலிதா அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு அறிவில்லாதவராக இருக்க மாட்டார். இந்திய ஆதிக்க வாதத்தின் பிரதிபலிப்புகளில் ஒன்றாகவே அத்தீர்மானத்தை பார்க்க வேண்டும்.

தமிழர் விடுதலை கூட்டணி முதல் விடுதலை புலிகள் இயக்கம் வரை இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் ஆதிக்க சக்திகளுடனேயே உறவையும், நம்பிக்கையையும் வைத்து செயற்படுகின்றனர். அந்த ஆதிக்க சக்திகளுடன் முரண்பாடுகள் ஏற்படுகின்றபோது பகை முரண்பாடாக்காமல் சமரசம் செய்து தமது அரசியல் இலக்குளையும் தவறவிடவேண்டிய வகைகளாகின்றன. இலங்கையில் தமிழர் மக்களின் போராட்டத்தை முன்னெடுக்க இந்திய ஆளும் வர்க்கத்தினதும் கட்சிகளினதும் ஆதரவுகளையும். ஒத்துழைப்புகளையும் பெற்றுக்க கொள்வதில் அக்கறை செலுத்திய இலங்கை தமிழர் அமைப்புகள் இந்திய மக்களினதும் ஆதிக்கமற்ற நேர்மையான சக்திகளினதும் ஆதரவே அடிப் படையானது என்பதை புரிந்து கொள்ள வில்லை இந்திய ஆளும், வர்க்கத்தினதும் அதகாரத்துவ கட்சிகளினதும் வர்க்க அக்கறைகள் அவற்றின் மேலாதிக்க நோக்கம் என்பவற்றை மதிப்பிடவில்லை அல்லது குறைத்து மதிப்பிட்டு விட்டன.

தமிழக மக்களையும் ஆதிக்கமற்ற நேர்மையான சக்திகளையும் தமிழக ஆளும் வர்க்த்திடமிருந்து பிரித்து பார்க்கவில்லை. ஜெயலலிதாவுக்கு எதிரான உணர்வுகளை வெளிப்படுத்தும் இச்சந்தர்ப்பத்திலும் தமிழ் நாட்டின் சாதாரண மக்களின் ஆதர வையும், ஜெயலலிதாவின் தீர்மானத் துக்கு எதிராக இருந்தவர்களின் ஆதரவையும் தொடர்ந்து வைத்துக் கொள்வதில் அக்கறை செலுத்துவதாக தமிழ் அமைப்புகள் நடந்து கொள்ளவில்லை.

இலங்கைத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் இந்திய ஆளும் வர்க்கத்தினதும் கட்சிகளினதும் அக்கறைகளின் ஆழம்பற்றி சரியாக புரிந்து கொண்டு இந்திய மக்களின் ஆதரவை தொடர்ந்து பெற்றுக் கொள்வதற்காக திட்டமிட்டு செயற்படுவது அவசியமாகும்.

ஜெயலலிதாவுக்கு விடுதலைப் புலிகள் மீது கோபமிருக்கிறது என்றும் அவர் ஒரு கன்னடக்காரி என்பதால் தமிழ் பற்று இல்லையாதலால் இலங்கை தமிழர் பிரச்சினைக்கு மேலோட்டமான காரணங்களை கூறாமல் விருப்பத்தை பூர்த்தி செய்பவராக ஜெயலலிதா இருக்கிறார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை தமிழ் மக்களுடைய சுய நிர்ணய உரிமைக்கான போராட்டம் என்பது இலங்கையின் பேரினவாதத் திற்கும் எதிரான போராட்டம் மட்டுமல்ல இந்திய ஆளும் வர்க்கத்திற்கும் இந்திய மேலாதிக்கத்திற்கும் எதிரான போராட்டமும்தான். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் எதிரானதுமாகும். இந்திய மேலாதிக்கம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதை அவ்வளவு இலகுவாக அனுமதிக்காது. இந்திய மேலாதிக்கம் இந்திய மக்களின் ஆதரவுடனேயே தோற்கடிக்கப்பட வேண்டியதாகும். கிணறு வெட்டப்போய் பூதம் கிளம்பிய கதையாக இந்திய மேலாதிக்கத்தை இலங்கை தமிழ் மக்களின் நண்பனாக நம்பியதால் அந்த மேலாதிக்கப் பூதத்திடம் மாட்டிக்கொண்டாயிற்று. அதனிடமிருந்து விடுபட வேண்டியதும் தமிழ் மக்களின் விடுதலையின் தவிர்க்க முடியாத ஒரு பகுதியாயிற்று. தற்போது தமிழ் மக்களின் போராட்டம் அமெரிக்கா ஏகாதிபத்தியத்திடமும் இந்திய மேலாதிக்கத்திடமும் மாட்டிக் கொண்டுள்ளமைக்கு இலங்கை பேரினவாதமும். இந்திய மேலாதிக்கமும். அமெரிக்கா ஏகாதிபத்தியமும் காரணமாயினும் இலங்கை தமிழ் தலைமைகளினது தவறுகளும் பொறுப்புகளும் குறைந்தனவல்ல.

[redacted]

## உங்களுக்குத் தெரியுமா?

IN CASE YOU DID NOT KNOW!



**THIS IS THE REAL FLAG OF USA!**

*30 TRANSNATIONAL CORPORATE LOGOS!*

இதுதான் அமெரிக்காவின் உண்மையான கொடி 30 இராட்சத அமெரிக்க பல்தேசியக் கம்பனிகளின் வர்த்தக சின்னங்களே அப்படத்தில் உள்ளவைகளாகும்.

## "கிராமத்துக் கவிஞன்' மஹாகவி மூலம் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட கவிதை வரலாற்றில் கிராமங்கள் வருகின்றன"

### நூல் : மஹாகவியின் மூன்று நாடகங்கள் கோடை - புதியதொரு வீடு - முற்றிற்று

பதிப்பாசிரியர் :- எம். ஏ. நூமான்
வெளியீடு : சவுத் விஷன் + தேசிய கலை இலக்கிய பேரவை
பக்கம் : 144
விலை : ரூபா 175/-

தேசிய கலை இலக்கிய பேரவையின் மாதாந்த புத்தகப் பண்பாட்டு நிகழ்வில் கடந்த சித்திரா பௌர்ணமி தினித்தல் 'மஹாகவியின் மூன்று நாடகங்கள்' என்ற நூலின் அரங்கேற்றம் கொட்டாஞ்சேனை விவேகானந்த சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

பேராசிரியர் சி. சிவசேகரத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தலைமையில் பதிப்பாசிரியர் கலாநிதி எம்.ஏ.நு.ஃமான் சிறப்புறையாற்றினார். முதற்பிரதியை மஹாகவியின் துணைவியார் திருமதி பத்மாசினி உருத்திர மூர்த்தி பெற்றுக் கௌரவித்தார்.

இந் நூலில் இடம்பெற்ற மூன்று நாடகங்களில் கோடை. புதியதொரு வீடு ஆகிய இரு நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன. முற்றிற்று இன்னும் மேடை காணவில்லை.

கோடை நாடகம் 1969ல் லும்பினி அரங்கில் நடிகவேள் லடீஸ் விரமணி, நெறியாள்கையில் 'நாடோடிகள்' மூலம் முதலில் மேடையேற்றப்பட்டது.

அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் பிரச்சினையைக் கிளறியுள்ள சாதிவேறுபாடு இந்நாடகத்தில் அலசப்படுகிறது என்பதனால் கலாசார அமைச்சின் ஆடல் அரங்கு சபை முதல் மேடை யேற்றத்துக்கு அனுமதி வழங்கவில்லை. எனினும் மறு மாதத்தில் அரங்கேறியது. மட்டக்களப்பிலும் திருமலையிலும் கொழும்பிலும் மேடையேறிய அந்நாடகம் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் மேடையேறவில்லை.

யாழ்ப்பாணத்தில் நாடக அரங்கக் கல்லூரியின் வரவின் பின்பே இந்நாடகம் மேடையேறியது. 'புதியதொரு வீடு' நாடகம் அ. தாசீரியஸ் நெறியாள்கையில் கொழும்பில் முதலில் நாடோடிகளால் மேடை கண்டது. பின்னர் நடிகர் ஒன்றியத்தினால் மேடையேற்றப்பட்டது. யாழ்ப்பாணத்தில் நாடக அரசங்கக் கல்லூரி தயாரிப்பில் வீ.எம். குகராஜா நெறியாள்கையிலும் யாழ்ப் பல்கலைக் கழகத் தயாரிப்பில் சி. மௌனகுருவின் நெறியாள்கையிலும் மேடைகள் கண்டன. பேராசிரியர் சிவசேகரம் தனது தலைமையுரையில் 'இலங்கையில் தினத்தந்தி' கல்கி போன்ற தமிழகத்துச் சஞ்சிகைகள் ஒரு காலத்தில் வாசிப்புத் தரத்தை கீழ் நோக்கித்தள்ளின. அதனால் இந்திய நூல் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் இலங்கையில் பூரணி, அலை, தாயகம், மல்லிகை போன்ற பல சஞ்சிகைகள் வெளிவரத் தொடங்கின. மஹாகவி இந்திய அங்கீகாரம் தேடி எழும்பவில்லை. எவர் பின்னாலும் அங்கீகாரத்துக்கு அலையவில்லை. 'பாரதி கவிதைத் சமர்' செய்யும் அந்நியோன்ய சூழலில் அன்றைய கவிஞர்கள் இணைந்து செயற்பட்டனர். கவிஞர் முருகையன். சில்லையூர் செல்வராஜன், மஹாகவி என்போர் நட்புறவோடு பழகி கவிதைகள் யாத்தனர். கடந்த இருபது ஆண்டுகளில் இந்நிலை இழக்கப்பட்டு இது எமது எழுத்துக்கு ஏற்பட்ட சரிவாகும். எமது எழுத்து இப்போது தேக்கமும் சரிவும் ஏற்பட்டுள்ளது.

கலாநிதி எம்.ஏ.நு.ஃமான் சிறப்புரை ஆற்றுகையில் "கலைமகளில் மஹாகவியின் கவிதைகள் வெளிவந்தபோது கி.வா.ஜகந்நாதன் 'மஹாகவி' என்ற புனைப்பெயரைப் போடாமல் அவரது இயற்பெயர் து.உருத்திரமூர்த்தி என்றே குறிப்பிட்டிருந்தார். அக்காலத்தில் பொது மக்கள் இசைக் கலைஞர் தட்சனா மூர்த்தியை அறிந்திருந்தனர். ஆனால் கவிஞர் மஹாகவியை அறிந்திருக்க வில்லை. மஹாகவி தனது ஆரம்பகாலக் கவிதைகளில் கிராமங்களை இலட்சியப் படுத்தி எழுதுவதனைப் பார்க்கலாம். பின்னர் கிராமிய முரண்பாடுகளை வெளிப்படுத்தி நன்மை தீமைகளை அலசி. தீமைக்கெதிரான போராட்டங்களைக் காட்டினார். பாரதி. பாரதிதாசனிடம் காணாத கிராமிய வடிவங்களை மஹாகவியின் சடங்கு, கண்மணியாள் கதை ஆகிய காவியங்களில் காணலாம். 1940களில் மஹாகவி என்ற தற்றுணிடல் எழுதத் தொடங்குகிறார். இரண்டாயிர வருடத்துக்கு மேற்பட்ட கவிதை வரலாற்றில் சங்க கால 'அக இரக்கியங்களுக்குப் பின்னால் மஹாகவி மூலம் கிராமங்கள் தெரிகின்றன. மஹாகவியை கிராமத்துக் கவிஞன் (Poet of the Village) என்று குறிப்பிடலாம்" என்றார்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் [4]

தேசியம் கட்டமைக்கப்படும் பொழுது அது உருவாகி வளரும் காலமும் சூழலும் அதன் நிபந்தனைகளை வரையறை செய்து கொள்கின்றன.

இவ்வாறு உருக்கொள்ளும் தேசியத்தின் தீர்க்கமையமாக எவ்வம்சம் முன்னிலைப்படுத்தப்படவேண்டுமென்பதனை வரலாற்றுக் காரணிகளே நியாயப் படுத்துகின்றன.

தேசியம் பல்வேறு முகங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஒடுக்கு முறைக்கெதிராகப் போராட்டம் தீர்மானிக்கப்படும்போது அது முற்போக்கான முகத்தைக் கொண்டு விளங்கும். பிரதான எதிரிக்கெதிராக ஏனைய சக்திகளின் ஜனநாயக - மனித உரிமைகளையும் ஏனைய பெறுமானங்களையும் ஒன்றிணைத்து அவற்றுக்காகக் குரல் கொடுத்து ஐக்கியப் படுத்தும். அது தனது போர்க் குணாம்சத்துடன் மக்கள் சமூக விடுதலையையும் இணைத்துக் கொள்ளும். பல்லினப் பண்பாட்டை அரவணைக்கும்.

தேசியத்தின் முற்போக்கு முகத்துக்கு முரணான இன்னொரு முகமும் உண்டு. அது ஏனையவற்றின் மீது ஒடுக்கலைச் செய்வதற்குத் தன்னைத் தயார்படுத்தி பாசிச முகத்துக்கு மாறும் தன்மையை வெளிப்படுத்தும். எந்த மக்களின் விடுதலைக்காக தேசியம் தோற்றுவிக் கப்பட்டதோ அந்த மக்களையே தண்டிப் பதற்கு தயங்காமல் தனது ஒடுக்கலுக் கான முகத்தை வெளிப்படுத்தும்.

இவ்வாறாக தேசியம் முதன்மைப் படுத்தப்படும் பொழுது அதன் விஸ்வரூபத்தின் கீழ் ஏனைய பெறுமானங்கள் கீழ்மைப்படுத்தப்படுகின்றன. இத்தகைய தேசியத்தின் மீது ஆதிக்க அம்சமே வலியுறுத்தப்படும். இத்தேசியப் புனைவின் மீது கட்டியெழுப்பப்படும் அலங்காரத் தோற்றத்தில் அனைவரும் மெய்மறந்து பயபக்தியுடையோராய் நம்பிக்கை வைக்கும்படி நிர்ப்பந்திக்கப் படுவது தவிர்க்கவியலாத நியதியாகிறது.

ஒடுக்குமுறையினை தேசியம் எந்த வடிவில் எதிர் கொள்கிறதோ அதற்கெதிரான வடிவத்தை உருவாக்குவதே தேசிய நியாயமாகும். ஆனால் ஒடுக்குமுறையின் மையம் ஒன்றாகவிருக்க அதற்கெதிராகத் தோற்றம் பெறும் தேசியத்தின் மையப்பொருள் இன்னொன்றாக ஜாற்றம் பெறுவது ஆதிக்க குணாம்சமுடைய அந்நியரின் தலையீட்டுக்கு வழிவகுப்பதற்கான சான்றாதாரங்களைத் தமிழ்த் தேசியத்தில் நாம் தரிசிக்கலாம்.

இலங்கையின் சுதந்திரத்துக்கு முன் ஆங்கிலேயரின் கொலனித்துவத்துக் கெதிராக உருவான இலங்கைத் தேசியத்தில் பூகோள வரையறையினப் படையில் இலங்கைத் தீவும் மொழியடிப் படையில் சிங்களமும் தமிழும் இணைக்கப்பட்டன. சிங்கள மந்திரி சபை உருவாக்கத்துடன் மொழி முதன்மை சிதைக்கப்பட்டு தீவு என்ற பூகோள வரையரையே மையம் கொண்டு சுதந்திரம் வழங்கப்பட்டது.

சுதந்திரத்தின் பின் 1953இல் சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்டதும் இலங்கைத் தேசியம் பிளவுண்டது. கொல்வின் ஆர்.டி. சில்வா 'இரண்டு மொழி ஒரு நாடு: ஒரு மொழி இரண்டு நாடு' என்று குறிப்பிட்டமை நிதர்சனமாகியது. இதனால் இலங்கைத் தேசியம் பல்லினத் தேசியப் பண்பை இழந்தது. மொழி அடிப்படையில் வேலைவாய்ப்பு. உத்தியோக உயர்வு என்பனவற்றில் பாரபட்சம். புறக்கணிப்புக் குட்பட்ட தமிழ் மக்கள் தமிழ் மொழியின் அடிப்படையில் தமது தேசியத்தை தக்கவைத்துக் கொண்டனர். (ஏ.ஜே.கனகரட்ணம் தனக்கு 'மத்து' என்ற நூலை தனது தமிழ்மொழி அக்கறையை வலுப்படுத்திய சிங்கள அரசகரும மொழிக்குச் சமர்ப்பணம் செய்தமை சுவையான செய்தியாகும்.)

தமிழ்த் தேசியம் ஆரம்பத்தில் முஸ்லிம் மக்களையும் மலையக மக்களையும் தன்னுள் அரவணைத்துக் கொண்டது. 'தமிழ் பேசும் மக்கள்' என அனைவரும் ஒன்றிணைக்கப்பட்டனர்.)

பிரஜாவுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக ஒருபுறம் தமிழ் காங்கிரசும். அதற்கெதிராக நின்ற எஸ்.ஜே.வி. செல்வநாயகம் மறுபுறம் 'இன்று அவாகளுக்கு நாளை நமக்கு' என புறம் போக்காக வாசகம் உதிர்த்தமையும் மலையக மக்களை அவர்களது பண்பாட்டின் அடிப்படையில் விலகிச் செல்ல வைத்தது. தமது தேசியத்தை மலையக மக்கள் தாமே தீர்மானிக்க வேண்டியதாயிற்று.

யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் கொண்டிருந்த மதசார்பின்மை. தீண்டாமை எதிர்ப்பு, பெண்ணுரிமை, டொனமூர் சிபாரிசினடிப்படையிலான தேர்தல் பகிஷ்கரிப்பு என்ற போராட்ட குணாம்சங்களுக்கு மாறாகத் தோன்றிய அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சைவத்தையும் சேர்த்துக் கொண்டு தமிழ்த் தேசியத்ததை வரையறைசெய்தது.

சைவமும் தமிழும் ஒன்றெனவும், சைவத்தையும் தமிழையும் பாதுகாக்கும் வேடங் கொண்டு வேட்டிசால்வை, சந்தனப் பொட்டு, திருநீற்றுக் குறிகளுடன் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவதாரமெடுத்தார். யாழ்ப்பாண சமூகத்துடன் அ.இ.த. காங்கிரஸ் 'சைவத்தமிழ்' எனத் தன்னைக் குறுக்கிக்கொண்டது.

யாழப்பாணத்தில் பல்கலைக்கழகம் திறப்பது பற்றி அரசு ஆலோசித்த போது 'இந்துப் பல்கலைக்கழகம்' வேண்டுமென தமிழ் காங்கிரஸ் சிபாரிசு செய்தது. தமிழரசுக் கட்சியும் செல்வநாயகமும் 'தமிழ்ப் பல்கலைக்கழகம்' என்று முரசறைந்தனர்.

எஸ்.ஜே.வி. செல்வநாயகம் முதல் தனிநாயகம் அடிகளார் ஊடாக இன்று வரை தமிழ் தேசியத்தில் சைவத்துக்கு மாற்றீடாக கிறிஸ்தவம் முதலிடம் பெற்று வந்துள்ளது. தமிழத் தேசியத் தலைவர்கள் தமது பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னும் பின்னும் ஆயர்களின் ஆலோசனைகளைப் பெற்று ஆசீர்வாதமும் பெறத் தவறுவதில்லை. தமிழ் விடுதலை இயக்கங்களும் தமது ஆயுதப் போராட்டத்தில் திருச்சபைகளுடனும் கிறிஸ்தவப் பாதிரிமாருடனும் தமது உறவைப் பேணிக் கொண்டனர்.

## மதவாதச் சகதிக்குள் தமிழ்த்தேசிய முகங்கள் சிதையுண்டன

## செண்பகன்

வடமேல் மாகாணத்தில் கத்தோலிக்கத் திருச்சபையின் தீர்மானத்தின்படி ஆயர் எட்மன் பீரிசின் வேண்டுகோளின்படி புத்தளம், சிலாபம் பகுதிவாழ் கிறிஸ்தவத் தமிழர்கள் தங்களுடைய கல்வியில் போதனா மொழியை சிங்களமாக மாற்றிக் கொண்டதனால் தமிழ் கிராமங்களே சிங்கள கிராமங்களாக மாற்றமடைந்துள்ளன.

தமிழ் தேசியத்தில் சைவத்தினதும் கிறிஸ்தவத்தினதும் ஆதிக்கம் மேலோங்கியமையால் இஸ்லாம் தனிமைப்படுத்தப் பட்டது. இந்தியத் தமிழகத்தில் 'இஸ்லாமியத் தமிழர்' என்று அடையாளம் காணப்பட்டது போல் இலங்கை முஸ்லிம்கள் 'தமிழ் பேசும் மக்கள்' என்ற வரையறைக்குள் தொடர்ந்தும் இருக்க முடியவில்லை. தமிழ் மொழியால் இணைந்திருப்பினும் மதத்தாலும் பண்பாட்டாலும் வேறுபடுத்தப்பட்டிருப்பதனாலும் தமிழ்த் தேசியத்தின் போதாமையினாலும் முஸ்லிம் தேசியம் தனிவழி போனது.

பல்லின தேசியத்தையும் மதச்சார்பின்மையையும் தமிழ்த் தேசியம் அங்கீகரிக்கும் பக்குவம் பெறாதவரை அது நீதி நியாயத்தின் பக்கத்தில் நிற்பதற்கான வாய்ப்பு அருகிக் கொண்டே செல்லும். தென்னாசிய பிராந்திய வல்லரசான இந்தியா அகண்ட பாரதப் பண்பாட்டுத் தேசியத்தைப் பல்லினப்படுத்த, இந்து மதத்தை மையமாக வைத்தே இந்து சமுத்திரப் பிராந்திய அரசியல் வரலாற்றைத் தீர்மானிக்கிறது. எனவே இந்தியாவைப் பொறுத்த வரையில் மொழிவழித் தேசியத்தை அங்கீகரிக்கத் தயாரிரில்லை. தமிழ்த் தேசியத்துக்குப் பதிலீடாக வைஸ்ணவம். சைவம், பௌத்தம் ஆகியவற்றுக்கிடையிலான சமரசத்தை ஏற்படுத்தி இந்துத் தேசியத்தில் அமைதி காணவிரும்புகிறது.

கொழும்பில் ஆஞ்சனேயர், நம்பொடையில் ஆஞ்சனேயர். நுவரேலியாவில் சீதையம்மன். மட்டக்களப்பில் திரௌபதியம்மன், யாழ்ப்பாணத்தில் கண்ணகையம்மன், மருதனா மடத்தில் ஆஞ்சனேயர். விஸ்வஹிந்து பரிஷத் சமாஜங்கள் ஆகியன இந்திய இராணுவம் 1990ல் வெளியேறிய பின்னர் வீறுகொண்டு எழுந்தருளத் தொடங்கியுள்ளன. இந்திய இராமனின் அனுமன் மீண்டும் இலங்கைத் தமிழ்த் தேசிய வழிபாட்டில் முழுமுதற் கடவுளாக பரிணாமம் பெறத் தொடங்கியுள்ளான். யுத்தத்தின் மூலம் தமிழ்த் தேசியத்தை அழிக்க முடியாவிடினும் பயபக்தியின் மூலம் இலங்கைத் தமிழ் மொழித் தேசியத்தை ஏப்பமிட எத்தனிக் கப்பட்டுள்ளது. மத முதன்மை என்பது கேள்விக்குட்படுத்த முடியாதது. ஆய்விலிருந்து விலக்களிக்கப்படக் கூடியது. திராவிட இயக்கங்களே பார்ப்பனர்களுடன் இரண்டறக் கலந்து கரைந்துள்ளன. புலிகளைப் பிடிக்ககும்படி தமிழ் நாடு அரச சட்டசபையில் தீர்மானமெடுத்துத் தனது பாரதப் பண்பாட்டைப் பாதுகாத்துள்ளது?!

மகாவம்சம். சிங்கள மக்கள் மத்தியில் தமிழர் என்பவர் அந்நியர் என்று ஆசிரியப்பா பாடுகிறது. கந்தரோடை அகழ்வாய்வு பௌத்த குடியேற்றங்கள் பற்றிக் கூறியுள்ளது. யாழ்பபாண இடப்பெயர்களில் ஊர்ப்பெயர்கள் சிங்கள பௌத்த உறவைக் காட்டிவிடுமென்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. தமிழில் ஐம்பெரும் காப்பியங்கள் எனப் போற்றப்படும் காவியங்களில் பௌத்த முதன்மை போற்றப்படுகிறது. இதனாலே தமிழ் இலக்கிய ஆய்வுகளில் காப்பியங்களின் தனித்துவ ஆய்வுகள் கைவிடப்பட்டுள்ளன. கண்டும் காணாதவாறு தமிழ்த் தேசியம் அமைதி காக்கிறது. திருக்குறளைச் சைவசித்தாந்தமாகவே மாற்றிவிடுகிறது.

சைவத்தமிழ் மாபே தமிழ்த் தேசிய மரபாக ஒரு புறத்தில் அங்கீகரிக்கப்படும் பொழுது மறுபுறத்தில் கிறிஸ்தவ ஆதிக்கம் தமிழ்த் தேசியத்தின் மேற்குலக மயமாக்கலுக்கு வழிகாட்டித் துணைசெல்கிறது.

இந்தியாவிலிருந்து தமிழ் நூல்களின் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்ட 1970-77 காலப்பகுதியில் தமிழ்த்தலைவர் அ.அமிர்தலிங்கம் அதனைக் கண்டித்தார். இந்தியத் தமிழகத்தை ஈழத்தமிழகத்தின் தாய்நாடாகக் கண்டார். தமிழ் நூல் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதில் எச்.எம்.பி.முஹிதீன் அன்றைய அரசுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார். அதனை ஆட்சேபித்து அமிர்தலிங்கம் "யார் அந்த எச்.எம்.பி.முஹிதீன்" என்ற மதத்துவேசத்துடன் கேள்வி எழுப்பினார். அப்போது அவரது தமிழ்த் தேசிய வரையறைக்குள் "தமிழ் பேசும் மக்களில்" ஒருவராக முஸ்லிம்களைக் கண்டு கொள்ள முடியவில்லை. (இந்நூல் இறக்குமதிக் கட்டுப்பாடு ஈழத்திலக்கிய வளர்ச்சிக்கு உந்து விசையளித்தமை கவனங்கொள்ளத்தக்கது.)

1972ல் அரசியலமைப்பு உருவாக்கிக் கொண்டிருந்த அரசியல் நிர்ணய சபையில் பௌத்த மதத்துக்கு முதன்மையளிப்பது என்ற ஏற்பாட்டுக்கெதிராக தமிழரசுக் கட்சியினர் வெளிநடப்புச் செய்து பகிஷ்கரித்தனர். தமிழ்மொழி அக்கறையைக் காட்டிலும் பௌத்தமத அங்கீகாரம் தமிழ்த் தேசியத்துக்கு வெறுப்பைக் காட்டியதில் இந்து மதவுணர்வுக்கும் மேலாக கிறிஸ்தவ மத ஆதிக்கமே தமிழ் தலைவர்களின் மண்டையைக் கனக்கச் செய்தது என்பதில் வியப்பேதும் இல்லை.

பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்ட காலத்தில் தமிழ்மொழி பரவலாக போதனா மொழியாக 'சகலருக்கும் கல்வி' வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்தபொழுது எதிர்ப்புத் தெரிவித்த தமிழ் தலைவர்களுக்கு கிறிஸ்தவ திருச்சபைகள் முண்டு கொடுத்து ஆலோசனை வழங்கின. தமிழ் மக்கள் மத்தியில் கல்வி பரந்தளவில் ஜனநாயக பண்பையும் ஆளுமையை விருத்திசெய்தமையையும் தமிழ்த் தேசியவாதிகளால் புரிந்து கொள்ளப்பட இயலவில்லை.

கிறிஸ்தவப் பாடசாலைகளையும் இந்துப் பாடசாலைகளையும் வரவேற்ற தமிழ்த் தேசியத் தலைவர்கள் பௌத்த தமிழ்ப் பாடசாலைகள் பின்தங்கிய கிராமங்களிலே உருவாக்கப்பட்ட போது மத முதன்மை வர்க்கத்தில் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கென பரமேஸ்வராக் கல்லூரியும் யாழ்ப்பாணக் கல்லூரியும் அரசினால் கையேற்கப்பட்ட போது யாழ்ப்பாணக் கல்லூரி கிறிஸ்தவ மிஷனரியிடம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்பதில்

மறு பக்கம் பார்க்க..

# புலி எதிர்ப்பில் மூன்று பெண்கள் ஒரே வரிசையில்

## கேள்விகளுக்கு பூமிதாசன் பதிலளிக்கிறார்

**கேள்வி :** ஜே.வி.பியையும் விட மும்முரமாக ஜெயலலிதா புலிகளை எதிர்க்கிறாரே. ஏன் இந்த திடீர் தீவிரம்?

**க. சிவநேசன், யாழ்ப்பாணம்.**

**பதில் :** ஜெயலலிதா என்றாலும் கருணாநிதி என்றாலும், ஏன் வை.கோ. என்றாலும் இலங்கை விடயத்தில் இந்திய ஆட்சியாளர்களைப் பகைத்து எதுவுமே செய்ய மாட்டார்கள்.

தமிழகத்து அரசியலில், புலிகளுக்குப் பெரும் ஆதரவு மக்கள் நடுவே காணப்பட்ட போது கூட, மாநிலத் தேர்தலில் அது முக்கியமான ஒன்றாக இருக்கவில்லை. இனியும் அப்படியே தான்.

ஜெயலலிதாவின் இன்றைய ஆவேசத்துக்கு வேறு கணக்குக்கள் காரணமாக இருக்கலாம். பலமிழந்து வருகிற பா.ஜ.க. ஆட்சி கவிழ்ந்தால் காங்கிரஸ் ஆட்சியே வரக்கூடும் என்பது அவரது கணிப்பு. காங்கிரஸுக்குத் தன்னை நெருக்கமாக்க இதை அவர் பாவிக்கிறார் என்பது ஒரு கணக்கு இதைவிட வேறுங் கணக்குக்கள் இருக்கலாம். ஏனெனில் தமிழக அரசியலில் பணம் புகுந்து விளையாடுவது பற்றி ஒரு இரகசியமும் இல்லை. இன்று மூன்று பெண்கள் புலி எதிர்ப்புக்காக அணி வகுத்து நிற்கின்றார்கள். சந்திரிகா சோனியா - ஜெயலலிதா. இந்த அணி இன்று பேச்சுவார்த்தைகளைக் குழப்பப் பலதையும் செய்யும். ஆனால் பகிரங்கமாக அல்ல.

**கேள்வி :** சில வாரங்களாக குமார் பொன்னம்பலம் கொலையில் முன்னாள் முன்னாள் பெரிய புள்ளியைத் தொடப்புபடுத்தி அமளி துமளிப்பட்டது. இனி என்ன செய்வார்கள்?

**எம்.அப்துல் அஸீஸ், கொழும்பு 10.**

**பதில் :** பெரிய புள்ளிகளைப் பற்றிப் பேசலாம். குற்றஞ்சாட்டலாம், ஆதாரங்களை முன்வைக்கலாம். நீதி மன்றத்துக்குக் கூட இழுத்து வரலாம். பெரிய புள்ளிகளைத் தண்டிப்பது என்பது வேறு விடயம். ஜே.ஆர்.ஜயவர்தன சிறிமா மீது அரசியல் பழிவாங்கலுக்காக எடுத்த நடவடிக்கையை மிஞ்சின எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது. கையும் களவுமாக அகப்பட்ட சாதாரணக் குற்றவாளிகளே சட்டத்தின் பிடியிலிருந்து நழுவி விடுகிறார்கள். பெரிய புள்ளிகளைத் தண்டிக்கவா நாட்டில் நீதி மன்றங்கள் இருக்கின்றன? எனினும் இக்கொலையைத் தீர விசாரிக்கும்படியான நெருக்குவாரம் தளரக் கூடாது.

**கேள்வி :** பிரபாகரனும் ரவூப் ஹக்கீமும் உடன்படிக்கை செய்தாச்சே. மீண்டும் தமிழர் முஸ்லிம் முறுகல் ஏ்றபடுமா?

**கே. ராஜீவன், வவுனியா.**

**பதில் :** கடந்த காலத்தில் தமிழ்த் தேசியவாதக் குழுக்களும் யூஎன்.பி தூண்டுதலுடன் சில முஸ்லிம் தலைவர்களும் செய்த தவறுகளின் தொடர் விளைவாக ஏற்பட்ட கசப்புணர்வு ஒரு நாளில் போகுமா? ஒரு உடன்படிக்கை நடந்ததை எல்லாம் பழையபடி மாற்றிவிடுமா?

தமிழ்த் தேசியவாதிகள் பலர் இன்னமும் முஸ்லிம்களின் தேசிய இன அடையாளத்தை ஏற்கத் தயங்குகிறார் கள். இதன் விளைவான ஒரு மேலாதிக்க மனோபாவம் தமிழத் தேசியவாதப் போராளிகளிடமும் ஏற்பட்டிருந்தது. இதை மாற்றுவதானால் கடுமையா அரசியல் வேலை தேவை.

மறுபுறம் "முஸ்லிம் தேசம்" என்ற கூக்குரலுடன் தமிழர் விரோத அரசியல் போக்கு ஒன்று முஸ்லிம்களின் தலைமைக்காகப் போட்டி போடுகிறது. இவர்களது பிரசாரத்தின் எதிர்வினையாக தமிழரிடையே இந்துத்துவ வெறியர்களது முஸ்லிம் விரோதப் பிரசாரமும் சூடேறும். இவை பற்றி மிக விழிப்புடன் இருக்க வேண்டும்.

**கேள்வி :** ரவுப் ஹக்கீமும் சந்திர சேகரனும் ஆறுமுகனும். விடுதலைப் புலிகளின் தலைவரைப் பார்க்கப் போனதைப்பற்றி ஆரவாரம் செய்த ஊடகங்கள் அவர்களை விட அதிக ஆசனங்களை வென்ற தமிழர் தேசிய முன்னணி தலைவர்கள் காணப் போன போது கவனியாமலே விட்டதன் மர்மமென்ன?

**ஜி. ரஜினிகாந்த், கண்டி.**

**பதில் :** ஆளும்கட்சிக்குச் சார்பானவை தாம். இந்த ஊடகங்கள். அவர்களைப் பொறுத்தவரை இவர்கள் பிழிந்த தேங்காய்ப் பூ மாதிரி. தங்களுக்கு வசதியாக எதுவும் கிடைத்தால் கவனிப்பார்கள் பிழிந்த தேங்காய்ப் பூவால் நிலம் துடைப்பதுபோல. மற்றப்படி....

படிப்பகம்

www.padippakam.com



# ஒருவரது இலக்கிய வெளியீட்டு முயற்சியில் அவரது அரசியல் கண்ணோட்டத்தை காணலாம்

**நீர்வை பொன்னையன் தொகுத்த நூல்**

## உலகத்து நட்டார் கதைகள்.

நீர்வை பொன்னையன்,
மீரா பதிப்பகம், கொழும்பு 06.
2001. ப. 351+xvii, ரூ. 350.00

250 கதைகளைக் கொண்ட இத் தொகுப்பு ஐந்து வருடக் கால இடை வெளியில் நூலாசிரியரால் 'மீளக் கூறப்பட்டு' தினக்குரல் வாரப்பதிப்பில் வந்த கதைகளைக் கொண்டது. இத்தொகுப்பில் உள்ள கதைகள் பற்றிய பயனுள்ள விவரங்கள் ஆசிரியரால் தவிர்க்கப்பட்டுள்ளன. அதற்கு அவர் தரும் காரணம் அவை "கால தேச வர்த்த மானங் கடந்தவை. உலக சமுதாயத்திற்குரிய பொதுமைக் கருத்தியலை வெளிப்படுத்துபவை." என்பதாகும்.

உலக சமுதாயத்துக்குரிய பொதுமைக் கருத்தியலும் கால தேச வர்த்தமானங் கடந்து நிற்கும் கதைகளும் உள்ளன என்று ஒரு கருத்துமுதல்வாத மாறாநிலையியற் கொள்கையாளர் சொல்லலாம். இயங்கியல் பொருள் முதல்வாதியாக ஒருகாலம் அறியப்பட்டு, முற்போக்குப் போராட்ட இலக்கியவாதி என்று பேர்பெற்ற ஒருவர் சொன்னால் அதன் பொருள் என்ன? அவர் இயங்கியலை நிராகரித்து விட்டார் என்பதா? அவரது சமூகப் பார்வை சீரழிந்து விட்டது என்பதா? அல்லது அதுவே தான் அவருக்கு இதுவரைக் காலமும் இருந்து வந்த இயங்கியல் ஞானம் என்பதா?

பொதுவாகவே நாட்டார் கதைகளையும் நீதிக் கதைகளையும் பிரித்து நோக்கும் வழக்கம் இலக்கிய ஆய்வு நடைமுறை களில் உள்ளது. ஈசாப் கதைகள் சீனத் துச்சான்றோர் கதைகள் போன்றவை நீதிக்கதைகள் என்ற வகைக்குள் முற்றாக அடங்கக் கூடியன. பஞ்ச தந்திரம், ஜாதகக் கதைகள் போன்ற வற்றிலும் இப்பண்பு மேலோங்கி நிற்பது. நாட்டார் கதைகள் எனப்படுவன பொழுது போக்கு அம்சத்தை வலியுறுத்துவன. நீதி சார்ந்த பண்புகள் இடையிடையே தலை நீட்டினாலும், கதைகளின் பொழுது போக்கு அம்சமே தலையாயது. சில கதைகள் தனிப்பட்டவர்களின் பேரால் அறியப் பட்டாலும், சமூக கதை வழக்கினின்று பெறப்பட்ட கதைகளும் அங்கு இருக்கலாம். மறுபுறம், வாய்மொழி இலக்கியங்களான இவை, சமூக வழக்கினூடு பல மாற்றங்களை உள்வாங்கியும் இருக்கலாம். பட்டி விக்கிரமாதித்தன் கதைகள் முற்றிலும் பொழுது போக்கான கதைகட்கான உதாரணங்களுள் சேரும்.

பெரும் அளவில் சீனத்து நீதிக்கதை களையும் நம் சமகால எழுத்தாளராகக் கருதவேண்டிய லுஷுன் கதையொன்று உட்பட அண்மைக் காலக் கதைகள் சிலவற்றையும் உள்ளடக்கிப் பொழுது போக்குக் கதைகளையும் நீதிக் கதைகளையும் கொண்ட இந்த நூலின் கதைகளின் மூலமொழி அல்லது நாடு, ஆசிரியர் பேர் இருந்தால் ஆசிரியர் பேர் என்பனவற்றைத் தருவதால், (கதைகளின் பொதுமை என எதுவும் இருந்தால்) அந்தப் பொதுமை இல்லாது போகாது. உண்மையில் அது கதைகளின் உள்ளார்ந்த இயல்பை விளங்கிக் கொள்ள மேலும் உதவியிருக்கும். சில கதைகளிலாவது நூலாசிரியரது கைபட்டுள்ளமை அப்பட்டமாகவே தெரிகிறது. அது எவ்வளவு கலைத்து வமான குறுக்கீடு என்பதில் உள்ள கருத்து வேறுபாடுகள் ஒவ்வொருவர் கலை பற்றிக் கொண்டுள்ள பார்வையை ஒட்டியன.

சில இடங்களில், வாக்கியங்கள் மிக விறைப்பாகவும் கதை தெளிவின்றியும் உள்ளன. உதாரணமாக: 50வது கதையின் தொடக்கத்தில்வரும் 30 இறாத்தல் வில்லை எடுத்து வளைக்க முடியாத இளவரசன் முப்பது இறாத்தல் எடையுள்ள வில்லை வளைக்கக் கூடியவன் என்று கதை முடிவில் தோன்றுகிறது. மூலக்கதையைத் தமிழ்ப்படுத்தும் போது கோளாறு நேர்ந்ததோ தெரியவில்லை. 185வது கதையில். "இப்பொழுது எருது தன்னுடைய கழுத்தின் பலத்தை மனத்தில் கொண்டு, இந்த இழிவான அற்ப எதிரியை இகழ்வாகக் கருதிக் கொண்டால் தன்னைத் தொந்தரவு செய்யும் இப் பிராணியைப் பெரிதுபடுத்தி மனப்பிராந்தி கொள்வதெல்லாம் வீணான செயலாகும் என்று எண்ணிக் கொண்டது." இதைக் கட்டுடைத்து விளங்கிக் கொள்ள எனக்கு இயலாமல் உள்ளது. ஒரு கதையின் மொழி பெயர்ப்பில் இப்படிப்பட்ட குழப்பங்கள் நேரலாம். மீளக் கூறும் போது இப்படி நிகழ அவசியம் இல்லையே.

எருதுமாடு, தென்னமரம் போன்ற பதங்களும் தமிழகத்துக்கேயுரிய ஜுவாலை, கபளீகரம் போன்ற சொற்களும் தவிர்க்கத்தக்கன.

முற்குறிப்பிட்ட குறைபாடுகள் சில கதை களையே பாதிப்பன. கூடுதலான செய் நேர்த்தியை எதிர்பார்க்க இடமுண்டு என்பதனாலேயே குறைகளைச் சுட்டிக்காட்ட நேர்ந்தது.

நூலில் உள்ள பல கதைகளில் எசமான விசுவாசம் போற்றுதற்குரிய பண்பாக முன்வைக்கப்படுகிறது. என்னுடைய கழுத்தில் கோடரி விழுவதைவிட நுகத்தடி இருப்பதை நான் விரும்புகிறேன்" என்ற எருதின் பதிலை நீதியாகக் கூறுகிற ஒரு கதையை கால தேச வர்த்தமானங் கடந்த பொதுமைக் கருத்தியலாக முன்வைக்கும் ஒருவர், ஆகமிஞ்சினால், முன்னாள் போராளி யாகவும் முன்னாள் மாக்ஸிய வாதியாகவும் தான் இருக்க முடியும்.

கதைகளில் இழிவான முறையில் சாதிப் பேர் கூறுவது பொதுவாகத் தவிர்க்கப் பட்டாலும், சாதி ஏற்றத் தாழ்வுகளை மறுக்காமல் ஏற்று அவற்றை நியாயப்படுத்தும் கதைகள் பல இத் தொகுப்பில் உள்ளன. முல்லா கதைகள் சீனாவிற்குப் போய் அவாந்தி கதைகள், அப்பெந்தி கதைகள் என்று பலவாறாக அறியப்படுவன. அவற்றுட் சில தெனாலி ராமன் கதைகளுள்ளும் அந்தரே கதைகளுள்ளும் புகுந்துள்ளன என்று நம்ப இடமுண்டு. எனினும், தெனாலி ராமன் கதைகளுள் பார்ப்பனியச் சிந்தனை வலிய இழையாக ஓடுவதைத் தெனாலி ராமன் காளியிடம் வரம் பெற்றது முதல் பல்வேறு தெனாலி ராமன் கதைகளில் காணலாம். இதைக் களையும் முயற்சிகள் தமிழகத்தில் மேற் கொள்ளப்பட்டாலும் பொன்னையன் பார்ப்பனிய வடிவுக்கு விசுவாசமாகவே இருக்கிறார்.

கறுப்பு இனத்தவரை முட்டாள்களாகக் காட்டும் கதை இத்தொகுப்பில் உள்ள தும் வருந்தத் தக்கது. இஸ்லாமிய மத குருமாரை ஏளனஞ்செய்கிற கதைகள் இரண்டு உள்ளன. பெண்களை இழிவுசெய்யும் கதைகளும் உள்ளன.

இந்தக் கதைகளைத் தெரிந்தெடுத்ததற் காக நான் பொன்னையன் மீது பழி சொல்ல முடியாது. ஆனால் இக் கதைகளின் சமூகச் சூழல் கதாசிரியரது சமூகப் பார்வை என்பன தெளிவாகச்




சுட்டிக்காட்டப்பட்டால் கதைகள் வீணான மனவேதனைகட்கு இடந்தரா. இதுவும் அவரது பணியாக இருந்திருக்க வேண்டியதில்லை. மூலக்கதை பற்றிய அடிப்படைத் தகவல்கள், அவை கடக்க முடியாத கால தேச வாத்தமானங்கள். கதையில் மாற்றங்கள் செய்யப்பட்டனவா என்ற தகவல் என்பன போதுமானவையாக இருந்திருக்கும்.

பூகோளமயமாக்கலின் தாக்கத்துக்கு உட்பட்டெ எங்கள் கல்விமுறை திசை திருப்பிய எங்கள் அறிவுத் தேடலை இது போன்ற நூல்கள் மீண்டும் நேர்ப்படுத்தும் என்று எதிர்பார்க்கிறார் நூலாசிரியர். இந்த நூலில் உள்ள கதைகள், கூறும் எசமான விசுவாச விழுமியங்கள். என்.ஜி.ஓ. 'போராட்டங்கட்கு' ஒரு வேளை உதவலாம், மக்கள் போராட்டத் துக்கு அல்ல. கதைகளிற் கணிச மானவை கவனமான மறுவாசிப்புக்கும் விமர்சனத்துக்கும் உரியனவாக உள்ளன. இவற்றில் உள்ள முரண்கள் பற்றிய ஆய்வுக்கு ஒரு தேவை உண்டு. வருந்தத்தக்க விதமாக, இந்த நூலில் ஆசிரியரது குறுக்கீடு, தகவல்களின் தவிர்ப்பும் அதற்குத் தடையாக உள்ளன.

சி. சிவசேகரம்

---

# "இந்துத்துவம் இன்று இந்துசமயம் என்ற போர்வையில் தமது அரசியல் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது"

பதிப்பாசிரியர் எம். பாலாஜி
ஆசிரியர் : ந. இரவீந்திரன்
வெளியீடு : சவுத் விஷன். சென்னை.
பக்கம் : 128
விலை : இந்திய ரூபா 50.00

இன்று படுத்தது உயர்ந்து ஏற்றமடை யும்! உயர்ந்தது இழியும்! இந்து-இந்தப்பதம் தனிமனித ஆத்மார்த்த அனுபவம் சார்ந்ததாயிருந்த எல்லை முழுதாய்த் தகர்ந்து போய் விட்டது. இன்று இந்துத்துவ ஆக்கிரமிப்பு வெறிக்குத் தீனியாகி பாஸிஸக் கொடூர முகம் ஒன்று.

அன்று மக்களைக் கிளர்ந்தெழச் செய்து ஆக்கிரமிப்பாளருக்கு எதிராகப் போராட வழிகாட்டிய காந்தியத்தை எவ்வாறு புரிந்துகொள்வது? அப்போதே சுட்டிக் காட்டப்பட்டது போல அந்த ஆன்மீகத் தேசியத்துக்குள்ளேயே பாஸிஸம் கருக் கூட்டியிருக்கிறது என்ற எச்சரிக்கை சரியானதுதானா?

ஒரு அடையாளப்படுத்தலுக்காக வெளிநாட்டினர் 'இந்துக்கள்' என அழைத்ததாலேயே தமக்குள் போரிட்டுக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான சடங்காசார நெறிகள் இந்துசமயம் என

## இந்துத்துவம் இந்து விடுதலை நெறியும்

ஒன்றுபட்டுவிட முடிந்ததா? தேசிய எழுச்சியில் விடுதலை நெறியாக விளங்கிய இந்து சமயத்துக்குப் பாரம்பரிய வரலாறு உண்டா?

ஆயிரம் சாதிகள், அவை ஒவ்வொன்று க்கும் ஒரு குல தெய்வமும் தனித்த சடங்காசார முறையும் அவையனைத் தும் பிணங்கியும் இணங்கியும் வேற்று மைக்குள் ஒற்றுமைப்பட்டு வாழ்ந்து வந்துள்ளன. இத்தகைய சாதியடிப் படையிலான சமூக உருவாக்கத்தை யும் மறு உருவாக்கத்தையும் நிகழ்த்தியபடி ஒரு வீசியடித்த வரலாறு இங்கே சாத்தியமானது எப்படி? அதற்கான வாழ்க்கைத் தத்துவத்தை வழங்கியதுதானா? இந்து சமயம்?

வர்க்க சமூகக் கட்டமைப்புக்கும் வர்க்க உறவு மாற்றங்களுக்கும் தக்கவாறு இனக்குழுக்குல வாழ்முறையை இசை வாக்கித் தொடர் வகை செய்த தத்துவ நெறி இந்து சமயம்.

இனக் குழுக்கள்தாம் சாதிகள் என்ற புரிதல் இன்று வலுப்பட்டு வருகிறது. இனக்குழுக்களைச் சாதிகளாக மாற்றிய நடைமுறையும் கோட்பாடும் எவை? அவற்றுக்கான சமூக விசை எப்படி இந்து சமயத்துக்கு வாய்த்தது?

ஓராயிரம் கேள்விகள்! அவற்றோடு இந்நூலுக்குள் ஒரு பயணிப்பு. விடை களுங்கூட தேடல் தொடரும்"

இவ்வாறாக இந்நூலின் பின் அட்டையில் கூறப்பட்டுள்ளது.

இந்நூலின் பதிப்புரையில் பதிப்பாசிரியர் எம்.பாலாஜி இந்நூலின் அவசியத்தை நன்றாக விளக்கியுள்ளார்.

"இந்துத்துவம் இன்று இந்து சமயம் என்ற போர்வையில் தங்களது அரசியல் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. அடிப்படையில் இந்த இரண்டிற்குமான வேறுபாட்டைப் புரிந்து கொள்ளத் தவறினால் இந்திய சமூகம் ஒரு அபாயகரமான சூழ்நிலை யை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இந்நூல் இந்து சமயத்தின் பல்வேறு பிரிவுகள் அவற்றின் தோற்றம், வளர்ச்சி, இன்றைய நிலை ஆகியவற்றை ஒரு வரலாற்று பார்வையோடு எடுத்துரைக் கிறது. இவற்றை சாதுரியமாக எப்படி இந்துத்துவம் தனது இலக்குக்காக திருத்திக் கூறுகிறது தன் வசப்படுத்திக் கொள்கிறது. மக்களை திசை திருப்புகிறது என்பதை மிக அருமையாக




விவரிக்கிறது இந்நூல், அறிஞர்கள் பலர் மதச்சார்பின்மை பற்றி புதிய விளக்கங் களும் விரிந்துரைகளும் கொடுத்துவரும் வேளையில் இந்நூல் வெளிவருவது அவ்விவாதத்திற்கு மேலும் பலம் சேர்க்கும் என்பதில் ஐயமில்லை." என்று பாலாஜி குறிப்பிட்டமை கணிப்புக்குரியது. இந்நூல் இருப்பை இழந்த இளந்தலை முறையின் ஒரு பிரதிநிதியாக தன் தேடலைத் தொடர்ந்த அவர்களுக்கும் ஈழப் போராட்டத்திற்கு முனைந்து தங்கள் முகங்களைத் தொலைத்த அனைவருக்கும் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளன.

---

## சமாதானக் குறும்பாக்கள்

அமைதிவழி காணும் ஒரு தீர்வை
நமதிலங்கை நாட்டினுக்காய் நோர்வே
தேடுவதைத் தாங்காதாம்
கேடு செய்ய ஏங்குவதாம்
அமெரிக்கத் தூதரது பார்வை

ரணில் ஆரை சந்திரிகா கேட்டா
ரணில் சொன்ன படிதடையும் போட்டா
போர்முடிவு பேச் சென்று
ஆர் இரந்து கேட்டென்ன
இனி அம்மா மனம்மாற மாட்டா

கன்னடத்து அய்யங்கார் மாமி
தன்மானத் தமிழருக்கோ சாமி
தம்பியைச் சிறைப் பிடித்துக்
கொண்டுவரச் சொன்னபடி
என்றுவரும் பாரதத்தின் ஆமி?

புத்தங் ச ரணங்கச் சாமி
மெத்தப் பி ழைப்படுதேன் சாமி
பித்தம் மிகுந்த லங்கைப்
பிக்குப் பெரமுனைக்கோ
யுத்தங் ச ரணங் கச் சாமி

யாரிரந்து கேட்டாலும், பாலா
பாரதத்தில் கால்பதிக்க ஏலா
தென்னாசியா முழுதும்
தன்னாதிக்கம் அன்றோ
பாரீர் அன்னார் பஞ்ச சீலா

வில்லூண்டிச் குறும்பாவாணர்

---

## தமிழ்த் தேசியமும்

10ம் பக்க தொடர்ச்சி..

தமிழ்த் தலைவர்கள் விடாப்பிடியாய் நின்றனர். கிறிஸ்தவச் செல்வாக்கு தமிழ் த்தலைவர்களை ஆட்டிப் படைத்தது மட்டுமல்ல யாழ் பல்கலைக்கழகத் திறப்பு விழாவைப் பகிஷ்கரித்ததோடு முதலா வது தலைவர் வீட்டுக்கு குண்டெறிந் தமை கண்டு குதூகலமடைந்தனர்.

1984களில் யாழ் நாகவிகாரையை தாக்கியழிப்பதில் யாழ்ப்பாணக் கிறிஸ்தவ செல்வாக்குக்கு உட்பட்ட குண்டர்படை மிகத்தீவிரமாக இயங்கியது.

1990களின் பின்னர் தமிழ்த் தீவிரவாத முத்திரை குத்தியோர் அரசசார்பற்ற நிறுவனங்களினூடாகவும் 'கிறிஸ்ரியன் எயிட்' என்ற பிற நிறுவனங்களினூ டாகவும் கோடிக்கணக்கில் காசு வருவாய் பெற்றனர்.

ஒருபுறத்தில் இந்தியாவையும் இந்து மதத்தையும் அண்டியும் கம்பன் கழகம் போன்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் வளர்ச்சியடைந்தன. மறுபுறத்தில் கிறிஸ்தவ மேற்குலக நிதியில் திருமறைக் கலாமன்றம். அரங்கப் பண்பாட்டுப் பேரவை (TAG) போன்றனவும் இன்னும் பிறவும் ஊட்டம் பெற்றன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சிலர் அமெரிக்கா முதல் அயல் நாடுகளுக்கு தமிழ் தேசிய பண்பாட்டை விளக்க காவடியெடுத்து வருகின்றனர்.

பொங்கு தமிழில் இராணுவத்தின் சப்பாத்து எரிப்பது முதல் 'சிங்கள இராணுவத்தினர் நாற்பதாயிரம் பேரையும் யாழ்ப்பாணத்தில் வெட்டிப் புதைப்போம்' என்ற சமாதானத்தின் பேரில் யுத்த வெறியை விதைக்கின் றனர். சிங்கள-தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் மதவெறியை ஊட்டும் தேசிய அகோரக் காட்சியையும் நிகழ்த்திக் காட்டுவது தமிழ்த் தேசியம் மட்டுமன்றி சகல தேசியவெறிக் கோட்பாட்டாளர் காளலும் நியாயப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்த் தேசியம் மதவெறிக் கூண்டி லிருந்து தப்பிப்பிழைப்பது எப்போது?

மதச்சார்பின்மை என்பது தமிழ்த் தேசிய த்தின் குரலாக மாற வழி பிறக்குமோ?

படிப்பகம்

www.padippakam.com



புதிய பூமி
புதிய பூமி
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 09 மே 2002 பக்கம் 12 விலை 10/- சுழற்சி 47

## உள்ளூராட்சி தேர்தல் சொல்லும் கதைகள்!

**தேர்தல் முடிவுகளை கொண்டு முழுமையாக ஒரு அரசியல் தீர்மானத்துக்கு வருவது முழுமையாக சரியாக இராது/நடந்து முடிந்த தேர்தலில் அடாவடித்தனங்கள் குறையவில்லை. இருந்தும் பேரினவாதத்தை ஐக்கிய பொ.ஐ.மு., ஜே.வி.பி., சிஹல உருமய என்பன மீண்டும் நிராகரிக்கப்பட்டுள்ளன என்பது உண்மையே. உண்மையான இடதுசாரி ஜனநாயக சக்திகளின் ஐக்கியத்தின் அவசியம் மீண்டும் உணர்த்தப்பட்டுள்ளது.**

# கிழக்கில் இயல்புவாழ்க்கையை ஏற்படுத்த முட்டுக்கட்டை

கொக்கட்டிச்சேலை படுகொலைகளையும், மயிலன்தன்னை படுகொலைகளையும் இலங்கை இராணுவத்தினரும், இராணுவ அதிரடிப்படையினருமே புரிந்துள்ளனர். அவ்வாறான பாராம் பரியத்தில் கட்டிவளர்க்கப்பட்ட கிழக்கு மாகாண பாதுகாப்பு படையினருக்கு பயங்கரவாதம் பற்றியும், புலிகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் பற்றியும் பேசவும் அருகதையே கிடையாது. அவர்கள் தமது இராணுவ ஆதிக்கத்தை விட்டுக்கொடுக்கவோ, கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த வோ விரும்பவில்லை. அதனால் புரிந்து ணர்வு ஒப்பந்தப்படி புலிகளை அனுகவும், பொதுமக்களை துன்புறுத்தாமல் இருக்கவும் அவர்காளல் முடியவில்லை.

கிழக்கில் வாகரை கடலில் மினவர்களை தாக்கியதும், பொதுமக்களை எச்சரித்து வருவதும் கிழக்கில் பாதுகாப்பு படையினரின் அராஜகத்தையே காட்கிறது. மீண்டும் போர் வெடிக்கும் என்றும் போர் வெடித்தால் புலிகளுடன் நல்லுறவை கொண்டிருந்த பொது மக்களை பலிவாங்கப் போவதாக கிழக்கு மாகாண பாதுகாப்பு படை அதிகாரி விடுத்து வருகின்றனர். களுவாஞ்சிக்குடி வர்த்தகர்களை சந்தித்தபோது பாதுகாப்பு படை அதிகாரிகள் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். களுவாஞ்சிக்குடி வர்த்தகர்களை சந்தித்தபோது பாதுகாப்பு படை அதிகாரிகள் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் என்ற ரீதியில் மட்டுமன்றி, புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையிலும் பொது மக்களுடன் புலிகள் தொடர்புகொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர். பொதுமக்கள் புலிகளுடன் தொடர்பு கொள்ளக் கூடாது என்ற கட்டுப்பாட்டை விதிப்பது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறுவதாகும். கூட்டங் கூட்டமாக தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்களுடன் தமிழ் இளைஞர்கள் பெரும் எண்ணிக்கையில் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதும். பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதும் கிழக்கு மாகாணத்திலேயே அதிகமாக நடைபெற்றுள்ளன. திட்டமிட்ட பேரினவாத குடியேற்றங்கள் உட்பட இனஒடுக்கல் நடவடிக்கைகள் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுள்ளன.

இவற்றின் உச்சத்திலேயே பேரினவாத இராணுவம் கிழக்கு மாகாணத்தை அதன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து இராணுவ ஆதிக்கத்தை செலுத்திவருகிறது. அங்கு சிவில் நிர்வாகம் ஏற்படுவதை இராணுவ விரும்பவில்லை.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் வெளி உலகுடன் தொடர்புடைய பத்திரிகையாளர்களும். அரச சார்பற்ற நிறுவனங்களும் அதிகம் இருந்த போதும் கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கு அக்கறை செலுத்துவதாக இல்லை. இதில் கூட்டத்தில் கோவிந்தா போடும் நடவடிக்கையால் பயன் ஏற்படாது.

பூரணமாக சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தும் நோக்கில் பரந்தளவில் வெகுஜன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

# 'மனித தோலுரிக்கும்' நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது

சுதந்திரக் கட்சியை விட்டு விலகுபவர்களை அவர்களின் கிராமங்களிலிருந்து அவர்களின் வீடுகளிலிருந்து விரட்டியடிக்க வேண்டும். கிராம மக்களுடன் சேர்ந்து அவர்களை நானும் அடித்துத் துரத்துவேன் என்பது ஜனாதிபதி சந்திரிகாவின் இவ்வாண்டு மேதின செய்தி ஆகும்.

அத்துடன் சுதந்திரக்கட்சியிலிருந்து விலகுபவர் தோலை உரிக்கப் போவதாக அவர் கூறியுள்ளார்.

சுதந்திரக்கட்சியிலிருந்து எற்கனவே வெளியேறியவர்களுக்கு எதிராகவும் 'பலவற்றையும்' செய்யப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா அறிவித்திருந்த போதும் அம்மாதிரி எதனையுமே செய்யவில்லை. செய்ய முடியவில்லை என்பதும் தெளிவானது.

கட்சி மாறுவது புதிய கட்சியமைப்பது என்பதெல்லாம் அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள உரிமைகள் கட்சிமாறும் ஒருவருக்கு எதிராக வேண்டுமென்றால் கட்சி ரீதியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கலாம். அதற்கு மேலாக சென்று தோலை உரிக்கவும், அடித்து துரத்தவும் யாருக்கும் உரிமை கிடையாது. ஜனாதிபதி என்பதால் அவருக்கு அப்படியொரு அதிகாரமும் வழங்கப்பட்டிருக்கவுமில்லை.

சிலர் கருத்து முரண்பாடுகளுக்காக ஒரு அரசியல் கட்சியிலிருந்து விலகி இன்னொரு கட்சியில் சேர்வாளர்கள் புதிய கட்சி அமைப்பாளர்கள். சிலர் சுயநல நோக்கங்களுக்காக ஒரு கட்சியிலிருந்து விலகி இன்னொரு கட்சியில் சேர்வார்கள், இலங்கையில் மேற்படி இரண்டுமே சட்டரீதியாக தடைசெய்யப்பட்ட கட்சி மாறல்களாக இல்லை. பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருப்பவர் ஒரு கட்சியிருந்து.

அவரின் இன்னொரு கட்சியில் சேர்ந்த பிறகும் அவரின் பாராளுமன்ற உறுப்புரிமையை பாதிக்காதவகையில் அவருக்கு பாதுகாப்பளிக்க சட்டத்தில் இடமில்லை. அவ்வாறான ஒரு சட்டத்தை கொண்டுவர ஐ.மு. அரசாங்கம் முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

ஐ.மு. அரசாங்கம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பலத்தை உறுதி செய்து கொள்வதற்காக முயற்சிக்கிறது. அச்சட்டம் கொண்டு வரப்பட்டால் ஐ.தே.கட்சியிலிருந்து பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் உறுப்பினர்கள் மாறலாம்: பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து ஐ.தே. கட்சிக்கும் மாறலாம்.

அச்சட்டம் கொண்டுவரப்படாமலும் உறுப்பினர்கள் கட்சி மாறலாம். ஏதாவதொரு முக்கிய விடயத்தில் தங்களது கட்சிகளுக்கு எதிரகவும் வாக்களிக்கலாம். சுதந்தரக்கட்சியை சேர்ந்த 20 பாராறுமன்ற உறுப்பினர்கள் ஐ.மு.அரசாங்கத்துடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைப்பதந்கு உதவப் போவதாக முன்னாள் அமைச்சர் பௌசி விடப்படும் சவாலாகவே இருக்கிறது. ரணில் எடுத்துவரும் சமாதான முயற்சிகளுக்கு எதிரான ஜனாதிபதியின் நிலைப்பாடு காரணமாகவும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுஜன ஐக்கிய முன்ணனியிலிருந்து விலகிப்போவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

அவர்களுடைய தோலை எல்லாம் உரிக்கப் போவதாக ஜனாதிபதி கூறியுள்ளார். இது அவரின் ஜனநாயக விரோத, நிலப்பிரபுத்துவ மேலாண்மையின் நிலைப்பாட்டையே காட்டுகிறது. முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சி முறைமையில் கட்சித் தாவல்கள் எல்லாம் சகஜமானவை அதனை ஏற்றுக்கொள்ள முடியா விட்டால் எவ்வாறு அம்முறைமைக்கு தலைமை தாங்குவது..?

மனித தோலுரிப்பது என்பது ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களில் ஒன்றல்ல. அவர் ஜனநாயக வழிமுறைகளுக்கும், சமாதான நடவடிக்கைகளுக்கும் வழிவிட்டு ஒதுங்கிக்கொள்வதே பொருத்தமானதாக இருக்கும்.

# தெல்தோட்டை மலைமகள் மகா வித்தியாலயத்திற்கு நிரந்தர அதிபர் நியமிப்புக்கு அரசியல்வாதி முட்டுக்கட்டை

மேடைகள் தோறும் மலையகக் கல்வியை உச்சரிக்காத அரசியல்வாதிகளே இல்லை. ஆனால் பாடசாலைகளிலுள்ள குறைபாடுகள் பற்றி கவனிக்காமல் இருப்பது மட்டுமன்றி பாடசாலைகள் சுமூகமாக இயங்குவதற்கும் ஆசிரியர்கள் சுதந்திரமாக இயங்குவதற்கும் தடையாகவே இருந்து வருகிறது.

கண்டி தெல்தோட்டை மலைமகள் மகா வித்தியாலயத்திற்கு நிரந்தர அதிபர் ஒருவரை நியமிப்பதற்கு கண்டி பிரதேச தமிழ் அரசியல்வாதியொருவர் முட்டுக்கட்டையாக இருந்து வருகிறார். நிரந்தர அதிபரொருவரை நியமிக்க கண்டி கல்வி அலுவலகம் முடிவெடுத்துள்ள போதும், நியமிக்கப்படவுள்ளவர் தனது அரசியல் வேலைகளுக்கு பக்கபலமாக இருக்க மாட்டார் என்பதனால் அவரை நியமிக்க வேண்டாம் என்று கண்டி கல்வி அலுவலகத்தை கேட்டுள்ளதாக தெரிகிறது.

அவ்வித்தியாலயத்தில் தற்போது பதில் அதிபராக கடமையாற்றுவர் அதிபர் தர உயர்வை பெறாதவர் என்பதுடன் அவர் தொடர்ந்து அதிபராக இருக்க விருப்பம் கொண்டிருக்கவும் இல்லை. இந்நிலையில் அப்பகுதியில் வசிக்கும் அதிபர் தர தகுதிகளை கொண்ட ஒருவரை அப்பகுதி மக்கள் விரும்புகின்றனர். அவரை நியமிக்க கண்டி கல்வி அலுவலகமும் தயாராக இருக்கிறது. குறிப்பிட்ட அரசியல்வாதி அதற்கு முட்டுக்கட்டையாக இருப்பதால் அப்பாடசாலைக்கு நிரந்தர அதிபர் ஒருவர் நியமிக்கப்படாது பாடசாலையை சுமுகமாக நடத்த முடியாமல் இருக்கிறது. ஆசிரியர்கள் கலவை தெரிவிக்கின்றனர்.

ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் படிக்கும் அப்பாடசாலை இதுவரைள 35 ஆசிரியர்களை உருவாக்கியுள்ளதாகவும் இவ்வருடம் க.பொ.த. உயிர்த் தரத்துக்கு 80 பேர் தகுதியானவர்களாக சித்தி யடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கம் நிரந்தர அதிபர் நியமனம் கவலைக்குரியது.

# ஒரு கடிதம்

# மாவை சேனாதிராசா அண்ணருக்கு!

நீங்கள் தமிழரசு-தமிழ்க் கூட்டணி பாசறையில் வளர்ந்தவர். சிறை சென்று திரும்பிய 42தமிழ் இளைஞர்களில் ஒருவர். தந்தை செல்வாவின் தொகுதியில் பிறந்து வளர்ந்து தந்தைக்கு மேலாக எதையும் சிந்திக்காத மைந்தனாக இருந்து வருகிறீர்கள். அண்ணன் அமிருக்கும் அக்கா மங்கையற்கரசிக்கும் விசுவாசம் காட்டி வந்ததால் உங்களுக்கு பாராளுமன்றப் பதவி வந்து சேர்ந்தது. இதெல்லாம் நீண்ட பழங்கதை. நிற்க

கடந்த மேதினம் யாழ்ப்பாணத்தில் மூன்று இடங்களில் நடைபெற்றது. ஒன்று தொழிற்சங்க வெகுஜன அமைப்புகளின் ஒன்று பட்ட மேதினம் இரண்டாவது புதிய ஜனநாயக கட்சியின் மேதினம் மூன்றாவது தொழிற்சங்கங்ளின் கூட்டுக் கமிட்டி மேதினம் இதில் முதலாவது மே தினத்தில் நீங்கள் உரையாற்றினீர்கள். அதில் புதிய ஜனநாயக கட்சியின் வட பிரதேச செயலாளர் கா. கதிர்காமநாதனும் உரையாற்றி ஐக்கியத்தையும் தென்னிலங்கை இடதுசாரி ஜனநாயக சக்திகளின் ஆதரவையும் தமிழர் போராட்டத்திற்குப் பெற வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

அடுத்துப் பேசிய உங்களுக்கு ஏன் தான் கோப உணர்ச்சி வந்ததோ செய்த தவறுகளை எல்லாம் மேதின மேடையில் கொட்டி நேர்மையான இடதுசாரிகளையும் ஒட்டு மொத்தமாக அல்லவா திட்டிக்கொண்டீர்கள். ஏன் உங்களுக்கு இந்த வக்கிரம். புதிய ஜனநாயக கட்சி பற்றி உங்களுக்கு தெரியாததல்ல. அதன் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டப் பாரம்பரியம் பற்றி அறியாதவர் அல்ல. புதிய ஜனநாயக கட்சியின் தலைவர்களான தோழர்கள் சி.கா.செந்திவேல், இ.தம்பையா, சோ.தேவராஜா பற்றி நன்கு அறிந்தவர் நீங்கள். அப்படி இருந்தும் வேறு எந்த இடதுசாரிக் கட்சியும் அவ்விடத்தில் இல்லாத போது ஏன் இத்தகைய அவதூறுப் பேச்சு நிகழ்த்னீர்கள். உங்களிடமாவது சிறிது அரசியல் நேர்மை இருக்கும் என எதிர்பார்த்த என் போன்றவருக்கு அமிரின் திமிர்த்தனப் பேச்சின் நினைவுகள் தான் கண்முன் வந்தது. இடதுசாரி விரோதம் உங்களது பதவிக்கு நன்றுதான். ஆனால் மக்களது விடுதலைக்கு உதவ மாட்டாது.

**காண்டீபன்**

# நானும் பொம்மை நீயும் பொம்மை

*நான் தான் நீ. நீ தான் நான்*
*அவர்தான் நான் அவர்தான் நீ*
*தான்தான் நீ. தான்தான் நான்*
*தத்தீம் தோம்! தகதீம் தோம்!*

*நான்தான் அவர். அவர்தான் நான்*
*என் கண் உன் கண் அவர்கண் எம்மண்*
*உன் மண் என் மண் அவர்கள் தம்மண்*
*கண் மண் தகதோம் எம்மண் தித்தோம்.*

*என் குரல் அவர் குரல் எம்குரல் பிறர்குரல்*
*என் குரல் அவர் குரல் எம்தரல் பிறர்தரல்*
*உன் குரல் என் குரல் எம்குரல் எம்குரல்*
*எம் நிரல் அவர் நிரல் எல்லாம் அரகர!!*

**ஈழத்துத்தேவன் பூதனார்**

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிபு யூகே. பிரின்டஸ் 98A, விவேகானந்தா மேடு, கொழும்பு 13.

படிப்பகம்